Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 20
24-30.ஒக்.1993 ரூபா 8/50
දිනමුරසු වාරමලර්

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 22



## கரும்புலிகள் குறியில் கருணாநிதியா?

தமிழர் அரசியலில் மற்றுமொரு சறுக்கல்! எக்ஸ்ரே ரிப்போர்ட்



பட்டினி கிடப்போரை படை பலத்தால் அடக்க முடியுமா?

அலசுகிறார் இராஜதந்திரி

எந்தக் குழந்தை வேண்டும் ஆணா? பெண்ணா?

மருத்துவ விந்தை



பாப்பா முரசு

உலக ரவுண்டப்

லேடீஸ் ஸ்பெஷல்

தையல் + மையல்

இலக்கிய நயம்

ஒற்றனின்

நகர ரவுண்டப்

## அட்டகாசமான சினிவிசிட்
## ஆச்சரியமான தகவல் பெட்டி

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வெளிநாடுகளில்
தஞ்சம் தேடிச் சென்ற தமிழர்கள்
தாக்கப்படுகிறார்கள்,
தீமூட்டி எரிக்கப்படுகிறார்கள்
என்கின்ற செய்திகள்
வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுகின்றன.

ஜெர்மனியில் நிலமைகள்
மோசமாகி வருகின்றன.
இலங்கைத் தமிழர்கள் மீது மட்டுமல்ல
பொதுவாக வெளிநாட்டவர்கள் மீது
வெறுப்புக்கொண்ட குழுவொன்று
பொறுப்பற்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறது.
ஹிட்லரின் கொள்கைகளை மீண்டும்
உயிர்ப்பித்துக்கொண்டிருக்கிறது.
எப்படியோ-
எங்கு போனாலும்
இனவாதமும்- வன்முறையும்
இலங்கைத் தமிழர்களை
நிழல்போல தொடர்கிறது.
நிம்மதியைப் பறிக்கிறது.

ஜெர்மனியில் மட்டுமல்ல
வேறு பல நாடுகளிலும்
அந்நிய எதிர்ப்புக் கோசங்கள்
முகம் காட்டத் தொடங்கியிருக்கின்றன.
நம்மவர்கள் அச்சத்துடன்
அங்கு வாழும் நிலமை!

சொந்தமண் தொடர் போரில்
சிவந்த மண்ணாகப் போனதால்
கசந்த மனதோடு
வெளியேறிப் போனவர்கள்
சொந்த மண்ணை தொடர்ந்தும்
பிரிந்திருப்பதில்
சோகம் நிரம்பியவர்களாகவே இருக்கின்றனர்.

எனினும்- இப்போது திரும்பிவர
இங்குள்ள சூழல்கள் இடம் கொடாது.

யார் மீதும் நம்பிக்கை கொள்ள முடியாத
உத்தரவாதமற்ற சூழலில்
யாரை நம்பி அவர்கள்
இங்கு திரும்பி வர முடியும்?

"விதியே விதியே
என்ன செய்ய நினைத்துவிட்டாய்
எங்கள் தமிழ் சாதியை?"
என்று வேதனைக் கண்ணீரும்
விரக்திப் புலம்பலுமே
தினசரி நிகழ்வுகளாகி விட்டன.

எரியும் பிரச்சனைகளுக்கு
தீர்வுகள் இதுவரை தெரியவில்லை.

எங்கும் தமிழர்கள் மட்டும்
எரிந்து கொண்டிருக்கிறார்கள்.

■

வெளிநாடுகளில் முரசு கண்டு
முகம் மலர்ந்து, விருப்புக் கொண்டு
மடல்கள் அனுப்பி வைத்து
சந்தோசத்தைப் பகிர்ந்து கொண்டுள்ள
அன்பு நெஞ்சங்களுக்கு நன்றி.

இங்கிருந்து வெளிநாடு செல்லும்
முரசு வாசக நெஞ்சங்கள்
அங்கிருந்து முரசைக் காண்பது
எவ்வாறு? என்று மடல் வழியே
வினாக்குறி எழுப்பியிருக்கிறார்கள்.

வெளிநாடுகள் பலவற்றுக்கும்
முரசு சென்று கொண்டிருக்கிறது.
எனவே நீங்கள் செல்லும் நாட்டிலும்
முரசு வந்து முகம் காட்டும்.
அதில் ஏதாவது தடைகள்-தாமதங்கள்
சிரமங்கள் என்றால் எம்மோடு
தொடர்பு கொள்ளுங்கள்.
முரசு உங்கள் கரம் வந்து சேர
நிச்சயம் ஆவன செய்வோம்.

■

மீண்டும் மறு மடலில்
வந்து கலக்கும் வரை

அன்புடன்
ஆசிரியர்.

## அட... கமரா உலா!
## நீங்கள் ரெடியா?

உங்களிடம் கமரா இருக்கிறதா? இருந்தால் இப்போதே புறப்படுங்கள். உங்கள் சூழலில் கண்ணில்படும் வியப்பான- வித்தியாசமான காட்சிகளை கமராச் சிறைக்குள் மடக்குங்கள். பத்திரமாய் எமக்கு அனுப்புங்கள். சிறந்தவை பின் அட்டையில் 'அட..... கமரா உலா' பகுதியில் இடம்பெறும். கலர் படங்களே விரும்பப்படுகின்றன. முகவரி-

அட...கமரா உலா!
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-5.

கடல் கடந்து வந்த கடிதங்களில்- இடம் பிடிக்கும் சில கடிதங்கள்

அன்பின் முரசே...

உயிர் துறந்த தியாகி திலீபனின் நினைவுத் தினத்தை, யாழ்ப்பாணத்தில் 12 நாட்கள் புலிகள் அமைப்பினர் அனுஷ்டித்துள்ளதை பார்க்கும் போது, மிகவும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. ஏன் என்றால், அந்த அகிம்சை விரும்பியான அவன் மரணத்தோடு போராடிக்கொண்டிருந்த வேளையில் மருத்துவ உதவிகளை செய்து, உயிரை காப்பாற்ற முயற்சி செய்யாதவர்கள் இன்று இறந்து போன, அவன் பெயரை வைத்து இயக்கத்துக்கு புகழ் தேட முயற்சிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? நீயே சொல்.

M.M.M. HUSSAIN-MANAMA 314- BAHARAIN

•

தினமுரசு பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு
தங்களின் பத்திரிகை சுவிற்சலாந்தில் கிடைக்கக்கூடியதாக இருந்தது.


தினமுரசு போன்: 820265


## கவிதைப்போட்டி இல-19

வந்து குவிந்தவற்றில் பரிசு தட்டிக் கொண்டதுவும் பாராட்டுப் பெற்றுக் கொண்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

பாட்டி!
உனக்கும்
நம் நாட்டு
அமைதியின் நிலைதான்!!

முத்துக்குமார் ரமேஷ்
அலுத்மாவத்தை வீதி,
கொழும்பு-15.

### பாராட்டுப்பெறும் கவிதைகள்

**சுமை**

"இளமைத் துடிப்பில்
உன்னை சுமந்தவள்
முதுமை முடிவில்
உனக்காகச் சுமக்கிறாள்."

ராதை மணாளன்
உடபுசல்லாவ.

நவீன
ஜனநாயகத்தின்
புதிய சின்னம்?

கலா. முகம்மது நவாஸ்
கிண்ணியா-5.

**நியதி**

வயதின்
வரையறையை
உடலின்
உறுதி
வென்றுவிட்டது.

எம்.டி.எம். சைலாஸ்
கம்மல்துறை.

**சுமை**

இச்சுமையை நான்
சுமப்பேன்
மனச்சுமையை யார்
சுமப்பார்!

அஸ்மியா அன்வர்
கண்டி.



வயிற்றுச் சுமையை
போக்குவதற்கு
முதுகுச் சுமைதான்
வேதனமா?

செ. யேசுதாஸ்
மட்டக்களப்பு.

**மறதி**

மனிதர்கள்
மறந்து போனார்கள்
சுகமாய்ப் போய்ச் சேர
மரணமும் கூட
மறந்து போனது.

எல்.கே. நாதன்
லங்கா கொமியுனிகேசன்.

**கேள்விக் குறிகள்**


சுகமான
சுமைகளல்ல-இவை..
என்னைப் போலவே
என் வாழ்க்கையும்
கேள்விக் குறியாய்..
விடைதரப் போவது
மனிதமா?தெய்வமா?

ஷர்மி-கண்டி.

பவுண் கட்ட
வழியின்றி
பலிக்களத்தில்
பொதி சுமக்கும்
வட பகுதி
அன்னையோ!

எஸ்.ஏ.வாணன்
கொழும்பு-12.

## கவிதைப் போட்டி இல-22



*உணர்வுகளில் உருவாகும் எண்ணங்களைத் தபாலட்டையில் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி-30.10.93.*

-முகவரி-
கவிதைப் போட்டி இல:22
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5

நீ குனிந்து கொண்டதால்
வறுமை நிமிர்ந்து கொண்டதோ?

செ. கிறிஸ்ரினா
சின்ன உப்போடை-மட்டக்களப்பு.

**சுமை**

முதுமைச் சுமை
போதாதென்றா
முதுகிலும் சுமை?

எஸ்.ரீ.எம். பஸ்வாக்
கல்முனை-5.

ஒழுகிக்
கொண்டிருக்கிறது
உயிர்;
மரணமே
என்னிடம்
ஓடிவா!

பாத்திமா ஷானா
ஆலம்குளம்-17.

**பட்ட மரம்**

வாழ்வா, சாவா
போராட்டத்தின்
விளிம்பில் ஒரு
பட்ட மரம்!

எப்.சீ. லேகா
கொழும்பு-13.

**என்றுதான்...?**

ஜனநாயகம் மரணிக்க
மனிதாபிமானம் சிறகொடிய,
வளைந்தது, வறுமையில் முதுகெலும்பு
என்றுதான் நிமிருமோ?
மனிதநேயம்!

செல்வன் மு. நவநீதன்
எந்தளை-வத்தளை.

**சுமைகள்**

தாயே
நெஞ்சிலும் சுமை
முதுகிலும் சுமை- நின்று
நிமிர்வது எப்போது?

றொபினா கைராஸ்.

**சாதனையோ**

ஜனநாயக நாட்டு
சரித்திரத்தில்..
இதுவும் ஒரு
சாதனையோ..?

திருமதி வளர்மதி மூர்த்தி
நமுனுகல.

**கொடூரம்**

கின்னஸில்
எழுதப்படாத
கொடூரமான
சாதனை.

ப. ரமேஸ்
மட்டுநகர்.

**ஆசை**

மன்னித்துவிடு தாயே!
மறுபிறவி என்றிருந்தால்
உன்
மகனாகப் பிறக்க
ஆசைப்படுகிறேன்.

செ. ஆனந்தராஜா
கொழும்பு-11.

**ஏழை**

அணுப்போர் நடத்தி
அழிகின்ற உலகில்
பிணிப்போர் நடத்தி
பிணமாகும் ஏழை!

கிருஷ்ணபிள்ளை மோகனராசா
மீராவோடை.

**தீராதோ சோகம்!**

மூதாட்டியே! உன்
முதுகெலும்பை
ஒடித்தோ..
யுத்தக்களத்திலொரு
வெற்றிக்கொடி
நடுகின்றார்கள்...?

து. கலைவாணி
எந்தளை-வத்தளை.

**பாசிசக் கட்டளை**

முதியோரை முறி
எளியோரை வருத்து.

எம். ஆர். ஜேம்ஸ்-மட்டக்களப்பு.

"வாடிய நாரில் மலரைத் தொடுக்கும் உலகம்
வாடிய மலரை நாரில் தொடுக்க மறுக்கும்."

ஐனுல் ஹாதிலா-கொழும்பு-12.


தினமுரசில்
விளம்பரம் செய்யுங்கள்
வியாபாரத்தைப்
பெருக்குங்கள்


மிக்க மகிழ்ச்சி கொண்டோம். தினமுரசு மேலும். மேலும் வளர எங்கள் வாழ்த்துக்கள்.

N.S. UTHAYA KUMAR
AM WASSER. 138
ZURICH. 8049-SWITZERLAND.

•

அன்புள்ள ஆசிரியருக்கு நான் இங்கு குறிப்பிட்ட விலாசத்தில் சில வருடங்களாக பணி புரிகின்றேன். இங்கு உங்கள் பத்திரிகை சில நண்பர்கள் மூலமாக கிடைக்கப் பெற்றேன். அதைப் பார்த்ததில் இருந்து ஒவ்வொரு வாரமும் உங்கள் பத்திரிகையை பார்க்க வேண்டும் என்னும் ஆவல் உள்ளது. தயவு செய்து எனக்கு வாரம் தோறும் அனுப்ப முடியுமா? அதற்குரிய சந்தாபணம் 1 வருடம் எவ்வளவு என்பதை அறிவித்தால் உங்கள் வங்கி கணக்கு இலக்கத்திற்கு என்னால் பணம் காசோலையாக அனுப்ப முடியும். இது விடயமாக பதில் அனுப்ப தேவைப்படும் பணம், சவூதி றியால் 5 உள்ளது. சிரமத்தை பார்க்காமல் எனது ஆவலை நிவர்த்தி செய்ய உடன் ஏற்பாடு செய்யவும்.

M.S.M. ASHRAF
SAUDIOGER LTD-POST BOX 30231
YANBU AL- SINAIYAH
K. S. A

•

அன்புடன் ஆசிரியருக்கு,


நான் 1992-09-01ல் தொழில் வாய்ப்புப்பெற்று சவூதி அரேபியா வந்தேன். ஆனால் இங்கு வந்தபின் தான் அறிந்தேன். தினமுரசு என்ற இனிமையான, இதமான, சிறுவர் முதல் குமரி வரை, குமரிமுதல் -பாட்டிவரை, சின்னவர், பெரியவர்கள் வரை விரும்பி தாம் விரும்பும் பகுதிகள் அதில் வரும் என வாரந்தோறும் எதிர்பார்த்து ஞாயிறு நாளில் நடு றோட்டில் நின்று நானொன்று நீயொன்று என முண்டியடித்துக் கொண்டு வாங்கிப்படித்து பயன்பெறுவதாக எனது சகோதரர் எனக்கு அனுப்பிய மடல் மூலமும் எனக்கு அனுப்பிய பத்திரிகை மூலமும் அறிந்து கொண்டேன். இப்பத்திரிகை பல கிளைகள் விட்டு பல்லாண்டுகாலம் நிலைத்திருக்க என் வாழ்த்துக்கள்.

M.I.A. AZIZ
P.O BOX- 5510-JEDDAH-21432-K. S. A

•

# வாசக(ர்)சாலை

பா.ரமணி-திருகோணமலை, என்.டயஸ்-பெரிய நீலாவணை-01, ஆர்.நல்லுசாமி- அக்கரப்பத்தனை, செல்வி.பிரமிளாகுமார்- கொலன்னாவ, திருமதி. மலர்விழிகார்த்திகேசன்- வவுனியா, சீ.செல்வநாயகம்-கொழும்பு-15, மு.சிவநாதன்-கொழும்பு-11, செ. செந்தமிழ்ச் செல்வன்- கொழும்பு-6, கே.செல்வராஜ்- வெள்ளம்பிட்டிய, ஆயிஸா முகமட்-மூதூர்-03, மா.தங்கேஸ்வரி- ஆரையம்பதி, எம்.அமிர்தராஜா-மஸ்கெலியா, செல்வி.ஷிபியாஹஸன்- மாத்தறை, செல்வி. நல்லமுத்து சரஸ்வதி-நோர்வூட், என்.சிவா- அளவத்துகொட, செல்வி. ராமசுவாமி பவானி-கோட்லோஜ் எஸ்டேட், செல்வி.நிர்மலா முருகையா-பண்டாரவளை, ஆர்.வாசு-இராகலை, ஷஹிர்ஷா தாஸிம்-தர்கா நகர், எஸ்.தேவதாஸன்-நயினாதீவு, செல்வி. இராணுமா நந்தினி-களுவாஞ்சிக்குடி, ஏ.எஸ்.ஏ.ஏ. ஸலாம்- பாலமுனை, செல்வன் பாரிஸ்- சுவர்சையித்திய ரோட், ஏ. ஆயிஷா-ஏறாவூர்-01, மொஹமட் பசூல்-உலப்பனை, எம்.எஸ்.எம். ராசிக்-வரக்காமுறை, எஸ்.எம்.ஏ.றஸாக்- காத்தான்குடி, ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி, எஸ்.எஸ் சு.:.பான்-அட்டாளைச்சேனை-03, முகம்மட் எஸ்.றபியுதீன்-வாழைச்சேனை, செல்வி. பௌசுல் தஸீமா தாஹா-தெல்தோட்ட, வி.ரஞ்சன்-கொழும்பு-04, பஸ்மியா அனஸ்- மக்கொனை, ஆர்.சங்கர்-மூதூர்-03, ஏ.ஜீ. சேகர் அக்கரைப்பற்று-08, செல்வி.நஸீராஜ் சம்சுதீன்- கந்தளாய், எம்.எச்.எம்.இர்பான், கிண்ணியா-01, செல்வி. சிஹாரா தாஸிம்-அகலவத்தை, எஸ்.என்.சுந்தர்-அக்கரப்பத்தனை, பு.இராமச்சந்திரன்-களுத்துறை, முபீனா ஹமீட்- கல்முனை-06, ஆறுமுகம் பத்மாதேவி-கலஹா.



தகவல்களை முரசு தருகிறதோ, அப்பப்பா... முரச்சுக்கு நிகர் முரசு தான்.

அ.தயானந்தன்
நீர்கொழும்பு.

•

சினி விசிட்டில் தமிழக சஞ்சிகைகளில் கூட வராத புத்தம் புதிய செய்திகள் வந்து எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன. வர்ணப்படங்கள் சூப்பர்.

திருமதி திவ்யா ராமச்சந்திரன்
கண்டி.

•

**சாராமல் நோக்கல்**

எந்தவொரு பக்கமும் சாராமல், அரசியல் கண்ணோட்டத்தைத் தரும் ராஜதந்திரிக்கும், நாரதருக்கும் சபாஷ். தொடரட்டும் அலசல்.

மு.விஜயகுமார்-கொழும்பு-7.

•

**பார்த்து நடக்கட்டும்**

தமிழர்களது அரசியல் தரம் தாழ்ந்து போனதையும், பிரதிநிதி ஒருவர் படும் பாட்டையும் அம்பலமாக்கியிருந்த முரசுக்கு பாராட்டுக்கள். இனியாவது பைத்தியங்கள் பார்த்து நடக்கட்டும்.

செல்வி ஆர். ரஞ்சனி-திருகோணமலை.

•

**நியாயமா இது?**

ரசிகன் தரும் கண்ணே மதுமிதா எங்களை சொக்க வைக்கிறாள். அடுத்த வாரம் எப்போது வரும் என்று ஏங்கவைத்து விடுகிறீர்களே! நியாயமா இது?

த.பவானி-ஹட்டன்.

•

தகவல்பெட்டி அற்புதம் எங்கிருந்து திரட்டி இத்தனை

அஸ்வதியின் கதை அருமை. சுரேஷ் வாரா வாரம் புதுமையான கருத்தோடு அசத்தி வருகிறார்.

திறமையானவர்களுக்கு தொடர்ந்தும் களம் தந்து வரும் முரசுக்கு வாழ்த்துக்கள்.

எம்.சியானுதீன்-குருநாகல்.

•

ஏ! தினமுரசு வாரமலரே,
உந்தன் வரவால் எங்கள் முகங்கள் மலர்கின்றதே ஏன்?
நீ சுமந்து வரும் அம்சங்கள் அனைத்தும் சுவையானதே! அதுதான்.
நீ வாழ்க.
நீ வளர்க.

என்.எல். முஸம்மில்-புதிய காத்தான்குடி-06

•

அன்பின் தினமுரசே...!
நீ தாங்கி வரும் தேண்கிண்ணம் மதுகிண்ணமாய் என்னை மயக்கி விடுகிறது.... சிறுகதைகள் உலக நடப்புக்கள் வெரி ஃபன்டாஸ்டிக். வாழ்த்துக்கள் பலகோடி! சென்றவாரம் தான் நான் உன்னை இரண்டாம் முறையாக தொட்டேன். நீ நாளும் பத்திரிகை வானில் சுடர் விட்டு பிரகாசிப்பாயா...? ப்ளீஸ்...

செல்வி. சுஹாதா புஹாரி
கொலன்னாவ.

•

முரசே, பத்திரிகைகளில் நீயே அரசு
பாரினில் நீ எங்களுக்குக் கிடைத்த பரிசு
மொத்தத்தில் நீ நீதி, நேர்மை, நியாயம், நடுநிலைமை எனும் படிக்கற்களை உடைய தராசு.

சுஜீதா ஜபருல்லாஹ்-மன்னார்.

•

வண்ணத்தில் மின்னிடும் வாசமலர்களைத் தன்னகத்தே சுமந்திடும் தினமுரசே! பூக்கூடையும் மணப்பது போல் அனுதினமும் உன்னைச் சுமக்கின்ற என் மனமும் மணக்கிறதே முரசே- சுகந்தமாய்.

செல்வி.எப்.அனுஷா-திஹாரிய.

•

வாரந்தோறும் வண்ண வண்ணமாய், புதுமையாய் பூத்துக் குலுங்குகின்ற முரசே நீ தருகின்ற ஆக்கங்களோ தனித்தேன் சுவைதான். புத்தம் புதிய விடயங்களை அறிமுகப் படுத்துவதில் உனக்கு நிகர் நீயே! குறுகிய கால இடைவெளியில் வாசகர் மனதில் மங்காப் புகழ் படைத்து விட்ட முரசே நீ வாழ்க, வளர்க, உயர்க.

செல்வன்.பெ. ராஜசெல்வம்-மஸ்கெலியா.

•

**ரசிகனின் ரசிகை**

"கண்ணே மதுமிதா"வை;
ரசித்து, ரசித்து எழுதும் ரசிகனே!
அதனை ருசித்து, ருசித்து வாசிக்கும் நான்
உனது எழுத்தின் ரசிகையே.

அன்புடன் ரசிகை
எம்.கே. மம்தா.

# ஜனாதிபதி மீது புலிகள் கண்டனம்!

# ஆயுதப் பயிற்சிக்கு வருமாறு அனைவருக்கும் அழைப்பு!!

## "நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டன சமாதானக் கதவுகள்"

**கடந்த சனிக்கிழமை, 16.10.93 அன்று யாழ்ப்பாணத்தில் 'புலிகளின் குரல்' வானொலியில் முக்கிய அறிக்கை ஒன்றை புலிகள் வெளியிட்டனர்.**

**தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கு உள்ள ஒரே வழி ஆயுதம் ஏந்துவது மட்டுமே என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாகவர டி.பி.விஜேதுங்கா விரும்புகிறார். அதனால் அரசியல் விளையாட்டில் அவர் ஈடுபட்டுவருகிறார்.

சிங்களப் புத்திஜீவிகளும், பத்திரிகைகளும், தொடர்பு சாதனங்களும் தீவிரவாதப் புயலைக் கிளப்பி வருகின்றன.

சமாதானப் பேச்சுக்கள் மூலமோ, சமாதானப் பாதை மூலமோ தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடைக்கும் என்ற கனவை நிரந்தரமாக அழித்துவிட வேண்டும்.

வயது வேறுபாடின்றி ஆயுதப் பயிற்சி பெற அனைவரும் முன்வர வேண்டும்.

எமது தாயகத்தை மீட்டு தனி அரசொன்றை நிறுவுவது மட்டுமே நமக்குள்ள ஒரே வழியாகும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கத்தின் உத்தியோக பூர்வமான பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையிலும் ஆசிரியர் தலையங்கத்தில் மேற்கண்ட கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

சமாதானக் கதவுகள் நிரந்தரமாக மூடப்பட்டு, படையினரின் கரங்கள் பலப்படுத்தப்படுவதாகவும் புலிகள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுகளுக்கு தயார் என்று இதுவரை கூறிவந்த புலிகள் அமைப்பினர் இப்போது முதல் தடவையாக சமாதானப் பேச்சுக்கள் என்பது களை என்று அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் போர்க்கால சூழலைப் பிரதிபலிக்கும் நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் என்பவையும் புலிகள் அமைப்பினரால் பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றன.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் பாணியில் வடக்கின் முக்கிய நகரைக் கைப்பற்றுவதற்கு படையினர் திட்டமிட்டு வருவதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

புத்தாண்டில் தாக்குதல் ஆரம்பமாகலாம் என்றும் புலிகள் அமைப்பினர் கணிப்புத் தெரிவித்துள்ளனர்.

தமது இயக்கத்திற்கு உறுப்பினர்களை சேர்ப்பதற்காகவே புலிகள் அமைப்பினர் அவ்வாறு பிரச்சாரம் செய்துவருவதாக பாதுகாப்புப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அப்படியானால் வடக்கே தற்போது தாக்குதல் ஆரம்பிக்கும் சாத்தியங்கள் இல்லையா என்று கேட்ட போது, "தாக்குதல்கள் தொடரும். ஆனால் புலிகள் கூறுவதுபோல் புத்தாண்டில் தாக்குதல் ஆரம்பிக்கத் திட்டம் என்பதெல்லாம் உண்மையில்லை" என்று அந்த அதிகாரி கூறினார்.

இதே வேளையில் போருக்கு இளம் பெண்களையும், இளைஞர்களையும் அணிதிரளுமாறு கோரும் வாசகங்கள் அடங்கிய ஓவியங்கள் யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

போர் அம்மா, தாயகக்கனவு போன்ற புலிகள் அமைப்பினரால் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களும் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

---

தருவது (தமிழகச் செய்திகள்) ஏழுமலை

## கலைஞரை நோக்கி உயரும் போர்வாள்!

### சூடாகத் தொடரும் தி.மு.க. மோதல்

ராணிப் பேட்டை சட்டமன்றத் தொகுதியிலும், பழனி பாராளுமன்றத் தொகுதியிலும் வெற்றிபெற்ற களிப்பில் தமிழக முதல்வர் ஜெயலலிதா உற்சாகமாக இருக்கிறார்.

புலிகளோடு தொடர்பு வைத்திருந்தவர் என்று கைதுசெய்யப்பட்டு சிறைக்குள் இருந்தவர் சுப்புலட்சுமி ஜெகதீசன்.

அவர் தி.மு.க ஆட்சியில் அமைச்சராகவும் இருந்தவர்.

சிறையில் இருந்தமையால் அனுதாபம் இருக்கும் என்று கருதி பழனித் தொகுதியில் அவரை வேட்பாளராக நிறுத்தினார்கள்.

அவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர்தான் தி.மு.க உட்பூசல் உச்ச நிலையை அடைந்தது.

திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் நாஞ்சில் மனோகரனுக்கு மிக நெருக்கமானவர் என்று கருதப்படுவர்.

நாஞ்சில் மனோகரன் 'கருவின் குற்றம்' என்று கவிதை எழுதி கலைஞர் கருணாநிதியோடு மோதி கட்சியால் வெளியேற்றப்பட்டவர்.

இப்போது வெளியே இருந்தபடியே தி.மு.கவுக்குள் வை. கோபாலசாமி குழுவுக்கு ஆதரவாகப் பேசி வருகிறார்.

எனவே நாஞ்சில் மனோகரனின் நெருக்கமானவராகக் கருதப்பட்ட சுப்புலட்சுமி ஜெகதீசனுக்கு ஆதரவாக தேர்தல் பணி செய்ய கட்சி ஆர்வம் காட்டவில்லை.

அதுமட்டுமல்ல, உட்கட்சி பூசலால் வை. கோபால்சாமிக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் தேர்தல் பணி செய்யப் போதிய வாய்ப்பும் வழங்கப் படவில்லை.

எனவே, எல்லாம் ஜெயலலிதாவுக்கு சாதகமாக அமைந்தன. வெற்றிக்கனி செல்வியின் கரங்களில் வந்து விழுந்தது.

எனினும், கிடைத்த வாக்குகள் என்ற அடிப்படையில் பார்க்கும் போது தி.மு.கவின் செல்வாக்கு உயர்ந்திருப்பதும் செல்வியின் செல்வாக்கு கடந்த தேர்தலை விட குறைந்திருப்பதும் தெரிகிறது.

கலைஞர் கருணாநிதியின் கையில் உள்ள போர்வாள் என்று முன்னர் அழைக்கப்பட்டவர் வை. கோபாலசாமி.

இப்போது அந்தப் போர்வாள் கலைஞரின் குடும்ப ஆதிக்கத்திற்கு எதிராக உயர்ந்திருக்கிறது.

அந்த வாளை வீசியெறிய கலைஞரும் திட்டவட்டமாக முடிவுசெய்துவிட்டதாகவே தெரிகிறது.

இந்திய மத்திய உளவுத்துறை தி.மு.கவை உடைக்கச் சதி செய்கிறது என்றே கலைஞர் கருணாநிதி முன்னர் கூறிவந்தார்.

தி.மு.கவில் இருந்து எம்.ஜி.ஆர் வெளியேற்றப்படக்காரணமாக இருந்தது இந்திய மத்திய உளவுத்துறைதான் என்று கலைஞர் முன்பு கூறியுமிருக்கிறார்.

அப்படியிருக்கும் போது புலிகள் தன்னைக் கொல்ல சதி என்றும், வை. கோபாலசாமி அதற்கு ஆதரவு என்றும் மத்திய உளவுத்துறை சொன்னவுடன் கலைஞர் அதை எப்படி நம்பினார் என்பதே வை.கோபாலசாமி வட்டாரத்தின் கேள்வியாகும்.

அதற்கும் கலைஞர் கருணாநிதி பதில் வைத்திருக்கிறார்.

கடந்த ஒரு வருடமாக வை.கோபாலசாமியின் நடவடிக்கைகள் சரியில்லை. தன்னைப் புகழ்ந்தவர்களை நம்பினார். தி.மு.கவுக்குள் இருந்து வெளியேற்றப்பட்ட நாஞ்சில் மனோகரனை கட்சியில் மீண்டும் சேர்க்குமாறு பகிரங்கக் கூட்டத்தில் பேசினார். சமீபத்தில் ராணிப் பேட்டைத் தேர்தல் பிரச்சாரத்தில் தனது பிரச்சாரவான் தாக்கப்பட்டபோது கோபாலசாமி நேரில்வந்து துக்கம் விசாரிக்கவில்லை.

இப்படிப் பல காரணங்களை கலைஞர் சொல்லியிருக்கிறார்.


இனிச் சமரசத்துக்கே இடமில்லை. கட்சியின் செயற்குழு, பொதுக்குழு இரண்டையும் கூட்டுங்கள் என்று வை.கோபாலசாமி கோரிவருகிறார்.


கட்சியின் தலைமையகமான சென்னையில் உள்ள அண்ணா அறிவாலயத்தை கோபாலசாமி வட்டாரம் கைப்பற்றக்கூடும் என்று ஒரு செய்தி பரவியது.

அப்படி ஒரு பிரச்சனை வந்தால் அந்த அலுவலகத்தை சீல் வைத்துப் பூட்டிவிட்டு நீதிமன்றத்தில் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளுமாறு சொல்வதற்கு தமிழக அரசு தயாராக இருக்கிறது.

முன்னர் தி.மு.க ஆட்சியில் இருந்த போது அ.தி.மு.க தலைமையகத்தை பூட்டிச் சீல்வைத்த விசயத்தை செல்வி மறக்கவில்லை.

கலைஞர் வை.கோபாலசாமி தானாக விலகட்டும் என்று எதிர்பார்க்கிறார். "நாமாக வெளியேற்றினால் அதனால் அவருக்கு அனுதாபம் ஏற்பட்டுவிடும்" என்று நினைக்கிறார்.





ஆனால் வை.கோபாலசாமி தானாக வெளியேறத் தயாரில்லை. "கடைசிவரை உள்ளே இருந்தே போராடுவேன்" என்கிறார்.

அறிக்கை மோதல்கள் சூடு பறக்கின்றன. இதற்கிடையே கோபாலசாமியை துரோகி என்று சொன்னதற்காக கட்சித் தொண்டர் ஒருவர் தீக்குளித்து மாண்டு போனார்.

"தமிழீழக் கோரிக்கையை தான் ஆதரிக்கவில்லை" என்று கலைஞர் சொல்ல, "தமிழீழக் கோரிக்கையை தி.மு.க முன்னரே ஆதரித்துவிட்டது என்று வை.கோபாலசாமி அறிக்கை விட்டுள்ளார்.

'காங்கிரஸ்-தி.மு.க உறவு எற்படப் போவதாகவும், அதற்கு குறுக்கே நிற்கக்கூடும் என்பதால் வை.கோபாலசாமியை தூக்கி எறியப் பார்க்கிறார்கள்' என்றும் ஒரு சாரார் பேசுகின்றனர்.

எப்படியோ கலைஞரின் 'கையில் இருந்த போர்வாள் இப்போது அவரை நோக்கியே உயர்ந்துவிட்டது.

---

சின்னக் கண்ணோட்டம்

## கொழும்புப் பல்கலைக்கழக ஒன்றுகூடல் வைபவம்

(எம். சுரேஸ்)

அண்மையில் கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் வைபவம் பல்கலைக்கழகத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அண்மைய ஆண்டுகளில் தமிழ் பேசும் மாணவர்கள் அதிகமாக கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர்ந்ததால் உண்மையில் இந்த ஒன்றுகூடல் வைபவம் இரு இனங்களுக்குமிடையிலான புரிந்துணர்வையும், சேர்ந்து செயற்படும் தன்மையையும் வளர்க்கும் ஒரு முயற்சியாகவே தென்பட்டது.

"தமிழ்ச்சங்கம்" என்பது மொழியின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட சங்கம். ஒரே மொழி பேசும் முஸ்லிம், தமிழ் மக்களிடையே பேதங்கள் இல்லை, வாருங்கள் கைகோர்த்து நடப்போம் " என்பதைப்போல் தமிழ், முஸ்லிம் மாணவ, மாணவிகள் இணைந்து செயற்பட்டமை ஒரு புதிய உத்வேகத்தை - எழுச்சியை மனதில் உண்டாக்கியது.

தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. ரவிந்திரன் தலைமையில், அவரின் உரையோடு ஆரம்பமான கலை நிகழ்ச்சிகளிலும், தமிழ்-முஸ்லிம் மாணவர்கள் ஒன்றிணைந்து கலை வளர்த்தனர்.

முதலாம் வருட சட்டபீட மாணவர்கள் 'பைசாலின்' தலைமையில் வழங்கிய கதம்ப நிகழ்ச்சி சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது. இரண்டாம் வருட வர்த்தகப் பிரிவு மாணவர்கள் வழங்கிய "கற்பனையும் நகைச்சுவையும்" மண்டபத்தைக் கலகலப்பாக்கியது.

சட்டபீட மாணவி செல்வி ரம்யாவின் பாடலோடு ஆரம்பமான திரையிசை நிகழ்ச்சியில் ஆனந்தன், பர்வீன், முனாஸ், நாவேந்தன், இப்திகார் ஆகியோர் பாடினர். ஏயெம்.தாஜ், அப்துல்லா ஆகியோரும் தமது பெயரைச் சிறப்பாகக் குறிப்பிடும் படி(யாக) அருமையாகப் பாடினர்!

மற்றும் கைலாசமூர்த்தி, தயாபரன், யோகன் ஆகியோரும் கதம்ப நிகழ்ச்சிகளை வழங்கினர். இங்கே கலை நிகழ்ச்சிகள் நடந்தது என்பதை விட இரு இனங்களின் நெருங்கிய செயற்பாட்டுக்கு கலை நிகழ்ச்சிகள் உதவி புரிந்தன என்று கூறினால் அது மிகையில்லை.

---

## மட்டு. மாவட்டத்தில் ஜனசவிய வேலைத்திட்டங்கள்

(வாழைச்சேனை நிருபர்)

மட்டு. மாவட்டத்தில் உள்ள காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களுக்கு கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் கீழ் உள்ள ஜனசக்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நான்கு அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்படவுள்ளன.

மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப்.ஹிஸ்புல்லா அவர்கள், ஜனசக்தி நிதிய நிருவாக இயக்குநர் சரித்த ரத்வத்த அவர்களை சந்தித்து கேட்டுக்கொண்டதன் பேரில் இத்திட்டம் சுமார் 25 இலட்சம் ரூபா செலவில் அமுல் செய்யப்படவிருக்கின்றது.

வாழைச்சேனை பிரதேசத்திற்கு நான்கு ஆரம்பப் பாடசாலைகளும், ஏறாவூர் பிரதேசத்திற்கு குடிநீர் விநியோகம், வீதி நிர்மாணிப்பு, சந்தைத் தொகுதி போன்றவையும், காத்தான்குடி பிரதேசத்திற்கு நான்கு ஆரம்பப்பாடசாலைக் கட்டிடங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

---

## வெளியேற்றப்பட்ட அகதிகள்!

### சொந்தப்பகுதிகளில் குடியேற அச்சம்!!

கொழும்பு முகத்துவாரம் அகதி முகாம் திடீரென்று மூடப்பட்டது. அங்கிருந்த அகதிகள் மட்டக்களப்புக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

தமது சொந்த இடங்களில் சென்று அவர்கள் குடியேற வேண்டும் என்று கூறப்பட்ட போதும் தற்போதைய சூழ்நிலையில் சொந்தப்பகுதிகளுக்குச் செல்ல பலர் அஞ்சுகின்றனர்.

கொழும்பில் புலிகள் அமைப்பினரின் ஊடுருவல் பற்றிய தகவல்களையடுத்து அகதி முகாம்களும் அவசரமாக மூடப்பட்டுவிட்டன.

தற்போது கொழும்பு பம்பலப்பிட்டியில் சரஸ்வதி மண்டபத்தில் மட்டுமே ஒரேயொரு தமிழ் அகதிமுகாம் இயங்கி வருகிறது. அதுவும் விரைவில் மூடப்படும் என்று தெரிகிறது.

அக் கட்டிடத்தை திருப்பித் தருமாறு சமய நிறுவனமொன்றும் வற்புறுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

---

## ஓடும் ரயிலில் தமிழர்களை மிரட்டல்!

கொழும்பு-வவுனியா ரயிலில் தமிழ் பயணிகளிடம் அடையாள அட்டை கேட்டு மிரட்டும்முயற்சியில் கும்பல் ஒன்று ஈடுபட்டு வருகிறது.

அடையாள அட்டை கேட்டு அவற்றை வாங்கிவிட்டு பின்னர் ஒரு குறிப்பிட்ட தொகை பணம் கொடுத்தால் மட்டுமே திருப்பிக் கொடுககிறார்கள்.

ரயில் வண்டிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவோர் இவற்றை கவனியாமல் இருப்பது பற்றி பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

---

## என்ன மொழி இந்த மொழி?

அம்பாறை மாவட்டத்திலுள்ள சியம்பலாந்துவ என்னுமிடத்தில் அமைந்திருக்கும் வைத்தியசாலையில் தமிழ் பட்டிருக்கும் பாட்டைப் பாருங்கள்.

**"சுகாதார வைத்திய அதிதாரி காதியாவயம்,**
**சிம்ப வாணடுவ"**
**தஸச ரோகவ சியம்ப வாணடுவ"**

இது எதற்கு எழுதப்பட்டுள்ளதென்றால் 'சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் சியம்பலாந்துவ, அத்துடன் மாவட்ட வைத்திய சாலை, சியம்பலாந்துவ' ஆகியவற்றினைக் குறிப்பதற்காகும்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழிக்கு நேர்ந்துள்ள கதியினைப் பார்த்து தமிழ் தெரிந்தவர்கள் மனம் நொந்து போகிறார்கள்.

---

## யாழ்தேவி வெற்றி!

## இராணுவத் தளபதி மகிழ்ச்சி!!

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை வெற்றியாக முடிந்தது என்று இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் படையினர் மத்தியில் உற்சாகமூட்டல்களிலும், அடிக்கடி இராணுவத்தளங்களுக்கு விஜயம் செய்வதிலும் படைத்தலைமை அக்கறை காட்டிவருகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்ன ஆகியோர் வடக்கு-கிழக்கில் உள்ள முன்னரங்க இராணுவ நிலைகளுக்கு அடிக்கடி விஜயம் செய்து வருகின்றனர்.

இதே வேளையில் கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார இதழ் ஒன்று யாழ்தேவி இராணுவ நடவடிக்கையை குறை கூறியுள்ளது.

புலிகள் அமைப்பினர் சிறப்பாகப் போரிட்டதாகவும் அந்த வார இதழ் கூறியுள்ளது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது தமது நிருபர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்ததாகவும், போர் நடைபெறுவதைப் புலிகள் நேரில் காண வைத்ததாகவும் அப் பத்திரிகை கூறியுள்ளது.

(சிறு விளம்பரப் பகுதி)



## மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex, NUWARA ELIYA.
Dial: 052-2508 & 3093
Celltel. 072-26088, 078-61933

COLOMBO BRANCH:
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. FAX: 0094-523093

SARIKA TEX
Ladies Tailoring
24 மணிநேரத்தில்
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்
உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள
Hewa Shopping Complex
No. 69/5-1/1, 1st Floor,
Galle Road,
Dehiwela South.


## 'விடுமுறை தாருங்கள்'! சந்திரசேகரன் கேட்கிறார்!
## 'முடிவு சொல்ல வேண்டியது ஆணையாளர்!' முதல்வர் சொல்கிறார்!!

(கண்டி நிருபர்)

"மத்திய மாகாண சபைக்கு மக்களின் பிரதிநிதியாக நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். தற்சமயம் தடுப்புக் காவலில் இருந்து வருவதால், எனக்கு சபைக்கு வந்து சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே எனக்கு லீவு அனுமதியுங்கள்."

இப்படி மத்திய மாகாண சபையின் தலைவரைக் கேட்டுள்ளார் நுவரெலியா மாவட்ட சுயேச்சைக் குழு உறுப்பினரானவரும் ஜே.ஓ.ஸி. குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக வரதனுக்குப் புகலிடமளித்ததாக பாதுகாப்புப் பிரிவினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ள, மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான திரு. பெரியசாமி சந்திரசேகரன்.

திரு சந்திரசேகரன் லீவு கேட்டு எழுதிய கடிதத்தை, மத்திய மாகாண சபையின் கூட்டத்தில் சபைத் தலைவர் திரு சரத் கோங்கஹகே சபை முன்பு எடுத்துக் கூறினார்.

திரு சந்திரசேகரன் சத்தியப் பிரமாணம் எடுப்பது தொடர்பாக, சபைத்தலைவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் திரு சந்திரசேகரன் இற்றைவரை மாகாண சபை உறுப்பினராகப் பதவியேற்கவில்லை எனவும், அதற்கு வகை செய்யுமாறும் கோரி எழுதியிருந்தார்.

திரு. சந்திரசேகரனுக்கு எதிராக விசேட ஷரத்தின் கீழ் அவரால் இழைக்கப்பட்ட குற்றத்திற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் பிரஸ்தாப கோரிக்கையை ஏற்க இயலாதெனத் தெரிவித்து சபைத் தலைவருக்கு அமைச்சின் செயலாளர் பதிலளித்திருந்தார்.

இது பற்றி சரத் கோங்கஹகே சபையில் மேலும் தெரிவிக்கையில், சபைக்கு வந்து சத்தியப்பிரமாணம் எடுக்காத சூழ்நிலையில் திரு.சந்திரசேகரன் இருப்பதால், தனக்கு லீவு அனுமதிக்க இயலாது எனவும் அவரது இந்தப் பிரச்சினை தொடர்பாக மாகாண சபையின் தலைவர் என்ற வகையில் மேலும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண தேர்தல் ஆணையாளருக்கு இதுபற்றி எழுதி இருப்பதாகவும், அவரது ஆலோசனையைத் தான் எதிர்பார்த்து இருப்பதாகவும் திரு.சரத் கோங்கஹகே மாகாண சபைக் கூட்டத்தில் அறிவித்தார்.

## பிரதான வீதி சீரற்ற நிலை

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா-தம்பலகாமம் பிரதான வீதி மிகவும் சீரற்ற நிலையில் குன்றும், குழியுமாக காணப்படுகின்றது.

இதனால் தற்பொழுது பெய்து வரும் மழையினால் வீதிகள் யாவும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

கிண்ணியா பிரதான வீதி அடிக்கடி பழுது பார்க்கப்பட்டு வருகின்றது. ஆனால் எந்த விமோசனமும் இல்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## நன்றிகள் பல...தினமுரசுக்கு

தினமுரசில் புகார் பெட்டியில் பிரசுரிக்கப்பட்ட "இருள் சூழ்கின்றது" என்ற புகாருக்கு பின்னர், எங்கள் கிராமங்களில் ஒளிவிளக்குகள் போடப்பட்டு, ஒளிமயமாக்கிய பெருமை தினமுரசின் புகார் பெட்டிக்கே சாருகின்றது. எனவே அதற்கு நன்றிகள் பல கூறுவதில் எங்கள் மக்கள் பெருமையடைகின்றார்கள் என்பதை இதன் மூலம் தெரியப்படுத்துகிறேன்.

ஏ.எஸ்.எம்.பாயிஸ்-மூதூர்-02.

## ஊதியமில்லாத சேவையா?
## தொலைபேசி இயக்குநர்கள் கவலை!

(திருகோணமலை நிருபர்)

1991 மார்ச் மாதத்தில் நியமனம் பெற்ற மூன்று பெண் தொலைபேசி இயக்குநர்களுக்கு இன்றுவரை சம்பள உயர்வுக்கேற்ற ஊதியம் வழங்கப்படவில்லை. அது மட்டுமல்ல இரண்டரை வருடங்களாகிய போதிலும் அவர்களது வேலை நிரந்தரமாக்கப்படுதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆரம்ப நாட்களில் வழங்கப்பட்டு வந்த தினப்படியான 51/40 மட்டுமே இன்றுவரை வழங்கப்பட்டு வருகிறது.

செல்விகள் பி.ஏ.மஞ்சுளா பிரியந்தி. சிராணி அரியரத்தினம், விமலேஸ்வரி பெருமாள் ஆகிய மூவருமே பாதிக்கப்பட்ட பெண் தொலைபேசி இயக்குநர்களாவர்.

ஜனாதிபதி நடமாடும் சேவையில் முறையிட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென வருந்தும் இவர்கள் திணைக்களம் ஸ்ரீலங்கா டெலிகொம் என்று மாற்றப்பட்டும், பழைய சம்பளத்திலேயே வேலை செய்துவருவதாகவும் தினமுரசுக்குத் தெரிவித்தனர்.

## புகார் பெட்டி

புகார் பெட்டி புகார் பெட்டி

## தேவை ஒரு தபாலகம்!

கண்டி மாவட்டத்திலுள்ள இனிகலை, உகுரஸப்பிட்டி ஆகிய இரு கிராமங்களுக்கும் இதுகாலவரைக்கும் தபால் அலுவலகங்கள் இல்லாமையினால் இப்பகுதிகளில் வாழும் மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

இப்பகுதிகளிலுள்ள மக்கள் கடிதங்களையோ, பொதிகளையோ அஞ்சல் செய்வதாயின் பல கஷ்டங்களின் மத்தியில் கட்டுகஸ்தோட்டை நகரிலுள்ள தபால் நிலையத்திற்கே செல்ல வேண்டியுள்ளது. இதனால் இப்பகுதி வாழ் மக்கள் கவலை கொண்டுள்ளார்கள்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் பல தடவைகள் எடுத்துக் கூறியும் இதுவரையிலும் பலன் கிட்டவில்லை.

எனவே மேற்படி இரு கிராம மக்களின் தேவைகளை சிரமமின்றி பூர்த்தி செய்வதற்காக வேண்டி, அக்கிராமங்களிலேயே உப தபால் நிலையங்களை விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்று இனிகலை, உகுரஸப்பிட்டி பகுதிவாழ் மக்கள் கோருகின்றனர்.

கே.எம். முஜீப்
இனிகலை-கட்டுகஸ்தோட்ட.

கொழும்புக் கோட்டையிலிருந்து 7.20 மணிக்குப் புறப்படம் புகையிரதம் சில நேரங்களில் தாமதித்துப் புறப்படுகின்றது. இதனால் கிராமப் புறங்களுக்கு செல்லக் கூடிய மக்களுக்கு பெரிதும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு நேர அட்டவணைப்படியே பஸ் வண்டிகள் செல்கின்றன.

உதாரணமாக, வெலிப்பெண்ண, கல்மத்த, அவித்தாவ, துன்துவ ஆகிய பகுதிகளே குறிப்பிட்ட கிராமங்களாகும். இங்கு பலர், தினசரி வேலை பார்க்க கொழும்புக்குச் சென்று வருபவர்கள். இவர்கள் இறுதி பஸ் வண்டியைப் பிடிப்பதற்காக இந்த புகையிரதத்தில்தான் வருவார்கள். இப்புகையிரதம் தாமதித்தால் இக்கிராம மக்கள் பஸ்தரிப்பிடத்தில் பஸ் இன்றி அலையும் நிலைக்கு ஆளாகி விடுகின்றனர். இந்தப் பரிதாபமான நிலைக்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இம்டியாஸ் மும்தாஜ்
பேருவளை.


## 25வது முரசோடு இலவச இணைப்பு

இளமை, இனிமை
-புதுமை-
காதல்-திரில்

வெற்றிகரமான
25வது முரசோடு
அன்புள்ள வாசக நெஞ்சங்களுக்கு இனிய அன்பளிப்பு
ரசிகன் வழங்கும்
கொல்லாமல் சாகாதே!
(குறுநாவல்)
இலவச இணைப்பு
உங்கள் பிரதிகளுக்கு
முன்கூட்டியே உங்கள் பகுதி முகவர்களிடம்
பதிவு செய்து கொள்ளுங்கள்!




## கல்முனையில் ஒரு கவலைக்குரிய வீதி!

கல்முனைக்குடி கடற்கரைப்பள்ளி பிரதான பாதையின் குறுக்கு வீதி ஒன்று இப்பகுதி வாழ் மக்களுக்கு மிக நீண்ட காலமாக ஒரு பிரச்சினைக்குரியதாகவே இருந்து வருகிறது.

காரணம் இவ்வீதி மிகவும் பள்ளப் பகுதியில் அமைந்திருப்பதுதான். ஒரு சிறு மழை பெய்தாலும் சேறும் சகதியுமாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மோசமாகவுள்ளது. அத்தோடு வருட இறுதியில் மழை கடுமையாகப் பெய்யும் காலங்களில் இப்பாதையில் முழங்கால் அளவுக்கும்மேல் நீர் தேங்கி நிற்கிறது. நீர் வடிந்தோட எந்த வசதியுமில்லை.

தேர்தல் காலங்களில் மட்டும் "கால்வாய் கட்டித் தருகிறோம், எங்களுக்கே ஓட்டுப் போடுங்கள்." என்று எத்தனையோ கட்சிக்கூட்டங்களில் பேசியாகி விட்டது.

சென்ற வருடம் நடுப்பகுதியில் "இவ் வீதி கால்வாய் கட்டித்தருகிறோம் அதற்கு முதல் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்ய வேண்டும்" என்று சொல்லி கடற்கரைப்பள்ளி பிரதான பாதையின் குறிப்பிட்ட பிரச்சினைக்குரிய பாதையின் எதிரே ஏகப்பட்ட கிரவலைக்கொட்டி வீதியை நன்றாக உயர்த்தி, போதாக்குறைக்கு பெரிய போக்கும் வைத்து விட்டு அவர்கள் போய்விட்டார்கள்.

எற்கனவே இவ்வீதியில் தேங்கி நிற்கிற நீர் வடிந்தோட வழியில்லை. இந்த நிலையில் கடற்பள்ளி றோட்டில் வைத்த போக்குகளால் எங்கிருந்தெல்லாம் பாய்ந்தோடி வரும் நீர் குறிப்பிட்ட இவ்வீதியிலேயே தஞ்சம் புகுந்து இந்த வீதியை ஒரு சிற்றாறாக்கி விட்டது. மாதக்கணக்கில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு வரவும் வாய்ப்பாகிறது. இதனால் இப்பகுதி வாழ் மக்கள் படும் அவஸ்த்தை சொல்லிலடங்காது.


போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஒரு புறம், நுளம்புத் தொல்லை ஒரு புறமுமாக இம்மக்கள் பெரிதும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

அண்மையில் கூட இவ்வீதியை செப்பனிடவென்று கிரவல் கொண்டு வந்து கொட்டினார்கள். அப்புறம் ஒரு வாரத்தின்பின் மீண்டும் அக்கிரவலை அள்ளி ஏந்திக் கொண்டு போய் விட்டார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனி மேலாவது இவ்வீதிக்கொரு விமோசனம் கொடுப்பார்களா? இது நாள்வரை அல்லல்பட்ட மக்கள் இனிமேலாவது அகமும் முகமும் மலர வாழ்வார்களா?

செல்வி மஸாஹினா ஆதம்பாவா
கல்முனை-03.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-21



### இடமிருந்து வலம்

1. இதுவும் ஒரு திருவிழாவாக நடப்பதுண்டு.
4. இரசிகர்களுக்கு இப்படியும் ஒரு பெயர்.
8. இதில் பலவகை உண்டு.
9. சமையலுக்குள் அடக்கம் (குழம்பியிருக்கிறது)
12. பெண்களின் புருவத்தை இதற்கு ஒப்பிடுவதுண்டு.
13. இது இல்லாமல் போனால் கிள்ளினாலும் தெரியாது.

### மேலிருந்து கீழ்

1. வருகிறது விரைவில்.
2. உயரமான இடம்.
3. தூக்கத்திற்குத் தோழன்
5. பலவகை டிசைன்களில் உண்டு.
6. இதனால் தாகம் தீராது.
7. மனித வாழ்வில் ஒரு கட்டம்.
10. நீதியுள்ள சக்கரவர்த்தி.
11. மனித வாழ்வில் நிச்சயமான ஒன்று.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 30.10.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-21
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-19க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சூ | ரி | ய | ன் | ■ | 2 நீ | 3 தி |
| 4 தா | 5 சி | ■ | டி | 6 த | ■ | ற |
| ட் | ல | ■ | 7 ஒ | ற் | று | மை |
| ட | ம் | தி | 8 சோ | கொ | 9 ச | ■ |
| ம் | பு | ■ | மா | லை | ம | 10 தி |
| ■ | ■ | 11 ப | லி | ■ | ர் | கி |
| ■ | 12 க | ணை | யா | ழி | ■ | ல் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.19இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. திருமதி. அ. அருணாகரன் புத்தளம்.
2. இம்றான் றியாஸ் மக்கோனா.
3. செல்வி. நேசமலர் கொழும்பு-14.
4. ஏ.எல். அமீர் ஹுஸைன் கல்முனை-03.
5. அமீர்டீன் கே. முகமட் திருகோணமலை.
6. எம். கவிதா சிலாபம்.
7. வி. யோகராஜா கொழும்பு-5.
8. கே. பசுபதி பண்டாரவளை.
9. எஸ். பெர்ணான்டோ வவுனியா.
10. ஆர். ஜெயக்குமார் மட்டக்களப்பு.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா50/= வழங்கப்படும்.

## இடம் பெயர்ந்த மாணவர்கள் இடர்படுகின்றனர்

வட பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தின், கல்பிட்டி பாடசாலையில் சுமார் 1400 மாணவர்கள் மாலை நேரப்பாடசாலையில் கல்வி பயில்கின்றனர். இம்மாணவர்களில் பெரும்பான்மையானோர் அயல் ஊர்களில் இருந்தே வருகின்றனர்.

பி.ப.2.00க்கு ஆரம்பித்து 5.30க்கு முடிவடையும் பாடசாலை, இம்மாணவர்கள், குறிப்பாக உயர்வகுப்பு மாணவிகள் இந்த வேளையில் பிரயாணங்களுக்காக, மிகவும் சிரமப்படுகின்றனர். சில வேளை இரவு 8.00 மணியாகியும் வாகனம் கிடைக்காமலும் உள்ளது.

எனவே மேற்கூறிய விடயத்தை மிகவும் விரைவாக கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வேளையில் பஸ் சேவை ஒன்றை மேற்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

இடம்பெயர்ந்த இளைஞர்கள் ஒன்றியம்
கல்பிட்டி.

## உடைந்த குழாய் திருத்தப்படுமா?

(சீனக்குடா)

குடாக்கரை குழாய் நீர் விநியோகத்திட்டத்தின் கீழ் நாச்சிக்குடா பகுதிக்கும் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. ஆனால் நாச்சிக்குடா பகுதிக்கு இணைக்கப்பட்டுள்ள குழாயில் சில இடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக அந்த வெடிப்புகள் வழியாக தண்ணீர் வீணாக ஓடிக்கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் நாச்சிக்குடாப் பகுதியில் குழாய் இணைப்புகள் பெற்றுள்ள, பல வீடுகளுக்கு குழாய்களில் நீர் வருவதே இல்லை. ஆதலால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெடித்துள்ள குழாய்களை உடனே திருத்தி, நாச்சிக்குடாப் பகுதி மக்களுக்கும் சீரான நீர்விநியோகம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென தினமுரசு மூலம் கோருகின்றனர்.

# கரும் புலிகள் குறியில் கருணாநிதியா?



# தமிழர் அரசியலில் மற்றுமொரு சறுக்கல்

இந்திய தூர்தர்ஷன் தொலைக் காட்சியில் ஒளிபரப்பான மகாபாரதம் இங்கும் காண்பிக்கப்படப் போகிறது.

எம்.ரி.வியில் தொடராக வரப்போகிறது.

மகாபாரதத் தொடர் இந்தியாவில் ஒளிபரப்பான போது மாபெரும் வரவேற்பு. ஒரு ஊரில் நடந்த சம்பவம் இது! மகாபாரதம் தொடர் ஒளிபரப்பான நேரத்தில் அந்த ஊரே வீடுகளுக்குள் தொலைக்காட்சிப் பெட்டிகள் முன்பாக இருந்தது.

திடீரென்று மின்சாரம் நின்றுவிட்டது. கத்தி, பொல்லுகள் சகிதம் ஊரே திரண்டு போய் அந்தப் பகுதியில் இருந்த மின்சார நிலையத்தை இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டது.

பீகார் மாநிலத்தில் மண்சரிவு கூடத் தெரியாமல் மகாபாரதம் பார்த்துக்கொண்டிருந்த குடும்பம் ஒன்று மாண்டுபோனது.

இவ்வாறு பல சம்பவங்கள். எதற்கும் நம்மூர் மின்சாரப் பகுதியினர் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

மகாபாரதத்தின் சில காட்சிகளை ஏற்கனவே இங்கு எம்.ரி.வி தொலைக்காட்சி நிலையத்தார் போட்டுக் காண்பித்தார்கள்.

இந்தியாவில் முழுக்க முழுக்க இந்தியில் ஒளிபரப்பப்பட்ட தொடர் என்பதால் இங்கு புரிவதற்காக சிங்களத்தில் காட்சிக்கு காட்சி விளக்கம் போடப் போகிறார்கள்.

மகாபாரதக் கதையை சிங்கள மக்களும் அறிந்து கொள்வதும், இந்தியக் கலாசாரங்களைப் புரிந்து கொள்வதும் வரவேற்கப்படவேண்டியதே.

அதே சமயத்தில் சிங்களமும், தமிழும் சம அந்தஸ்த்து பெற்றுள்ளதாக கூறப்படும் நம் நாட்டில், இந்தித் தொடரைப் பார்க்கப் போகும் தமிழர்கள் அதைப் புரிந்து கொள்ள, நிலையத்தார் என்ன எற்பாடு செய்யப் போகிறார்கள்?

இந்தியாவில் பல மாநிலங்கள். பல மொழிகள். அத்தனை மொழிகளிலும் விளக்கம் போடுவதென்றால் தொலைக் காட்சித் திரை கொள்ளாது.

இலங்கையில் இரு மொழிகள். அதுவும் சம மொழிகள். இரு மொழிகளிலும் விளக்கம் போட்டால் என்ன? முடியுமா? முயல்வார்களா? என்று இப்போதே பலர் கேட்கத் தொடங்கி விட்டனர்.

அநேகமாக நடக்காது என்றே சொல்லத் தோன்றுகிறது.

■

மனித வெடிகுண்டுக்குத் தேவையான தயாரிப்புக்களோடு வெடிபொருட்கள் மாட்டிக்கொண்டன.

மறு நிமிடமே கொழும்பெங்கும் பொலிசாரும், முப்படைகளும் மூலைக்கு மூலை அலசத் தொடங்கி விட்டார்கள்.

யாழ்ப்பாண அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் சந்தேகக் கண்ணோடு நோக்கப்படுகிறார்கள். தடுத்தும் வைக்கப் படுகிறார்கள்.

தேசிய அடையாள அட்டைகள் என்பவை இந்த நாட்டின் பிரஜைகள் என்பதற்கான சான்றுகளில் ஒன்று.

அதனை பகுதி பிரித்து ஆட்களைச் சுலபமாக சந்தேகிக்கும் அடையாளச் சின்னமாக மாற்ற முயல்வது சரியல்ல.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இடுப்பில் குண்டோடு வருவதாக கற்பனை செய்யத் தொடங்கினால், எல்லை பிரித்து அங்கு நின்று அவர்களை திரும்பி அனுப்பவேண்டும்.

வாருங்கள் என்று தலைநகர் வரை அனுமதித்துவிட்டு வேண்டா விருந்தாளிகளாக நடத்துவது விரும்பத்தக்கதல்ல.

கொழும்பில் தமிழர்களும் சிங்களவர்களும் சகோதரர்களாக வாழ்கிறார்கள் என்று நமது ஜனாதிபதி சொல்லியிருக்கிறார்.

கொழும்பில் தமிழர்கள் பாதுகாப்பாக இருப்பதும், பாதிக்கப்படாமல் இருப்பதும் சகோதரத்துவ உணர்வுகள் மேலும் இறுக்கமாக வழிவகுக்கும்.

கொழும்பில் புலிகளை அடையாளம் காண்பது சுலபமான வேலையல்ல. ஆனால் அதற்காக அடையாளம் காணப்பட முன்னரே அநியாயமாகச் சந்தேகிக்கும் அணுகுமுறைகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

■

அநுரா பண்டாரநாயக்கா தானாகவே இராஜினாமாச் செய்துவிட்டார்.

சிறீலங்கா சதந்திரக்கட்சித் தலைமையைப் பொறுத்தவரை தலையிடி தானாகவே விலகியது என்ற நிலைதான்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்



-நாரதர்-

என்றாலும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் பிரகாசமான காட்சிகள் கண்ணுக்குத் தெரியவில்லை.

திரு. அநுரா பண்டாரநாயக்காவால் வருகின்ற தேர்தல்களில் தீர்க்கமான பங்குவகிக்க முடியாமல் போகலாம்.

தென்னிலங்கை அரசியலின் போக்கை தீர்மானிப்பவராக அவரால் தன்னை வளர்த்துக்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே.

ஆனால், சிறிமா-அநுரா பிளவு, சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கிகளில் பாதிப்பை எற்படுத்தும். வாக்குகள் சிதறுவதால் ஆளும் கட்சிக்கே சாதகம் அதிகம்.

■

கலைஞர் கருணாநிதி இலங்கையில் தமிழ் பேசும் மக்களால் நன்கு அறியப்பட்ட தலைவர்.

எத்தனையோ தமிழ் நாட்டு தலைவர்கள் இலங்கை வந்து போயிருக்கிறார்கள்.

அமரர் எம்.ஜி.ஆரும் இலங்கை வந்து போயிருக்கிறார்.

ஆனால் கலைஞர் கருணாநிதி இலங்கை வர முயன்றபோது அனுமதி மறுக்கப்பட்டதுண்டு.

தந்தை செல்வநாயகம் அவர்கள் மறைந்த போது கலைஞர் வந்து மரியாதை செலுத்தப் போவதாக செய்திகள் வந்தன.

ஆனால் அனுமதி மறுக்கப்பட்டதால் அவரால் வரமுடியாமல் போய்விட்டது.

அந்தளவுக்கு இலங்கைத் தமிழர்களது நெருங்கிய நண்பராக அன்றைய அரசாங்கம் அவரை மதிப்பிட்டு மறிப்புச் செய்தது.

"தமிழ் ஈழ" கோரிக்கைக்கு கலைஞர் கருணாநிதி ஆதரவானவர் என்றே இலங்கை அரசு கருதியிருந்தது.

அவர் இலங்கைக்கு வந்தால் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு மேலும் ஆதரவு ஏற்படும் என்றும் நினைத்தது.

இலங்கைத் தமிழர்களது அரசியல் தலைவர்களாக இருந்த அமரர் தந்தை செல்வநாயகம், அமரர் அமிர்தலிங்கம் போன்றவர்கள் கலைஞர் கருணாநிதியோடு நெருக்கமான உறவுகளை கொண்டிருந்தனர்.

தமிழ் நாட்டில் பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட தமிழ் உணர்ச்சி அலைகள், இலங்கைத் தமிழ் அரசியலிலும் தாக்கங்களை ஏற்படுத்தின.

அண்ணா போல, கலைஞர் போல தம் குரலை மாற்றி மேடைகளில் பேசுமளவுக்கு தமிழகத் தலைவர்கள் மீது இங்கொரு கவர்ச்சி ஏற்பட்டே இருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது தேர்தல் பிரச்சாரங்களில் தமிழகத் தலைவர்கள் முடிவுகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பேசிய காட்சிகளும் நினைவுக்கு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அண்ணா நினைவு தின ஊர்வலங்களின் முன்னணியில் அமரர் அமிர்தலிங்கம் கம்பீரமாக நடந்து சென்ற காட்சியும் கண் எதிரே தெரிகிறது.

காலம் மாறி ஆயுதம் ஏந்திய அமைப்புக்கள், முன்னணிக்கு வந்தபின்னர் அந்த அமைப்புக்களில் இருந்தவர்கள் பலர் தமிழக தலைவர்கள் தங்களுக்கு உதவுவார்கள் என்றே நம்பினார்கள். தொடர்புகளும் கொண்டார்கள்.

ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் விடயத்தில் உதவிகள் செய்வதற்கு தமிழகத் தலைவர்கள் ஆரம்பத்தில் தயக்கம் காட்டினார்கள்.

பின்னர் காலம் செல்ல நட்புக்கரம் நீட்டினார்கள்.

கலைஞர் கருணாநிதி ரெலோ இயக்கத்தையே முதலில் முக்கியத்துவப்படுத்தினார்.

அதனால் வேறு தமிழ் அமைப்புக்கள் அவரைவிட்டு சற்றுத் தள்ளியே நின்றன.

அமரர் எம்.ஜி.ஆர் பிளொட் இயக்கத்தலைவர் உமா மகேஸ்வரன் உடன் தொடர்பு கொண்டிருந்த போதும், பின்னர் புலிகளை ஆதரிக்கத் தொடங்கினார்.

இலங்கைத் தமிழர்களுக்காக பேரறிஞர் அண்ணா காலத்திலும் தி.மு.க ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியதுண்டு.

ஆனால் இலங்கைத் தமிழர்களது பிரச்சனை தமிழ் நாட்டு மக்களிடையே உணர்வுபூர்வமான தாக்கத்தை 1983ம் ஆண்டுக்குப் பின்னரே எற்படுத்தியது.

1983க்கு பின்னர் தமிழ்நாட்டில் அதிகரித்த இலங்கைத் தமிழ் அகதிகளின் தொகையும், பயிற்சிக்காக சென்ற இயக்க உறுப்பினர்களின் தொகையும் இலங்கைத் தமிழர் பிரச்சனையை தமிழக அரசியலோடு முன்னரை விட அதிகமாக இணைத்து விட்டது.

தமிழக மக்கள் வாஞ்சையோடு அகதிகளை வரவேற்றனர்.

இயக்கங்களது உறுப்பினர்களைத் தமது பிள்ளைகள் போல நேசித்தனர்.

இலங்கையில் ஏற்பட்ட 83 ஜுலைக் கலவரம் தமிழக மக்களை இலங்கைத் தமிழர்கள் மீது ஆழ்ந்த அனுதாபம் கொள்ள வைத்தது.

இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுக்காத தமிழக கட்சிகள் தமிழ் மீதும், தமிழர் மீதும் பற்று இல்லாதவையாகவே கருதப்பட்டன.

இந்நிலையில் இலங்கைத் தமிழர்களுக்காக அதிகம் பேசுவது யார் என்ற போட்டியும் தமிழக அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்டன.

தி.மு.க ஹர்த்தால் நடத்த அழைப்பு விடுக்க, எம்.ஜீ.ஆர் மாநில அரசு மூலமே தமிழகம் எங்கும் ஒருநாள் வேலை நிறுத்தம் (பந்த்) பிரகடனம் செய்து, தனது செல்வாக்கை உயர்த்திக் கொண்டார்.

இவ்வாறு பல சம்பவங்கள். இலங்கைத் தமிழர் பிரச்சனை தமிழக அரசியல் முரண்பாடுகளிலும் பயன் படுத்தப்பட்டதை மறுத்துவிட முடியாது.

ஆனால் கட்சிகளின் தொண்டர்கள், மற்றும் சாதாரண தமிழக மக்கள் எவ்வித ஆதாயமும் கருதாமல் இலங்கைத் தமிழர்கள் மீது பரிவு காட்டினார்கள், பாசம் பொழிந்தார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

தமிழ் ஈழப் போராட்டத்திற்கு தமது பங்களிப்பு என்று தமது சொந்த சொத்துக்களைக் கொடுத்தவர்கள் கூட தமிழகத்தில் இருக்கிறார்கள்.

அவர்கள் எல்லாம் வெளியே பெயர் தெரியாத, தெரியவும் விரும்பாத உண்மை மனிதர்கள்.

எனினும் இயக்கங்கள் மத்தியில் ஏற்பட்ட மோதல்கள், பிளவுகள், ஒருவரை ஒருவர் தேடி அழிக்கும் வேட்டைகள் தமிழக மக்களை நம்பிக்கை இழக்கச் செய்தன.

ராஜீவ் காந்தி கொலை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல, தமிழக மக்களின் கணிசமான ஆதரவை இலங்கைத் தமிழர்கள் இழந்து போக வழிவகுத்தது.

அமரர் எம்.ஜீ.ஆர் மறைவுக்குப் பின்னர் கலைஞர் கருணாநிதியோடு புலிகள் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியிருந்தனர்.

தமிழக சட்டமன்றத்தில் கூட புலிகளை நியாயப்படுத்தியும், புலிகள் தமிழ் நாட்டில் இல்லை என்ற அர்த்தப்படவும், கலைஞர் முதல்வராக இருந்த போது பேசியுமிருக்கிறார்.

இந்திய அமைதிப்படை தாயகம் திரும்பியபோது ஒரு, அணி சென்னை விமான நிலையத்தில் இறங்கியது.

மாநில முதல்வர் என்ற ரீதியில் அந்த அணியை வரவேற்க செல்ல வேண்டிய கலைஞர் செல்லவில்லை.

தமிழக எதிர்க்கட்சிகள் சில அதனைக் கண்டித்தும் இருந்தன.

கலைஞர் தலைமையிலான தமிழக அரசு கலைக்கப்படவும் புலிகள்-கலைஞர் உறவே முக்கிய குற்றச்சாட்டாக இருந்தது.

எனினும் ராஜிவ் கொலை விவகாரத்தில் புலிகளின் சம்பந்தம் வெளிப்படையாக தெரியத் தொடங்க, கலைஞரும் யோசிக்கத் தொடங்கினார்.

தன்னோடு உறவு வைத்திருந்தபடி தனக்கும் தெரியாமல் புலிகள் செய்த கொலை அவரை கசப்படையச் செய்தது.

எனவே "ராஜீவ் கொலைக்கு பின் புலிகளோடு எனக்கு உறவு இல்லை. எனைய தமிழ் அமைப்புக்களோடு புலிகளை நட்புறவு கொள்ள வைப்பதற்கு முயற்சி செய்தேன். புலிகள் ஏற்கவில்லை." என்று கலைஞர் வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்தார்.

இக்கருத்து புலிகளுக்கு கசப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அவர்களும் கலைஞர் பற்றிய அதிருப்தியான கருத்துக்களையே வெளியிட்டு வந்தனர்.

என்றாலும் புலிகள் ஒன்றை மறந்து விடக்கூடாது.

இலங்கைத் தமிழர்களுக்காக யார் குரல் கொடுப்பது என்பதில் போட்டி நிலவிய காலம் மாறிவிட்டது.

இலங்கைத் தமிழர்கள் பற்றி பேசுவதே பிரச்சனை என்ற நிலமைதான், இப்போது தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

தவறுகள் இயக்கங்களின் பக்கமே அதிகம் இருக்கின்றன. புலிகளும் அதற்குள் அடக்கம்.

மிகப் பெரிய பின்பலமான தமிழக மக்களது ஆதரவை சரியாகப் பயன்படுத்திக்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## அதிரடி அய்யாத்துரை



கொழும்பு வங்கி ஒன்றில் காசோலை மாற்றப் போனவருக்கு நல்ல அனுபவம். காசோலை தமிழில் எழுதப்பட்டிருந்தது. தங்களுக்கு தமிழ் தெரியாது என்று ஊழியர்கள் சொல்ல, அங்கு நின்ற காவலரும் அதற்கு வக்கலாத்து வாங்கினாராம். தமிழும் தேசிய மொழிதானே. தமிழ் ஆட்கள் சிங்களம் படிக்கிற மாதிரி, நீங்களும் படியுங்கோ. அல்லது தமிழ் ஊழியரையும் பக்கத்தில் வைத்திருங்கோ என்று அவர் சத்தம் போட, முகத்தைச் சுழித்துக்கொண்டு காசோலையை வாங்கி கணக்கில் வைத்தார்களாம். இத்தனைக்கும் அது அரச வங்கி. சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுக்கிறேல்லை என்கிறது உதுதானாக்கும்.

யாழ்ப்பாணத்தில் இரெண்டு எழுத்துக்காரர் நீதிமன்றம் நடத்துகினம். நீதிமன்ற நிர்வாகம் சொல்லுற தொகையைத்தான் சட்டத்தரணி வாங்கி சட்டைப் பையிலை வைக்கலாம். இதை எக்ஸ்ரே ரிப்போட்டிலை படிச்சுக் கொண்டிருக்க, ஒரு பழைய நினைவு. அந்தக்காலத்திலை ரோம அரச சபையிலை வழக்காடும் சட்டத்தரணியள் வருமானத்தைப் பார்த்து வழக்கு நடத்துவது கிடையாது. தன் கட்சிக்காரர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கும் விசயத்திலை தான் குறியா இருப்பினம். அவர்கள் அணிந்திருக்கும் கோட்டுக்கு பின்னால் ஒரு பை தொங்கும். வழக்கு வெற்றியா முடிஞ்ச சந்தோசத்திலை கட்சிக்காரர் அந்தப் பையிலே காசு போடுவினம். எவ்வளவு போடுகினம் என்று கூட அவருக்கு தெரியாது. பிறகுதான் கணக்குப் பார்த்து, ரேட் பேசி, வாங்குற தொகைக்கு ஏற்ப பாய்ஞ்சு பேசுற தொழிலா சட்டம் பேசுறது மாறிப்போனது. இப்ப இரண்டெழுத்துக்காரர் ரோமர் காலத்துக்கு கிட்டக் கொண்டுவந்து நிறுத்திப் போட்டினம்.

வவுனியா போய் வந்த ஒருவர் சொன்னது: "அங்கு இரவில் பெண் பிரசுகள் கூட தெருவில் நடமாடுதுகள். தியேட்டர்கள் களை கட்டுது. இப்படிப் பல பல முன்னேற்றங்கள். இடைக்கிடை தோசம் மாதிரி ஆட்கடத்தல். களவுகள். ஆனால் திருமலையோடை ஒப்பிடேக்க வவுனியா பெட்டர்." வவுனியாப் பொலிஸ் பற்றியும் நல்ல அபிப்பிராயம். ஆனால் திருமலையில் பல குறைகள் அடிபடுகுது. அப்படி எண்டால் திருமலையில் என்ன சர்வதேசப் போர்ப்படையோ நிர்வாகம் நடத்துகிறது? ஏன் இந்த முரண்பாடு? எனக்கு தலை சுத்தும் போல கிடக்கு.

அகதி முகாம்களை மூடும் வேகம் அகதிகளை உரிய இடங்களில் குடியேற்றுவதில் இல்லை எண்டதுதான், கவலையான விசயமாய் கிடக்குது.

ஒரே பெயரில் இரண்டு இயக்கப் போட்டியில் காதோடு, காதாக இரண்டு தலை காணாமல் போனதா ஒரு தகவல். தலைநகரில்தான் தலை போனதாம். முன்னாள் இயக்கத்தலைவர் ஒருவரின் பெயரை தன் பெயரில் பாதியாக வைத்து திடீரென்று தோன்றி அமர்க்களமாய் அறிக்கைகள் விட்டவரை காணவில்லை. இனிக் காணவே முடியாதோ?

யாழ்ப்பாணத்திற்கு மண்ணெண்ணை அனுப்பும் விசயத்தில் சிலர் நல்லா உழைக்கினம். இரண்டு எழுத்துக்காரருக்கு மாதம் இவ்வளவு எண்டு பேசி, நல்ல தொகை கொடுத்து, எண்ணெய் அனுப்பி உழைக்கினம். அவை பரமசிவன் கழுத்திலும் இருக்கினம். தேவைப்பட்டா பெயரையும் சொல்லலாம். இப்ப வேண்டாம். பிழைக்கட்டும். ஆனால் பாருங்கோ தாங்கள் சுத்தம் எண்ட மாதிரி அவை சத்தம் போடக்கூடாது. பிறகு இந்த அய்யாத்துரை கண்டபடி எழுதிப் போடுவான். என்ன முரசிலை ஆத்திரம் வருகுதோ? வரட்டும். வந்தாத்தானே எனக்கும் முகமூடி கிழிச்சுக்காட்ட வசதியா இருக்கும். சனம் சாகுது. அவனவன் சம்பாதிக்கிறான்.

இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் அந்த அரசியல்வாதியைப் பேட்டி கண்டார். இலங்கை அரசியல் நிலவரம் பற்றிக் கேட்க அரசியல் வாதி பட்டென்று பதில் சொன்னாராம். "இங்கு யார் தலைவராக இருக்க வேண்டும் என்பதை இரண்டு எழுத்துக்காரர்தான் தீர்மானிக்கிறார்கள்." பத்திரிகையாளர் ஆச்சரியமாய்ப் பாத்தாராம். உடனை அரசியல்வாதி சொன்னாராம். "இங்கு மட்டுமல்ல, உங்கள் நாட்டிலும் யார் தலைவராக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் தான் தீர்மானிக்கிறார்கள்." பேட்டி கொடுத்தவர் வேறு யாருமில்லை அம்மையாரின் மைந்தர்தான்.

பட்டினத்தார் பட்டு அறிஞ்சு, நாலு விசயத்தை சொன்ன மனுசன். பெற்றவளை விட பிள்ளையை புரிஞ்சு கொண்டது வேறையார் எல்லா உறவும் போனாலும் இறுதிவரை உள்ள உறவு கருவில் தொடங்கிட தாய் உறவுதானே. அதைத்தான் பட்டினத்தார் சொல்லுறார் பாருங்கோ:

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச்- செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்தி கனக முலை தந்தாளை
எப் பிறப்பில் காண்பேன் இனி."

கஷ்டம்தான். சில உறவுகள் பிரிவோடு சரி. பிறகு யாராலும் நிரப்ப முடியாது பாருங்கோ.

### எக்ஸ்ரே ரிப்....

கொள்ள இயக்கங்கள் தவறி விட்டன.

இந்தத் தவறில் புலிகளுக்கு ஒரு முக்கியமான பங்கு இருப்பதை மறுத்துவிட முடியாது.

ஏற்கனவே கடந்துவந்த பாதைகளை திரும்பிப் பார்த்து, தவறுகளைச் சீர் செய்யும் நடைமுறை இங்கு காணாமல் போய்விட்டது.

அதனால் விட்ட தவறுகளே மீண்டும், மீண்டும் சுற்றுவட்டம் போல வந்து தலைகாட்டுகின்றன.

தமிழக மக்களது ஆதரவை இழந்தமைக்கான காரணம் ஆராயப்பட்டு மீண்டும் ஆதரவை உருவாக்குவதற்கு எவரும் முயல்வதாகத் தெரியவில்லை.

இலங்கைத் தமிழர்களது நலன்கள் சம்பந்தப்பட்ட நீண்டகால நோக்கில் தமிழக மக்களது பின்பலம் என்பது மிக அத்தியாவசியமானதே.

ஆனால் சமீபத்தில் புலிகளது அரசியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று உள்ளதையும், கெடுப்பது போல அமைந்திருக்கிறது.

கலைஞர் கருணாநிதிக்கு புலிகளால் ஆபத்து நேரலாம் என்று இந்திய உளவுப் பிரிவினர் கூறியிருக்கின்றனர்.

தமது இயக்கம் பற்றிய செய்தி ஒன்றை, அது தவறான செய்தி என்றால் மறுத்துப் பேச வேண்டியது புலிகளின் கடமைதான்.

ஆனால் செய்தியை மறுப்பதோடு நின்றுவிடாமல் தமிழக அரசியல் தலைவர்களை ஒட்டு மொத்தமாகக் குற்றம் சாட்டியிருப்பது அரசியல் விவேகமல்ல.

புண்ணுக்கு வலியோ, மருந்துக்கு வலியோ என்றொரு பழமொழி இருக்கிறது.

தமிழக அரசியல் தலைவர்களை கண்டிப்பதால் நஷ்டம் அவர்களுக்கு ஏற்படாது.

தமிழக அரசியல் கட்சிகளது தொண்டர்களதும், ஆதரவாளர்களதும் வெறுப்பை சம்பாதிப்பதால் நஷ்டம் புலிகளுக்கே.

புலிகளுக்கு மட்டுமல்ல பொதுவாக இலங்கைத் தமிழர்களுக்கும் நஷ்டமே.

ஆதரவும், அனுதாபமும் தேவைப்படும் நிலையில் இருக்கும் நாம் தான் விவேகமாக நடந்துகொள்ள வேண்டும்.

பதிலுக்குப் பதில், அடித்தேன், கவிழ்த்தேன் பாணியில் செயல்படுவது அரசியலில் விவேகமாகாது.

நெளிவு சுழிவுகளும், விட்டுக் கொடுப்புக்களும், திட்டவட்டமான இலக்கோடு கூடிய நடைமுறைச் செயல்திட்டங்களும் இல்லாமல் அரசியலில் நிலைக்க முடியாது. இலக்கை எட்டவும் இயலாது.

வேண்டுமானால் தற்காலிக பரபரப்புக் காட்டலாம். பத்திரிகைகளுக்கு செய்தித் தீனி போடலாம்.

தமிழக அரசியலில் இலங்கைத் தமிழர் பிரச்சனை பகடைக்காயாக பயன்படுத்தப் பட்டதாகப் புலிகள் சொல்கிறார்கள். அவர்களது அறிக்கை கூறுகிறது.

அதில் ஓரளவு உண்மையும் உண்டு.

ஆனால் பயன்படுத்தப்படக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியதில் நமது தரப்புப் பலவீனங்களுக்கும் பங்கு உண்டு என்பதை மறுத்துவிட முடியாது அல்லவா?

ரெலோ கலைஞர் பக்கம் என்றால், புலிகள் எம்.ஜி.ஆர் பக்கம் நின்றார்கள். இயக்கப் போட்டிகளால் யாரை யார் ஆதரித்து, அதிக பயன்பெறுவது என்ற நிலை இயக்கங்கள் மத்தியிலும் ஏற்பட்டது.

இயக்கங்களுக்குள் இருந்த பிரச்சனைகள், இயக்க உறுப்பினர்களைவிட இந்திய புலனாய்வு நிறுவனங்களுக்கே தெளிவாகத் தெரிந்திருந்தன.

சொன்னது யார் என்றால் இயக்கத் தலைமைகள்தான்.

ஆக, தமிழக அரசியல் முரண்பாட்டை இயக்கங்களும் பயன்படுத்தின என்பது உண்மை. புலிகளுக்கும் அது பொருந்தும்.

என்றாலும் நம்மால் சரியாகப் பயன்படுத்தக் கூடத் தெரியவில்லை.

இப்போது சதுரங்க ஆட்டம் முடிந்தது.

பகிரங்கமாகவே தமிழக மக்களது வெறுப்பு தெரிகிறது.

அதனைத் தக்கவைப்பது போல, காரசாரமான அறிக்கைகள் தேவையா என்பதே கேள்வி.

கலைஞர் கருணாநிதியை குறிவைத்து கரும்புலிகள் வந்திருப்பதாக தமிழகத்தில் பரபரப்பான செய்தி உலாவுகிறது.

இந்த நேரத்தில் கலைஞர் மீது வெறுப்பான வார்த்தைகளை வீசுவதால் கலைஞர் உயிருக்கு ஆபத்து என்றால் அது புலிகளது தலையில் விழவே வழி வகுக்கும்.

கலைஞர் மீதும், தமிழக அரசியல் தலைவர்கள் மீதும் புலிகள் தொடுத்துள்ள கண்டனம் காலப் பொருத்தமற்றது.


மீண்டும் ஒரு சறுக்கல். சாண் ஏற முழம் சறுக்கும் அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ளாதவரை நண்பர்களைவிட எதிரிகள் தொகையே அதிகமாகும்.

இது புலிகளை மட்டும் பாதிக்கும் விசயமல்ல.

முழு இலங்கைத் தமிழர்களையும் நீண்டகால நோக்கில் பாதிக்கும் விசயம்! ■

# ஆயுதக் குழுக்களுக்குள் மோதல்கள்! அகதிகளோ மனிதக் கேடயங்கள்!!

## சாவின் வாசலில் லைபீரிய மக்கள்



ஆக்கிரமிப்பை எதிர்க்க ஆயுதம்கையில் - ரெய்லரின்படை

ஆபிரிக்காவின் தென்மேற்கே தென் அத்லாந்திக் பெருங்கடலுடன் ஒட்டினாற் போலுள்ள சின்னஞ்சிறிய நாடான லைபீரியா, உள்நாட்டுப் போரில் சிக்கிச் சின்னா பின்னப்பட்டு சீரழிந்து கொண்டிருக்கும் மற்றுமொரு நாடு. 1989ல் வெடித்த இந்த உள்நாட்டு யுத்தம், 150,000 பேரைப் பலி கொண்டதுடன் இன்று 350,000 மக்களை உணவு, உறைவிடமற்ற அகதிகளாக்கி விட்டிருக்கிறது.

நாட்டின் ஆதிக்கத்தை யார் கைப்பற்றுவது என்று மூன்று ஆயுதக்குழுக்கள் தனித்தனியாக ஆட்சி மீது போர் தொடுத்தது மட்டுமல்லாமல் தங்களுக்குத் தாங்களே முட்டி மோதிக் கொண்டன.

இதன் பயனாக இறந்தவர்களில் அனேகமானோர் ஒன்றுமே அறியாத அப்பாவிகள். எப்பக்கமும் சாராத பொதுமக்கள் .

மாற்றுக் குழுவுடன் தொடர்பு கொண்டவர் என்று சந்தேகம்- ஏற்பட்டால் போதும், அந்த நபர் உடனடியாக சித்திர வதைக்குள் ஆளாகி உயிர்விடுவார்.

அதுமட்டுமில்லாது அவருடைய குடும்பத்தவர் அனைவரும் பூண்டோடு அழிக்கப்பட்டு விடுவார்கள்.

இந்தப் பயங்கரச் சூழ்நிலைகளுக்குள் இருந்து தப்பி வெளியேறிய அகதிகள் இக்குழுக்களின் மனிதக் கேடையங்களாக பயன்படுத்தப்படுகின்றனர்.

'தாய்நாட்டுப் பற்றுள்ளோரின் தேசிய முன்னணி' என்றோர் இயக்கம். இதன் தலைவர் சாள்ஸ் ரெய்லர். இவர் மேலை நாடுகளில் கல்வி பயின்றவர். லைபீரியாவை முன்னேற்ற வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு இயக்கத்தை ஆரம்பித்தார். ஆ";துப் போரின் மூலமே ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்ற துடிப்புக்கொண்ட இவருடைய தலைமையின் கீழ் பெரும் படை திரண்டது. அரசாங்கப்படைகளின் கணிசமான தொகையினர் கூட ரெய்லரின் விடுதலைப்படையில் சேர்ந்து கொண்டனர்.

அரசாங்கப்படை போதுமான ஆற்றலுள்ளதாகவில்லை. இதனால் நாட்டின் மூன்றில் இரண்டு பங்குப் பிரதேசத்தை ரெய்லரின் படைகள் கைப்பற்றிக்கொண்டன. இதே அரச படைகள் நடந்து கொள்ளுகின்ற முறையும் பொதுமக்களின் அதிருப்தியினை"ு சம்பாதித்துக்கொண்டது.

வளமுள்ள ஆபிரிக்க நாடொன்று வன்முறையால் சீரழிவதை விரும்பாத ஆபிரிக்க பொருளாதார சமூகத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தூண்டுதலின் பேரில் கடந்த ஜூலை மாதம் யுத்த நிறுத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் பயனாக ஐக்கிய நாடுகளின் அங்கீகாரம் பெற்ற அமைதி காக்கும் படை ஒன்று, நைஜீரிய நாட்டுத் துருப்புகளின் தலைமையில் அமைதிகாக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

இதே கால கட்டத்தில் வீடிழந்து, வாழ்க்கை வசதியிழந்து, தத்தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் தங்கள் தங்கள் பிரதேசங்களுக்குத் திரும்பிச் செல்ல இயலாத நிலையில் உள்ளனர். நீறு பூத்த நெருப்புப் போல் ஆயுதக் குழுக்கள் இன்றும் குமுறும் நிலையிலேயே நடமாடிக் கொண்டிருப்பதால் எந்த நேரத்தில் மீண்டும் வன்முறை வெடிக்குமோ என்ற அச்சம் அவர்களைச் சூழ்ந்துள்ளது.

இலட்சக்கணக்கான அகதிகளுக்கு அன்றாட உணவளித்துக் காப்பாற்றுவதென்பது இலேசான காரியமல்ல.

அகதிகளுக்காகக் கொண்டு செல்லப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், ஆயுதந்தாங்கும் இயக்கங்களின் கைகளிலோ, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கொள்ளை அடிக்கும் சில பயங்கரவாதக் குழுக்களிடமோ சென்றுவிடாமல் பார்த்துக்கொள்ள முடியாத நிலை நலன்புரிச்சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் உண்மையான அகதிகளுக்கு உதவி போய்ச் சேருவதில் முட்டுக்கட்டைகள் ஏற்படுகின்றன. பெரும்பாலான அகதிகளுக்கு உணவு, மருந்து போன்ற வசதிகளற்றமையினால் தினசரி பட்டினிச்சாவுகள் தொடர்கதையாகி விட்டன. ஊட்டச்சத்தின்றி வாடும் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகிறது.

இதற்கிடையில் ஆயுதம் தாங்கிய சிலர் அகதிமுகாம் ஒன்றுள் புகுந்து கண்டமாதிரி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இந்தத் தாக்குதலில் 400 பேர் கொல்லப்பட்டனர். இவர்களுள் 103 பச்சிளம் குழந்தைகள். படுகாயமுற்று, மருத்துவ வசதியின்றி சாவின் மடியில் உயிரூசலாடிக்கொண்டிருக்கும் நிலையில் மேலும் பல நூறு பேர் அடங்குவர்.

இந்தப் படுகொலைக்கு ரெய்லரின் தாய்நாட்டுப் பற்றுள்ள தேசிய முன்னணியே காரணம் என்று அப்போது கூறப்பட்டது. ஆனால் கடந்த செப்டம்பர் மாத மத்தியில் வெளியான ஐ.நா. சபை விசாரணை பெரும் அதிர்ச்சித் தகவலைத் தந்திருக்கிறது.

அரசபடைகளே இந்தப் பயங்கரப் படுகொலையைச் செய்திருப்பதாக ஐ.நா. தெரிவித்திருக்கிறது. இதற்குக் காரணம் தான் மிகவும் விசித்திரமானது.

'நாட்டைப் பாதுகாக்கப் போராடும் எங்களுக்கு உணவு கிடைக்கவில்லை. சும்மா சோம்பிக்கிடக்கும் இவர்களுக்கு மட்டும் உணவு தாராளமாகக் கிடைக்கிறதே...."

இதுதான் அரசபடைகளின் கோபத்துக்குக் காரணமாக அமைந்திருந்தது.

ரெய்லரின் படைகள் 'நைஜீரியத் துருப்புகளின் தலைமையில் இயங்கும் அமைதிப்படையை 'வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கான முன்னேற்பாடு' என்று கருதுகின்றன. இதனால் இந்தப் படைகள் மும்முரமான தாக்குதலை மீண்டும் தொடங்கலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இங்குள்ள பல்வேறு இனங்கள் தங்கள் தங்களுக்கே அதிகாரம் வரவேண்டும் என்று போரிடுகின்றன. இந்தப் போராட்டங்களின் விளைவாக 150,000 பேர் கொல்லப் பட்டுள்ளனர். தற்காலிகமாக உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்தம் நிரந்தரமான அமைதியை லைபீரியாவுக்குக் கொண்டு வரும் என்று கருத முடியாதமையினால் மீண்டும் போர் மேகம் மழை பொழிய ஆரம்பிக்கும் காலம் வெகு தூரத்திலில்லை.



சாவின் வாசலில் லைபீரிய மக்கள்

## உலக ரவுண்டப்

### "மன்னா இங்கே வா! மகுடம் இந்தா பார்"!! கம்போடியாவில் மறுபடி மன்னராட்சி!!

மன்னராட்சிகள் மறைந்துபோய் மக்களாட்சிகள் மலரும் காலத்தில் கம்போடிய நாட்டில் மறுபடியும் மன்னராட்சி மலர்ந்திருக்கிறது.

கடந்த முப்பது வருடங்களுக்குமேல் உள்நாட்டுப் போரால் இரத்தம் ஆறாகப் பெருகிய நாடு கம்போடியா.

கம்யுனிசவாதிகளும், கெம்றோகுகளும் தமக்குள் மோதி, ஒருவரை ஒருவர் தேடி வேட்டையாடி நாட்டை இரத்தக் காடாக்கினார்கள்.

கம்போடியாவை விட்டுத் தப்பி ஓடி சீனாவில் தஞ்சமடைந்திருந்தவர் நார்தோம் சிகிநோக்.

கம்போடியாவை பண்டு தொட்டு ஆண்டுவந்த மன்னர் பரம்பரையின் வாரிசு- முடிக்குரிய இளவரசர்தான் நார்தோம் சிகிநோக்.

நாட்டைவிட்டு ஓடியபோதும் உள்நாட்டுப் போருக்கு முடிவு கட்ட முடிக்குரிய இளவரசர் பல முயற்சிகளை மேற்கொண்டார்.

மோதிக்கொண்ட குழுக்களை பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்து அமைதிகாண உழைத்தார்.

ஐக்கியநாடுகள் சமாதானப்படை கம்போடியாவிற்குள் காலடி வைத்தது.

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

பொதுத் தேர்தல் நடைபெற்றால் இரத்தக் களரிதான் ஏற்படும். வன்முறையாளர்கள் வாலாட்டுவார்கள் என்று அவதானிகள் பலர் ஆருடம் சொன்னார்கள்.

ஆருடங்கள் பொய்த்தன. யாரும் எதிர்பாராத வகையில் பொதுத் தேர்தல் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

கம்போடிய ஆட்சியைக் கொண்டு நடத்தும் பொறுப்பு தேர்தல் மூலம் தெரிவான தேசிய சபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

தேசிய சபை கூடியது. சமாதானம் ஏற்பட உழைத்த முடிக்குரிய இளவரசர் நார்தோம் சிகிநோக் அரசராக இருந்து அவரின் கீழ் பாராளுமன்றம் செயற்படுவதென்று முடிவு செய்தது.

39 ஆண்டுகளுக்கு முன்னர் பட்டத்து இளவரசராக நாட்டை விட்டுப் போனவர் முடிக்குரிய அரசராக மாறிவிட்டார்.

இன்றைய உலகில் பல நாடுகள் மன்னர்களால் ஆளப்பட்டு வருகின்றன. இருப்பினும் அங்கெல்லாம் மன்னர்கள், பண்டையக்கால அரசர்கள் போன்று ஆதிக்கம் செலுத்தவோ, தங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மக்கள் மீது திணிக்கவோ முடியாது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளு



மன்றமோ, தேசிய சபையோ உருவாக்கும் சட்டங்களை ஆமோதிக்கும் ஒரு சம்பிரதாயச் சின்னமாகவே மன்னர் கருதப்படுகிறார். கம்போடியாவின் மன்னரும் கூட இதே நிலையில்தான் கருதப்படுவார்.

நம் நாட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களும் அவருக்கிருக்கமாட்டாது.

கம்போடியா ஒரு பண்டைப் பெருமை வாய்ந்த நாடு. தமிழ் வரலாறுகளுடன் தொடர்புடைய நாடு. பௌத்த சமயத்தைத் தழுவுகின்றவர்களே அதிகமாக வாழ்ந்தாலும் சைவப்பண்பாடுகளை இன்றும் அங்கு காணலாம். நீண்டகால பேரழிவிலிருந்து விடுபட்டு புதிய பாதையில் முன்னேற்றக் காலடி எடுத்து வைத்துள்ள கம்போடிய நாடு, அரசர் நார்தோம் சிகிநோக்கின் வழிகாட்டலில் புதுப்பொலிவு பெறும் என்று உலகம் எதிர்பார்க்கிறது.

(நார்தோம்- என்றால் நாரதன் என்பது தான் பொருள்.)

### மாறிவந்த மாதம்

சென்ற முரசில் காதலியோடு இப்படியொரு கார்ஓட்டம் செய்தியில் ஒரு தவறு. சம்பவம் நடந்தது 22.9.93. அது 22.10.93 என்று தவறாக இடம்பெற்று விட்டது. ஒரு கிழிகிழித்து தவறு சுட்டிக்காட்டிய நெஞ்சங்களுக்கு நன்றி.

### "மாபெரும் சந்தோசம்"

இலக்கியத்துக்கான நோபல் பரிசை அமெரிக்க கறுப்பு இன பெண் எழுத்தாளர் டோனி மாரிசன் வென்று விட்டார்.

அவருக்கு இப்போது 62 வயது. பரிசு கிடைத்த செய்தியறிந்ததும் டோனி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

"உண்மையில் எனக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவம் இது. எனக்கு மனசு கொள்ளாத சந்தோசம்." என்று டோனி மனம்திறந்து சொல்லியுள்ளார்.

1962ம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்கர் ஒருவருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. அதனால் அமெரிக்காவுக்கும் பெருமை.




### ஒரே பிரசவத்தில் ஏழு குழந்தைகள்

மெக்சிக்கோவில் இருந்து 60 கி.மீற்றர் தூரத்தில் உள்ள டொலுகா நகரப் பகுதியில் 26 வயதான பெண்ணுக்கு 7 குழந்தைகள் பிறந்துள்ளன.

மூன்று குழந்தைகள் ஆண்கள், மற்ற நான்கும் பெண்கள். போதுமான வளர்ச்சியின்றிப் பிறந்தமையால் ஏழு குழந்தைகளும் அடுத்தடுத்து இறந்து போயின. தாயின் உடல் நலமாக உள்ளதாக டாக்டர்கள் கூறுகின்றனர்.

### மாறிவரும் ஜப்பான் மணவாழ்க்கை!

ஜப்பான் மக்கள் கட்டுக்கோப்பான குடும்ப வாழ்க்கை கொண்டவர்கள் என்று உலகளவில் ஒரு கருத்து இருந்தது.

இப்போது கதையே வேறு. 3 நிமிடத்துக்கு ஒரு தம்பதியர் என்ற வீதத்தில் அங்கு விவகாரத்துக்கள் நடந்து வருகின்றன.

அண்மையில் ஜப்பான் பெண்களிடம் ஒரு பத்திரிகை கருத்துக் கணிப்பு நடத்தியது.

தங்கள் கணவன்மார் தங்களை நீண்டகாலத்திற்கு நேசிப்பதில்லை எனற கருத்து பெரும்பாலான பெண்கள் மத்தியில் வேரூன்றியுள்ளது.

அசாகி ஷிம்பன் என்ற பத்திரிகைக்கு ஒரு 38 வயது பெண் அளித்த பேட்டியில் இப்படிச் சொல்கிறார்: "உணர்ச்சியே இல்லாமல் மரக்கட்டை போல சுருண்டு படுக்கும் கணவருடன் எப்படி மகிழ்ச்சியாக இருப்பது?"

கடந்த வருடத்தில் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் 7.5 லட்சம்பேர். அதில் விவகாரத்துப் பெற்றவர்கள் 1.8 லட்சம் பேர். ■

### அதிரடி பாடகர் துருக்கியில்

அதிரடியான பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சன் துருக்கியின் தலைநகர் இஸ்தன்பூலில் இசை நிகழ்ச்சி நடத்தினார்.

20 ஆயிரம் இரசிகர்கள் ஆரவாரத்துடன் இரசித்தனர். ●

**அலசுவது – இராஜதந்திரி**

# சோமாலிய அனுபவம்: படை பலத்தினால் பட்டினி கிடப்பவர்களைப் பந்தாடிவிட முடியாது!

அமெரிக்க இராணுவத்தின் அதி நவீன யுத்த தளபாடங்கள் ஆபிரிக்க நாடான சோமாலியாவில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளன.

இத்தளபாடங்கள் அனைத்துமே அமெரிக்காவின் வல்லரசுத் தன்மையை மட்டுமல்லாது, அதன் விரிவான தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் வளர்ச்சியையும் பறை சாற்றுவனவாக இருக்கின்றன.

இராட்சத திமிங்கிலங்கள் வாயைப் பிளந்தவாறு தரையில் படுத்திருப்பதைப் போல, அமெரிக்காவின் இராணுவ-போக்குவரத்து விமானங்கள் சோமாலியாவின் தலைநகரான மொகாதிஸு விமான நிலையத்தில் தரை இறங்கி நிற்கின்றன.

இவ் விமானங்களின் முகவாய்ப்பகுதிகள் அகல விரிந்து காணப்படுகின்றன. தொடர்ந்து இவ் விமானங்களின் உட்புறப் பகுதியிலிருந்தும் கவச வாகனங்கள், ஜீப் வண்டிகள், இவற்றுக்கும் மேலாக கனரக யுத்த டாங்கிகள் கூட ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்து தரை இறங்குகின்றன.

ஒவ்வொரு யுத்த டாங்கியும் பல தொன்கள் எடை கொண்டவை. இத்தகைய டாங்கிகளை அமெரிக்காவிலிருந்து, ஆபிரிக்காவின் சோமாலியாவரை ஆகாயத்தில் சுமந்து வந்து இறங்கிவிட்டுள்ள அந்தப் போக்குவரத்து விமானங்களைப் பார்க்கும் போது, இப்படியும் ஒரு விஞ்ஞான முன்னேற்றமா? என்று மூக்கில் விரல் வைக்கத் தோன்றுகின்றது.

சோமாலியா, எத்தியோப்பியா போன்ற நாடுகள் கடந்த வருடங்களில் எத்தகைய கோணத்தில் இருந்தன என்பதை முழு உலகமும் நன்கறியும்.

எலும்புக்கூடுகள் புதை குழிகளிலிருந்து வெளியே வந்து நடமாடுவது போல திரும்புமிடமெல்லாம் சோமாலிய, எத்தியோப்பிய மக்கள், நடப்பதற்குக் கூட திராணியற்றவர்களாகக் காணப்பட்டனர்.



சோமாலியாவில் அமெரிக்கத் துருப்புகள்

# 'கருங்கழுகு'களைச் சுட்டுவீழ்த்திய சோமாலியக் கிளர்ச்சியாளர்கள்

மேலும் பலர் தரையில் குற்றுயிராகக் கிடந்து நீராகாரம் என்பன இன்றி ஜீவமரணப் போராட்டம் நடத்தியிருந்தனர். இலட்சக்கணக்கானவர்கள் சோமாலியாவில் பஞ்சம், பட்டினியால் மரணத்தைத் தழுவியிருந்தனர்.

இந்நிலையில் அந்நாட்டில் கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையிலான மோதல்கள் மோசமடைந்திருந்ததுடன், பட்டினிச் சாவுகள் சர்வசாதாரணமான நாளாந்த நிகழ்வுகளாக விளங்கியிருந்தன.

கடந்த வருடங்களில் நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் பேர்வரை பட்டினியால் சோமாலியாவில் இறந்தவண்ணமிருந்தனர்.

இதனையடுத்தே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த சர்வதேச அமைதிப்படையொன்றை சோமாலியாவுக்கு கடந்த ஜுன் மாதம் அனுப்பி வைத்திருந்தது. இந்த சர்வதேச ஐ.நா. அமைதிப்படையில் அமெரிக்கத் துருப்பினரே அதிகளவில் காணப்பட்டனர். அத்துடன் அமெரிக்க யுத்த தளபாடங்களும் அதிகளவில் இடம்பெற்றிருந்தன.

பட்டினிச்சாவினால் அல்லலுற்ற சோமாலியாவில் உணவு விநியோகங்களைச் சீர்படுத்தி, அங்குள்ள கிளர்ச்சியாளர்களையும் ஒரு நேர்த்தியான அரசியலில் ஈடுபடச் செய்ய முடியுமென்றே ஐ.நா. ஸ்தாபனம் எண்ணியிருந்தது.

சோமாலியாவுக்குள் ஐ.நா.படைகளுடனேயே நிவாரணப் பொருட்களும் வந்துகுவியலாயின. உணவுப் பண்டங்களுடன் மருந்துவகைகள், என்பனவும் பட்டினியால் வாடிய மக்களிடையே விநியோகிக்கப்பட்டன.

இதனையடுத்து சோமாலியாவில் மக்களிடையே குதூகலம் மேலிட்டிருந்தது. பசி, பட்டினியால் வாய் திறக்கக்கூட திராணியற்றிருந்த மக்கள், உணவுப் பொருட்கள் நாட்டுக்குள் வந்து சேரத் தொடங்கியதும் வீதிகளில் இறங்கி ஆடிப்பாடலானார்கள்.

இக் குதூகலமும், ஆடல், பாடல் என்பனவும் குறுகிய காலமே நீடித்தன. தொடர்ந்து சோமாலியாவின் முக்கிய கிளர்ச்சிவாதத் தலைவரான ஜெனரல் மொகமட் ஐடீட், ஐ.நா. படையினரிடம் சரணடைய மறுத்து ஆயுதப் போராட்டமொன்றையே ஐ.நா.படையினருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடலானார்.

இன்று இந்த ஆயுதப் போராட்டம் விரிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

சோமாலியாவில் பட்டினிச்சாவுக்கு எதிராகப் போரிடவும், அங்கு ஒரு சுமுகமான நிர்வாகத்தை ஏற்படுத்தவும் வந்த ஐ.நா. அமைதிப்படையினர், பிரதான கிளர்ச்சித் தலைவரான ஜெனரல் மொஹமட் ஐடீட்டுக்கு எதிராக ஒரு போரையே ஆரம்பித்திருந்தனர்.

சோமாலியாவுக்குள் ஐ.நா. அமைதிப் படையினர் வந்திறங்கியதையடுத்து இது வரை சுமார் 60 ஐ.நா. படைவீரர்கள் கிளர்ச்சித் தலைவர் ஐடீட்டின் கெரில்லாக்களினால் கொல்லப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் அமெரிக்க இராணுவத்தின் ஹெலிகாப்டர்களையும் அக்கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தியுள்ளார்கள்.

கடந்த சில வாரங்களாக அமெரிக்கத் துருப்பினரையே ஜெனரல் ஐடீட்டின் ஆட்கள் குறி வைத்துத் தாக்கியிருந்தனர்.

ஜெனரல் ஐடீட் தலைமையிலான கிளர்ச்சியாளர்களால் கருங்கழுகு (Black Hawk) என்றழைக்கப்படும் அமெரிக்காவின் அதி நவீன ஹெலிகாப்டர் ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தது. கூடவே அதன் விமானியும் யுத்தக் கைதியாக கிளர்ச்சியாளர்களிடம் சிக்கியிருந்தார்.

இதனையடுத்து சோமாலியாவில் ஐ.நா. படைகளுக்கு எதிரான யுத்தத்தை தனக்கெதிரான ஒரு சவாலாக அமெரிக்கா கருதியிருந்தது.

இதன் காரணமாகவே இன்று சோமாலியாவின் தலைநகரான மொகாதிஸு ஒரு பாரிய இராணுவத் தளம் போல காட்சி தருகின்றது.

இராட்சத விமானங்கள், ஹெலிகாப்டர்கள், டாங்கிகள் மற்றும் அணி, அணியாக அமெரிக்கத் துருப்புகள் மொகாதிஸுவை மொய்த்திருக்கக் காணப்படுகின்றன.

சோமாலியாவில் இன்று நிலவும் சூழ்நிலை இலங்கையில் ஆறு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தோன்றியிருந்த நிலைமையை ஒத்ததாகவே விளங்குகின்றது.

1987ம் ஆண்டு வடக்கே அரச படையினர் 'வடமராட்சி ஒப்பரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

வடமராட்சியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் வகையில் பெருமளவு யுத்த தளபாடங்களுடன் ஆயிரக்கணக்கான துருப்புகள் இந்த இராணுவ நடவடிக்கையில் குதித்திருந்தனர்.

'வடமராட்சி இராணுவ ஒப்பரேஷன்' முழுவேகத்துடன் இடம் பெற்றிருந்த தருணத்தில், ஒருநாள் பிற்பகல் வேளை அசுர வேகத்தில் பாரிய இரைச்சலுடன் பல விமானங்கள் குடாநாட்டின் ஆகாயப் பிராந்தியத்தை முற்றுகையிட்டிருந்தன.

வடமராட்சி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விமானங்களாக இருக்கலாமென அஞ்சி பொதுமக்கள் பதுங்கு குழிகளையும் நாடியிருந்தனர்.

ஆனால் அவ்விமானங்கள் குண்டுகளை வீசுவதற்குப் பதிலாக பாரசூட்கள் (Parachute) மூலமாக உணவு, மற்றும் மருத்துவப் பொதிகளைத் தரையில் போட ஆரம்பித்தன.

இதனையடுத்து அன்றைய மாலைச் செய்தியில் இந்திய விமானப்படை விமானங்கள், 'ஒப்பரேஷன் பூமாலை' என்று பெயரிடப்பட்ட ஒரு விசேட நடவடிக்கையின் மூலம் யாழ்குடாநாட்டினுள் உணவுப் பொதிகளைப் போட்ட தகவல் வெளியாகியிருந்தது.

இலங்கை அரச படையினரின் 'வடமராட்சி ஒப்பரேஷன்' நடவடிக்கையினால் பீதியுற்றிருந்த யாழ்குடாநாட்டு மக்களுக்கு மன ஆறுதலைத்தரும் ஒரு நடவடிக்கையாகவே இந்திய விமானப் படையின் 'ஒப்பரேஷன் பூமாலை' விளங்கியிருந்தது.

இதனையடுத்தே இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்ததுடன், 'வடமராட்சி ஒப்பரேஷன்' நடவடிக்கையும் இடைநிறுத்தப்பட்டு, இலங்கையின் சர்ச்சைக்குரிய வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் இந்தியப்படையினரும் யாழ் குடாநாட்டில் வந்திறங்கியிருந்தனர்.

சோமாலியாவில் தற்போது அமெரிக்கத் துருப்புகள் வந்திறங்கிய பாணியிலேயே இந்தியத் துருப்புகளும், 'அமைதிப்படையினர்' என்ற பெயரில் ஆயிரக்கணக்கில் யாழ் குடாநாட்டினுள் வந்திறங்கியிருந்தனர்.

இந்திய விமானப்படையின் ராட்சத ரஷ்யத் தயாரிப்பு போக்குவரத்து விமானங்கள் துருப்புகளையும், இராணுவத் தளபாடங்களையும் பலாலி விமானத்தளத்தில் தரையிறக்கலாயின.

இதுதவிர இந்திய கடற்படைக் கப்பல்கள், கடல் வழியாகவும் டாங்கிகள், மற்றும் இராணுவ வாகனங்களை வடக்கே கொண்டுவந்து சேர்க்கலாயின.

இந்திய அரசின் இந்த நடவடிக்கைகளின் முக்கிய நோக்கம் இலங்கையின் சர்ச்சைக்குரிய வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுக்கும், அரச படையினருக்குமிடையேயான மோதல்களை நிறுத்துவதும், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை அமுல் செய்வதுமேயாகும்.

இந்தியப்படையின் வருகையையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட அனைத்து தமிழ் தீவிரவாத இயக்கங்களும் தமது ஆயுதங்களை அரசிடம் கையளித்திருந்தன.

ஆனால் ஆயுதக் கையளிப்புகள் இடம் பெற்று ஒரு சில வாரங்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அமைப்புக்குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும், இந்தியப் பிரதிநிதிகளுக்குமிடையிலான பேச்சு வார்த்தைகள் முறிவடைந்திருந்தன.

தொடர்ந்து பலாலியில் இலங்கைப் படையினரின் காவலில் இருந்த முக்கிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் தற்கொலை செய்து கொண்டதையடுத்து, இந்தியப்படையினருக்கும், புலிகள் இயக்கத்தினருக்குமிடையே 1987ம் ஆண்டு அக்டோபரில் மோதல்கள் வெடித்திருந்தன.

அமைதிப்படையினர் என்ற பெயரில் வந்த இந்தியப் படையினர் புலிகள் இயக்கத்தினருக்கெதிராகப் பூரண போர்க் கோலம் பூண்டனர்.

இந்தியாவின் நவீன போர்ச் சாதனங்கள் புலிகளை அழிக்கும் பணியில் முழு அளவில் ஈடுபடுத்தப் படலாயின.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் வந்த இந்தியப்படையினர், புலிகளின் எதிர்த்தாக்குதலை தமக்கெதிரான ஒரு சவாலாகவே எடுத்துக் கொள்ளலானார்கள்.

அமைதிப்படையினர் என்று வந்திறங்கிய இந்தியப் படையினர் கனரக யுத்தத் தளபாடங்களுடன் யுத்த நடவடிக்கைகளை ஆரம்பித்ததைக் கண்டு யாழ்குடாநாட்டினர் பெரும் பிரமிப்புக்குள்ளாகியிருந்தனர்.

அத்துடன் ஆயுதங்களைக் கையளித்த புலிகள் இயக்கத்தினர் இந்தியப் படையினரைத் துணிச்சலுடன் எதிர்கொண்டதைக் கண்டதும் அவர்களது பிரமிப்பு இருமடங்காகியிருந்தது.

சோமாலிய கிளர்ச்சித் தலைவர் ஜெனரல் மொஹமட் ஐடீட்டைத்தேடி அமெரிக்கப்படையினர் வலை விரித்திருந்த பாணியிலேயே அன்று இந்தியப்படையினரும், தமக்கெதிராகப் போரிட்ட புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனையும் தேடி வலைவிரிக்கலானார்கள்.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக புலிகள் நலிவடைந்திருப்பார்கள்; மற்றும் ஆயுதங்களைக் கையளித்த நிலையில் அவர்கள் இலகுவில் சுற்றிவளைக்கப்படக் கூடியவர்களாகவே இருப்பார்கள் என்று இந்தியப்படையினர் எண்ணியிருந்தனர்.

ஆனால் புலிகள் குறித்து அவர்கள் கொண்டிருந்த கணிப்பீடுகள் யாவும் தப்புக்கணக்குகளாகவே இருந்தன.

இந்தியப்படையினர் வடக்கு-கிழக்குப் பகுதியை பெருமளவு ஆளணிகளின் துணையுடன் தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர்.

ஆனால் அவர்களால் புலிகளைச் சமாளிப்பது மிகவும் சிரமமான காரியமாகவே இருந்தது. அத்துடன் இருவருடகாலம் வடக்கு-கிழக்குப் பகுதியில் பெரும் படைபலத்துடன் பிரசன்னமாகி பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும் தமது நோக்கம் நிறைவேறாத நிலையிலேயே இந்தியப் படையினர் இலங்கையிலிருந்தும் வெளியேறியிருந்தனர்.

இன்று இலங்கையிலிருந்து இந்தியப்படையினர் வாபஸ் பெற்று மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் இந்தியரின் வெளியேற்றத்தையடுத்து இலங்கைப்படையினரால் மேற்கொள்ளப்படும் புலிகளுக்கெதிரான யுத்த நடவடிக்கைகளும் தகுந்த வெற்றிகளைப் பெறத் தவறியவையாகவே காணப் படுகின்றன.

இதே வேளை இந்தியப் படையினர், மற்றும் இலங்கைப் படையினருடன் துணிகரமாக மோதிக் கொண்டபோதிலும் ஒரு நிரந்தர வெற்றியையோ அல்லது வடக்கு-கிழக்கில் ஒரு அமைதி நிலையையோ ஏற்படுத்த முடியாதவர்களாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் காணப்படுகின்றனர்.

அண்மையில் இடம் பெற்றிருந்த 'ஒப்பரேஷன் யாழ்தேவி' நடவடிக்கைகூட இலங்கை அரச படையினரின் பலவீனத்தையே புலப்படுத்துவதாக இருந்தது.

மின்சாரமின்றி, போதியளவு உணவு, மருத்துவ வசதிகளின்றி யாழ்குடாநாடு பெரும் கஷ்டநிலைக்குள்ளாகியுள்ளது. இந்த நிலைமைகளைத் தமக்கு சாதகமாக் கருதியே அரச படையினர் ஆனையிறவு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். ஆனால் இப்பிரயத்தனத்தில் தோல்வியையே அவர்கள் கண்டிருந்தனர்.

சோமாலியா என்றவுடன் அங்குள்ள மக்கள் எலும்புக்கூடுகளாக நடமாடித் திரியும் காட்சியே அமெரிக்கர்களின் கண்களில் தெரிந்தது.

ஆனால் சோமாலியாவில் காலடி எடுத்து வைத்த போதே பட்டினியால் அல்லற்பட்ட மக்கள் தமக்கெதிராகத் தாக்குதல் தொடுத்ததைக் கண்டு அமெரிக்கத் துருப்பினர் ஆச்சரியமடைந்தனர்.

அமெரிக்காவின் யுத்த தளபாடங்கள் இன்று சோமாலியாவில் குவிக்கப்பட்டு, அவர்களின் 'கருங்கழுகு' (Black Hawk) என்றழைக்கப்படும் அதிநவீன இராணுவ ஹெலிகாப்டர்கள் கூட ஜெனரல் ஐடீட் தலைமையிலான கிளர்ச்சியாளர்களைத் தாக்கவென முழு அளவில் பயன்படுத்தப்பட்டன.

ஆனால் சோமாலியக் கிளர்ச்சியாளர்கள் இந்த 'கருங்கழுகு'களையும் சுட்டு வீழ்த்தி அமெரிக்கர்களுக்குப் பெரும் சவால் விட்டிருந்தார்கள்.

இதனையடுத்து கிளர்ச்சியாளர்களுடன் சமரசத்தை மேற்கொள்வதற்கும் அமெரிக்கர்கள் முன்வந்திருக்கின்றனர்.

**இராணுவ பலத்தினால் பட்டினி கிடப்பவர்களைப் பந்தாடி விட முடியாது என்பதை உணர்த்துவதாகவே சோமாலியாவில் இடம் பெறும் சம்பவங்கள் அமைகின்றன.**

**இலங்கையின் வடக்கு-கிழக்கிலும் இராணுவ நடவடிக்கைகள் எதிர் பார்த்த வெற்றியைத்தராதவையாகவே காணப்படுகின்றன.**

**இந்நிலையில், பரந்துபட்ட, பரஸ்பர விசுவாசத்துடன் கூடிய அரசியல் நடவடிக்கையின் மூலமே தீர்வொன்றை எட்ட முடியுமென்பது அனுபவ ரீதியிலான உண்மையாக இருக்கின்றது.** ■

# உங்களைப் பைத்தியமாக்க பெண்ணால் முடியும்!

பரபரப்பாகப் பேசப்பட்டு வாழ்ந்து மறைந்தவர் ரஜனீஸ். சர்ச்சைக்குரிய அவரது போதனைகளில் சில நல்ல விசயங்களும் இல்லாமல் இல்லை.

ஒரு வித்தியாசமான சிந்தனை என்ற ரீதியில், இங்கே ரஜனிஸ் சிந்தனைக்கு இடம் தரப்படுகிறது.

இதில் வரும் சகல கருத்துக்களோடும் முரசுக்கு உடன்பாடு என்று அர்த்தமல்ல.

மாறுபட்ட சிந்தனைகள், வேறுபட்ட கோணங்களில் அமையும் பார்வைகள் என்பவற்றை அறிந்துகொள்வது அவசியமல்லவா! அதன் விளைவே இது. இனித் தொடர்ந்து படியுங்கள்.


ஒரு பெண் ஆணைப் பைத்தியமாக்க முடியுமா?

இது அந்த மனிதனைப்பொறுத்த விஷயம். புத்திசாலியாக இருந்தால் ஒரு பெண்டாட்டி தாசன் ஆகிவிடுகிறான். இல்லையென்றால் அவனுக்குப் பைத்தியம் பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இதனால்தான் 99% ஆண்கள் பெண்டாட்டிகளுக்கு அடங்கிப் போகிறார்கள். இல்லையேல் அவர்கள் இல்லறத்தில் நீடிக்க இயலாது.

பைத்தியம் என்பது தர்க்கத்திற்குட்பட்ட மனத்தின் இயல்பு. இங்கே பைத்தியம் என்று எதைச் சொல்கிறேன் என்றால் எப்போது உங்கள் தர்க்க நியாயம் செயலற்றுப் போகிறதோ அந்த நிலையைச் சொல்கிறேன். நீங்கள் அந்தப் பெண்ணை விரும்புகிறீர்கள்; அவளைக் கைவிட எந்த நிலையிலும் தயாரில்லை. அவளுக்காக வருந்துகிறீர்கள். அவளைப் புரிந்துக்கொள்ள முயல்கிறீர்கள். என்னதான் முயன்றாலும் உங்களால் முடியவில்லை. தர்க்க நியாயம் உங்களுக்குத் துணை வரவில்லை. அவள்தான் அதற்கு அப்பாற்பட்டவளாயிற்றே. அவள் ஒரு புதிர். ஒரு குறிப்பிட்ட பெண்ணைப் படிக்க நீங்கள் காலம் முழுவதும் செலவிட்டாலும் சரி. அவளை நீங்கள் புரிந்து கொள்ள முடியாது.

விலக்கப்பட்ட கனியைப் புசிக்க வைத்தவள் ஏவாள்தான். இந்த மரத்தின் அருகில் செல்லாதே என்றும், அதன் கனியைப் புசிக்காதே என்றும் கடவுள் சொன்னரே என்று ஆதாம் வாதம் செய்தான். ஏவாள் என்ன சொன்னாள்? நாம் அறிவுக்கனியைப் புசித்தால் கடவுளுக்கு இருக்கும் அறிவைப் போலவே நமக்கும் அறிவு வரும். அதனால் அவர் பொறாமைப்படுகிறார் என்று ஏவாள் ஆதாமை வென்றாள், அவனைத்தூண்டினாள்.

கடவுள் உலகைப் படைத்திருக்கலாம். ஆனால் நமக்குத் தெரிந்த உலகம் பெண்ணால் உருவானது.



ஒரு பெண்ணின் மனம் எப்படிச் சிந்திக்கிறது என்பதைக் கவனித்தால் நீங்கள் தெளிவடைய இயலும். அதைப் புரிந்து கொள்வது இயலாத காரியம். அந்த முயற்சியே உங்களைப் பைத்தியமாக்கிவிடும்.

ஒரு பெண் ஆணைப் பைத்தியமாக அடிக்க இயலும். ஆனால் அதற்கு ஆணின் ஒத்துழைப்பு அவசியம். நீங்கள் ஒத்துழைக்கவில்லையேல் அது சாத்தியமில்லை. அவளைப் புரிந்து கொள்ள முயல்வதற்குப் பதிலாக அவளை அனுபவிக்க முயன்றால் அவள் உங்களைப் பித்துப் பிடிக்கும்படி செய்ய மாட்டாள். புரிந்து கொள்வது என்று ஆரம்பித்தால் அவளை அனுபவிக்கவே மாட்டீர்கள். அவள் வேறு வழியின்றி உங்களைப் பைத்தியமாக்குவாள். அவளது உறவை அனுபவியுங்கள். அவள் உங்களோடு மாறுபடுவதையும், வாழ்க்கையைக் குறித்து அவளது மாறுபட்ட அணுகுமுறைகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் மனைவியுடன் தனித்திருக்கும் போது மனத்தைக் கழற்றி வையுங்கள். எப்படி இருக்கிறீர்களோ அப்படியே இருங்கள். அறிவு பூர்வமாகச் சிந்திக்காதீர்கள். அவளைக் காதலியுங்கள். அவளோடு நடனமிடுங்கள். பாடுங்கள். வாதம் புரிய முயலாதீர்கள். எப்போதும் அவளோடு ஒத்துப்போக முயலுங்கள். இதனால் நீங்கள் இழக்கப் போவது எதுவுமில்லை. வாதம் செய்தாலும் இறுதியில் அவளுடன் ஒத்துப் போகவே நேரும். அதிகம் வாதம் செய்தால் அவளும் அப்படியே அடம்பிடிப்பாள். அவளது பெண்மை சக்தி வாய்ந்தது. அவள் சொல்வதைக் கேட்காமலிருக்க முடியாது. ஏனென்றால் அவள் உங்களைப் போல் வாதம் செய்யமாட்டாள். வாதத்தை விட்டு விட்டு இருவரும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம். அதையே நீங்கள் விரும்புவீர்கள்......

தனது மனைவி மேசையில் எதிர் எதிரே அமைதியாக, குளிர்ச்சியாக அமர்வதையே ஒவ்வொரு கணவனும் விரும்புகிறான். "அதைப்பற்றி நாம் கலந்துரையாடலாம்." என்று சொல்லியே விரும்புகிறான். ஆனால் அவன்தான் முதலில் எடுத்தெறிய ஆரம்பிக்கிறான். அமைதியாக இருந்தால், அவளை நீங்கள் வென்று விடலாம் என்பது அவளுக்குத் தெரியும். உங்கள் சாப்பாட்டில் உப்பை அதிகம் போட்டோ, தேநீரில் சர்க்கரையைக் குறைத்தோ அவள் உங்களை வம்புக்கு இழுக்கலாம். தர்க்கத்திற்கு எட்டாத வழிகளில் உங்களைச் சங்கடப்படுத்தலாம். அழலாம். தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளலாம். குழந்தைகளைக் காரணமில்லாமல் அடிக்கலாம்.

பெண்களிடம் எந்தக் குறையுமில்லை. வேண்டுமென்றே அவர்கள் உங்களைப் பைத்தியமாக அடிக்க முயலவில்லை. அவர்களது சிந்தனையோட்டம் வேறு திசையில் செல்கிறது. அதனால்தான் அவர்கள் கவர்ச்சிகரமாகத் தெரிகிறார்கள். ஆண்களை அவர்கள் ஒரு காந்தத்தைப் போல் கவர்கிறார்கள். எத்தனைக்கெத்தனை ஒரு பெண் உங்களிடமிருந்து வேறுபடுகிறாளோ, அத்தனை தீவிரமாக அவள் உங்களைக் கவர்கிறாள். அவள் உங்களைப் போலவே இருந்து, உங்களைப் போலவே சிந்தித்தால் அவள் மேல் உங்களுக்குக் கவர்ச்சி இருக்காது. உங்கள் இருவரது தொடர்பிலும் ஒரு விறைப்பு இருக்காது. ஏன், உறவே அறுந்து போகும்.

இந்த ஆண், பெண் உறவு என்பது ஒரு கட்டட வளைவைப் போன்றது. கட்டட வளைவை நிர்மாணிக்கும் போது செங்கற்களை ஒன்றையொன்று எதிர்த்து இறுக்கும் வகையில் கட்டுகிறோம். எதிர், எதிர் நிலைகளே வளைவின் உறுதியை நிர்ணயிக்கின்றன. வளைவால் முழுக் கட்டடமும் வலிமை பெறுகிறது. வளைவின் வலிமை எதிர்ப்பில்தான் இருக்கிறது.

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான உயிருள்ள தொடர்பு கொஞ்சம் பைத்தியக்காரத்தனமானதுதான். தன்னுடைய வாத வலிமை கொண்டோ, தர்க்க நியாயம் காரணமாகவோ ஓர் ஆண் ஒரு பெண்ணைப் பைத்தியமாக அடிக்க இயலாது. ஆனால் பெண் அப்படி இல்லை. அவளது எண்ணங்கள் தர்க்கத்திற்கு உட்பட்டவை அல்ல. அவள் அப்படித்தான். சிந்தனையின் ஆழ்நிலையில் அவள் உணர்வு மயமானவள்; உச்ச நிலையில் அவளுக்குத் தீர்க்க தரிசனம் உண்டு. ஆண் அப்படி இல்லை. ஆழ் நிலையில் அறிவு மயமாகவும், உச்ச நிலையில் புத்தி பூர்வமாகவும் அவன் இருக்கிறான். உணர்வு நிலை, தீர்க்க தரிசனம் இரண்டும் தர்க்கத்திற்கு அப்பாற்பட்டவை. தர்க்கத்தால் தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட மனிதரைப் பைத்தியமாக அடிக்க முடியாது. அப்படி அடிக்க முனைந்தால், தர்க்கத்திற்கு உட்பட்ட ஆண்மனம்தான் அதன் விளைவை சாதக, பாதகத்தைச் சந்திக்க நேரும்.

## லேடீஸ் ஸ்பெசல்

இவை எல்லாவற்றையும் பார்த்த பின்னும் நீங்கள் அவளோடு ஒத்துத்தான் போக வேண்டும். ஒரு வேளை உங்கள் பிரச்சினை எந்தப்படத்திற்குப் போவது என்பது பற்றியதாக இருக்கலாம். அவள்தான் வெல்லப் போகிறாள் என்னும் போது, நீங்கள் ஏன் வாதம் செய்து இறுதியில் தோற்க வேண்டும்? அவள் வழியே போனால் என்ன? எடுத்ததும் வெற்றியல்லவா கிடைக்கும்! 'ஆம் அதைத்தானே நான் சொன்னேன். நினைத்தேன்' என்று அவளே சொல்லும்படி நடந்து கொண்டால் என்ன? அப்போது உங்களுக்கும் மகிழ்ச்சி. இருவருக்கும் வெற்றி. உங்கள் தேநீரில் சர்க்கரை சரியாக இருக்கும். காய்கறியில் உப்பு சரியாக இருக்கும். குழந்தைகளுக்கும் அடி உதை மிச்சம். சின்ன விஷயத்திற்காக ஒரு பெண் வீட்டையே நாசமாக்கி விடலாம். எல்லாவற்றிற்கும் காரணம் நீங்களே!

## வீட்டுக் குறிப்புகள்




தலைமுடி பளபளவென்று இருக்க வேண்டுமா? வாரத்திற்கு ஒரு முறையாவது எண்ணெய் தேய்த்து சீயாக்காய் தூள் உபயோகித்துக் குளிக்கவும். சீயாக்காய் தூளை சோறு வடித்த கஞ்சி அல்லது, மோருடன் கலந்து தலையில் தேய்த்துக் குளித்துப் பாருங்கள். கூந்தல் மென்மையாகப் பளபளப்பாகி விடும்.



கரட் விலை மலிவு என்று நிறைய வாங்கி விட்டீர்கள். ஃபிரிட்ஜ் இல்லை. ஒரு வாரத்திற்கு எப்படி வாடாமல் வைத்திருப்பது? கவலைப்படாதீர்கள். அதற்கு ஒரு வழி இருக்கிறது. ஒரு மரப்பெட்டியை எடுத்துக் கொள்ளுங்கள். காற்றோட்டம் இருக்க வேண்டும். மரப்பெட்டியின் அடியில் மணலைப் பரப்பி விடுங்கள். மணல் மீது லேசாகத் தண்ணீரைத் தெளித்து விடுங்கள். அதன் மீது கரட்டுக்களை அடுக்கி மூடி வைத்து விடுங்கள். ஒரு வாரத்திற்கு வாடாமல், வதங்காமல் இருக்கும்.



பீங்கான், தட்டு, கப் போன்றவற்றை அடிக்கடி உபயோகப்படுத்துகிறீர்களா? ஒவ்வொரு முறையும் அவற்றைக் கழுவி, துடைத்து வைப்பது கடினமாக இருக்கிறதா? தட்டு, கோப்பைகளையெல்லாம் கழுவின பிறகு சிறிது நேரம் ஒரு செய்தித்தாளின் மீது (தினமுரசின் மீது ,வேண்டாம்) கவிழ்த்து வைத்து விடவும். ஈரமெல்லாம் போய் விடும். பிறகு எடுத்து உள்ளே வைத்து விடவும்.




உங்கள் வீட்டுக் குழந்தைகள் முட்டை சாப்பிட மறுக்கிறார்களா? வற்புறுத்தி ஊட்டி விடாதீர்கள். அவர்களை முட்டை சாப்பிட வைக்க ஒரு எளிய வழி இருக்கிறது. முட்டையை உடைத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றிக் கொள்ளுங்கள். மஞ்சள் கருவை எடுத்து விடவும். வெள்ளைக் கருவில் இரண்டு தேக்கரண்டி சீனி கலந்து நன்றாக அடித்துக் கொள்ளவும். தோசை செய்யும் போது இந்தச் சீனி கலந்த முட்டையின் வெள்ளைக் கருவை தோசையின் மீது ஊற்றி வேக வைத்து எடுக்கவும். இந்த முட்டைத் தோசையை குழந்தைகளுக்குச் சாப்பிடக் கொடுங்கள். விரும்பிச் சாப்பிடுவார்கள். வெள்ளைக் கருவை மட்டும் தோசைக் கல்லில் போட்டு வேகவைத்து ரொட்டியுடன் சேர்த்துச் சாப்பிடலாம். பாணுடன் சேர்த்தும் சாப்பிடலாம்.


## நீங்களும் தைக்கலாம்

### சாறி பிளவுஸ்


பின் சட்டை அகலம்- 18"+1"= 19"÷2 = 9 1/2"
பின் சட்டை நீளம்- 14"+2" = 16"
பின் கழுத்தகலம்- 2 1/2"
பின் கழுத்து இறக்கம்- 4"
தோள் நீளம்- 4 1/2"
முன் சட்டை அகலம்- 19"+1"=20"÷2=10"
முன் சட்டை நீளம்- 14"+2"=16"
கை நீளம்- 8"+ 1/2"+1"= 9 1/2"
கை அகலம்- 16"+1"=17"÷2= 8 1/2"
நுனிக்கைச் சற்றளவு- 11"+1"= 12"÷2=6"




படத்திலுள்ளவாறு A யிலிருந்து 2 1/2" Eவரையும் A யிலிருந்து 4"Fவரையும் குறித்து E,Fஐ இணைத்து பின் கழுத்து வரைக. E யிலிருந்து 4 1/2" G வரையும் B யிலிருந்து 6"H வரையும் குறித்து G,Hஐ இணைத்துக் கை வரைக.




10" அகலமும் 16" நீளமும் கொண்ட துணியை எடுத்துக் கொள்க. படத்திலுள்ள




திறப்புக்காக 1" உள் மடித்துக் கொள்க. A யிலிருந்து 2 1/2" E வரையும் A யிலிருந்து 5" F வரையும் குறித்து E,Fஐ இணைத்து முன் கழுத்து வரைக.

பின் உடம்புக்கு உள்ளது போலவே Eயிலிருந்து 4 1/2" Gவரையும் Bயிலிருந்து 6" H வரையும் குறித்து G,H ஐ இணைத்துக் கை வரைக.

கையின் அளவுக்கு B யிலிருந்து 1 1/2" குறித்து A,Eஐ வளைவாக வரைந்து குறித்துக் கொள்க. C யிலிருந்து 1" உள் நோக்கி F வரை குறித்து E,Fஐ இணைத்துக் கொள்க.

கழுத்திற்கு சரிவாக மிக மெல்லிய நாடா போன்ற துணியை வைத்துத் தைத்தால் கழுத்தானது மிக அழகாகவும் கச்சிதமாகவும் இருக்கும்.

## சமைப்போம் சுவைப்போம்

சுவையோடு தருவது சுகந்தினி

### ஜாம் கேக்

**தேவையானவை:**

மாஜரின்- 1 இறாத்தல்
சீனி-1 இறாத்தல்
மா- 1 இறாத்தல்
முட்டை- 8
ஸ்ரோபேரி ஜாம் 1 போத்தல்
முந்திரி வற்றல் (கிறேப்ஸ்)- 100 கிராம்
முந்திரிப் பருப்பு-100 கிராம்
வனிலா- 3 தே.கரண்டி
எலுமிச்சம்பழம்- 1/2
பேக்கிங் பவுடர்- 2 தே.கரண்டி

**செய்முறை:**

மாவையும், பேக்கிங் பவுடரையும் சேர்த்து இரண்டு அல்லது மூன்று முறை சலித்தெடுக்கவும். மாஜரின், சீனி இரண்டையும் ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு சீனி கரையும் வரை நன்றாக அடிக்கவும். அடிபட்டதும் முட்டையையும் சேர்த்து இன்னும் நன்றாக அடிக்கவும். பின்பு மாவை கொஞ்சம் கொஞ்சமாகத் தூவி கிளறவும். அத்தோடு வனிலா, எலுமிச்சம் சாறு இரண்டையும் சேர்த்துக் கிளறவும்; அடித்த கலவையை இரு பகுதிகளாகத் தனித்தனியே எடுத்துக் கொள்ளவும். ஒரு பகுதியில் வெட்டிய முந்திரிப்பருப்பு, மற்றும் கிரேப்ஸ் ஆகியவற்றைச் சேர்த்துக் கிளறவும். ஒரு நீள் சதுர தட்டின் மீது முன்பு தனியாக எடுத்து வைத்திருந்த கலவையை ஊற்றி பரப்பவும். அதன் மேல் பழம் சேர்த்த கலவையை ஊற்றி பரப்பவும். மிஞ்சி உள்ள மிகுதி கலவையை அதன் மேல் ஊற்றி பரப்பி ஒரே அளவான சூடுள்ள சூட்டடுப்பில் (அவண்) வைத்து எடுக்கவும்.

### கத்தரிக்காய் ஈரல் குழம்பு

**தேவையானவை:**

ஈரல் -1/4 கிலோ
கத்தரிக்காய் - 3
மிளகாய் வத்தல் (தூளாக்கியது)- 12
மல்லி, சீரகம் வறுத்தது- 2 மேசைக்கரண்டி
மிளகு- சிறிதளவு
மஞ்சள் தூள்- சிறிதளவு
சிறிய வெங்காயம் அரிந்தது- 1 மேசைக்கரண்டி
உள்ளி அரைத்தது- 1 மேசைக்கரண்டி
இஞ்சி அரைத்தது- சிறிதளவு
ரம்பை இலை- சிறிதளவு
கறிவேப்பிலை-சிறிதளவு
கறுவாப்பட்டை- சிறிதளவு
ஏலக்காய் (தூளாக்கியது)- 4
எண்ணெய் - போதியளவு
புளி- தேங்காய்ப்பாலில் கரைத்தது- 20 கிராம்
தேங்காய்ப்பால்- 1 1/2கப்

**செய்முறை:**

கத்தரிக்காயைக் கழுவி சிறிய சதுரத் துண்டங்களாக வெட்டவும். அதன் மீது உப்பு மஞ்சள் தூளைத் தடவிக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் போதியளவு எண்ணெய் எடுத்து அதனுள் கத்தரிக்காய்த் துண்டங்களை இட்டுப் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

ஈரலைக் கழுவி ஒரு பாத்திரத்தில் இட்டு, ஓரளவு நீர் விட்டுக் கொதிக்க விடவும். ஈரல் அவிந்ததும் அதனைச் சிறிய துண்டங்களாக்கவும்.

ஒரு பாத்திரத்தில் தேங்காய்ப்பால், தூளாக்கப்பட்ட மளிகைப் பொருட்கள்; மிளகாய், உள்ளி, இஞ்சி, கறுவாப்பட்டை, ஏலக்காய், மிளகு, புளி, உப்பு (வெங்காயம், ரம்பை இலை, கறிவேப்பிலை, ஆகியவற்றில் அரைவாசி) பொரித்த கத்தரிக்காய், அவித்த ஈரல் அனைத்தையும் ஒன்றாக இடவும். வேறொரு பாத்திரத்தில் எண்ணெயிட்டுச் சூடாக்கி மீதிப் பொருட்களை இட்டுத் தாளிக்கவும். இதனுள் எடுத்து வைத்திருக்கும் ஈரல் உட்பட அனைத்துப் பொருட்களையும் விட்டு நன்றாக வெந்து வாசனை வந்ததும் இறக்கவும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

தகவல் பெட்டி

# கடலின் நடுவே தொடரும் மர்மம்

# மீண்டுமொரு கப்பல் மாயம்!



ஃபீலிக்ஸ் புரோச




காணாமல் போன காறா மியா கப்பல்



கப்பலின் காப்டன் கார்மென் ஃபோர்மிசெல்லா

அமெரிக்காவின் மியாமி, பேமுடா ஆகிய பிரதேசங்களையும், கியூபாவின் மேற்கு மற்றும் டொமினிக்கன் குடியரசின், வடமேல் பகுதிகளையும் உள்ளடக்கிய கடல் பிராந்தியத்தில் நீண்ட பல காலமாக ஒரு பெரும் மர்மம் சூழ்ந்திருக்கிறது.

இப்பகுதிக்குள் நுழையும் கப்பல்கள் மட்டுமல்ல, மேலே பறக்கும் விமானங்களும் மாயமாக மறைந்து விடுகின்றன.

இதுவரை அந்த மர்மம் கண்டுபிடிக்கப்படவில்லை.

"பேமுடா மூக்கோணம்" என்றழைக்கப்படும் அப் பகுதியில் உள்ள மர்மத்தை விஞ்ஞானிகள் கூட இதுவரை விடுவிக்கவில்லை.

இறுதியாக அப்பகுதிக்குள் நுழைந்து காணாமல் போயிருக்கிறது இத்தாலிய நாட்டு உல்லாசப் ப்யணக் கப்பல்.

அக்கப்பலின் பெயர் "காறாமியா". 1,530 பேர் அக் கப்பலில் பயணம் செய்தனர்.

காணாமல் போன அந்தக் கப்பல் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

அமெரிக்க கடற்படை மற்றும் கரையோரக் காவல் படையினர் தேடுதல் வேட்டை நடத்துகின்றனர்.

எனினும் கப்பல் காணாமல் போன செய்தி மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

கிராண்ட் பஹாமா தீவின் துறைமுக நகரமான ஃபிறிபோட்டில்தான் இக்கப்பல் கடைசியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் போது இது மாயமாக மறைந்துள்ளது.

இக்கப்பலில் 1,530 பயணிகளுடன் 615 சிப்பந்திகளும் இருந்தனர். 708 அடி நீளமான இக்கப்பலில் சகல நவீன வசதிகளும் உள்ளன. ஜெனீவாவைச் சேர்ந்த கார்மென் ஃபோர்மிசெல்லா இக்கப்பலின் காப்டனாகக் கடைமை பார்த்தார்.

'காறா மியா' கப்பல் மாயமாக மறைந்ததை தான் நேரடியாகக் கண்டதாக கரிபியன் கடலில் கடல் இறால் பிடிப்பதில் ஈடுபட்டிருந்த ஃபீலிக்ஸ் புரோச் கூறுகிறார். 30 வயதான இவர் இக்கப்பல் சென்று கொண்டிருந்த இடத்திலிருந்து சுமார் அரைமைல் தொலைவில் இயந்திரப்படகொன்றில் இறால் பிடித்துக்கொண்டிருந்தார்.

நல்ல வெய்யில் எறித்துக் கொண்டிருந்த வேளையில் திடீரென ஒரு புகார் சூரியனை மறைத்ததாம். தொடர்ந்து பல விபரிக்க முடியாத மாற்றங்கள் நேர்ந்ததை அவதானித்துள்ளார். மேற்கொண்டு அவர் விபரித்ததை அப்படியேதருகிறோம்:

"ஒரு பச்ஷச வர்ணப்புகார் எங்கும் சூழ்ந்தது. இதில் நானும் அகப்பட்டுக் கொண்டேன். ஒரே நிமிடத்தில் கடல் அலைகள் எதுவுமின்றி எங்கும் அசாத்திய அமைதி சூழ்ந்தது. மிகக் கடுமையாக எறித்த சூரியனை இப்புகார் மறைத்தது. எங்கும் திடீரென குளிர் கவ்வியது. சில நிமிடங்களில் புயல் போன்று காற்று வேகமாக அடித்ததும் அலைகள் பயங்கரமாக எழுந்தன.

"நான் இருந்த இடத்தை மூடியிருந்த பச்சைப் புகார் அகன்று அந்தப் பெரிய கப்பலை முழுமையாக மூடியது. ஐந்து அல்லது, பத்து நிமிடம் வரை அந்தப் புகாரையே பார்த்திருந்ததாக ஞாபகம். புகார் திடீரென மறைந்தது; அதே போல அந்தப் பிரமாண்டமான கப்பலும் சுவடே தெரியாமல் மறைந்து விட்டது.

"உடனடியாக கடற்கரைக் காவல் படையினருடன் வானொலி மூலம் தொடர்பு கொண்டேன். நான் இருந்த கடல் பகுதியின் வரை கோட்டிலக்கங்களைக் கொடுத்தேன். உடனடியாக தேடுதல் ஆரம்பித்தமைக்கு அடையாளமாக விமானங்களும், ஹெலிகாப்டர்களும் அந்தப் பிராந்தியத்தை சுற்றி வளைத்து தேட ஆரம்பித்தன."

புறாச் தனது இறால் பிடிப்புப் பணியினை முடித்துவிட்டு 2 நாட்களின் பின்னர் கரையை அடைந்த போது, ஒரு முரட்டு ஆசாமி அவரை அணுகி, 'நடந்த சம்பவத்தை எவரிடமும் கூறலாகாது' என்று எச்சரித்துள்ளார். மீறினால் சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்றும் கூறியதாகச் சொன்னாா.

அமெரிக்காவின் மியாமி, பேமுடா ஆகிய பிரதேசங்களையும் கியூபாவின் மேற்கு மற்றும் டொமினிக்கன் குடியரசின் வடமேல் பகுதியையும் உள்ளடக்கிய கடல், பிராந்தியமே 'பேமுடா முக்கோணம்' என்று வழங்கப்படுகிறது.

இப்பிராந்தியத்தில் பல மர்மங்கள் பல காலமாக நடைபெற்று வந்துள்ளன. இக்கடலில் பயணம் செய்யும் கப்பல்கள், மேலே பறக்கும் விமானங்கள் ஆகியன மர்மமான முறையில் மறைந்து விடுவதாக அடிக்கடி பரபரப்பான தகவல்கள் வெளிவருகின்றன. இதே போன்றுதான் இத்தாலியின் உல்லாசப் பயணக் கப்பலும் மறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இத்தகவலை அமெரிக்க அதிகாரிகள் மர்மமாகவே மூடி மறைத்து விட்டனர் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

விஞ்ஞானம் விடை காணாத விசயங்கள் இன்னும் பல இருக்கின்றன. காலப்போக்கில் விடைகள் கிடைக்கலாம்.

அப்படித்தான் இந்தக் கடல் மர்மமும் காலம் காலமாய் நீடிக்கிறது. •

## சில மனிதர்கள் மாறிவிட்டனர் நாய் மட்டும் மாறவில்லை

நாய் நன்றியுள்ளது. மனிதர்கள் கூட நன்றி மறக்கும் காலமிது.

நல்ல காலமாக நாய்கள் இன்னமும் குணம் மாறாமல் இருக்கின்றன.

நாயின் நன்றிக்கு உதாரணமான் உண்மைச் சம்பவங்கள் பல உண்டு.

சமீபத்தில் அமெரிக்க நியூயோர்க் பகுதியில் நடந்த சம்பவமும் மேலும் ஒரு உதாரணம்.

அது இதுதான்;

நியூயோர்க்கைச் சேர்ந்த டானியல் ஸ்கொட் என்ற 82 வயது முதியவர் தனது வளர்ப்பு நாயுடன் செனிகா கவுண்டி பிரதேச வனத்துள் உலாவப் போனார்.

வழியைத் தவற விட்டு அடர்ந்த வனத்துள் அகப்பட்டுக் கொண்டார்.

இவர் சென்ற இடம் தெரியாமல் உறவினர் எங்கும் தேடினர்.

3 நாட்களின் பின்னர் அடர்ந்த வனத்துள் நாயொன்று குரைக்கும் சப்தம் கேட்டு, தேடுவோர் சென்று பார்த்த போது, களைத்துப் போய் படுத்திருந்த எஜமானின் அருகே இருந்த இந்த நாய் குரைத்துக் கொண்டிருந்ததைக் கண்டனர்.

ஸ்கொட்டைக் கண்டு பிடிக்க அவர் வளர்த்த அந்த நாயே உதவியிருக்கிறது. பசி, தாகம் எதையுமே பொருட்படுத்தாமல் அந்த நாய் ஸ்கொட்டின் அருகிலேயே அசையாமல் இருந்ததாகத் தெரிகிறது.



## ஒட்டகத்தைக் கட்டிக்கோ கட்டி முத்தம் கொடுத்துக்கோ



சாகசக் காட்சிகளில் ஈடுபடும் ஒட்டகத்துக்கு உடல் நிலை சரியில்லை. நலம் விசாரித்து அன்புகாட்டும் பயிற்சியாளருக்கு முத்தமிட்டு தனது நலம் உணர்த்துகிறது அன்புள்ள ஒட்டகம்.

## கழுத்தால் உயர்ந்த புகழ்

உலகப் பலசாலிப் போட்டி சமீபத்தில் சீனாவில் நடந்தது. சீனாவைச் சேர்ந்த யூபிங் தனக்கு முன்பிருந்த பலசாலிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு உலக சாதனை படைத்துவிட்டார்.



16 மி.மீ. தடிமன்கொண்ட இரும்புக் கம்பியைத் தன் கழுத்துப் பலம் மூலம் வளைத்தெறிந்து அனைவரையும் வியக்க வைத்துவிட்டார். யூபிங் இந்தச் சாதனையைப் படைப்பதற்கு முன்னர் உலக பலசாலியாக இருந்தவர் நியூசிலாந்தைச் சேர்ந்த ரிகு கிரி என்பவர்.

இப்போது யூபிங் தான் உலக பலசாலி.

## செல்வன் ரெடியாகிறான்

குற்றாலத்தில் ஆரம்பமாகி வேகமாக நடந்து வருகிறது செந்தமிழ் செல்வன் படப்பிடிப்பு.

பிரசாந்த் நாயகன், மதுபாலா நாயகி. மதுபாலா தாராளமாக நடித்து போதையூட்டுகிறாராம்.

பெயருக்கேற்ற கவர்ச்சி.

தைப்பொங்கல் வெளியீடாக செந்தமிழ்ச் செல்வன் திரைக்கு வரத் தயாராகிறான்.

## திருநாளன்று திரையில் வரத் திட்டம்!

சத்யராஜ் கதாநாயகனாக நடிக்க அண்ணாநகர் முதல் தெரு, வாழ்க்கை சக்கரம் போன்ற படங்களைத் தயாரித்தவர் திருப்பூர் மணி.

இப்போது சத்யராஜ் கதாநாயகனாக நடிக்க, புதிய படம் ஒன்றை திருப்பூர் மணி தயாரிக்கிறார்.

படத்திற்கு "வண்டிச் சோலை சின்ராசு" என்று பெயர் சூட்டியுள்ளார்கள்.

சத்யராஜ் ஜோடியாக சுகன்யா நடிக்கிறார்.

இன்னொரு ஜோடியும் உண்டு. அது சிவரஞ்சனி, ஆனந்தராஜ். கவுண்டமணி ஆகியோரும் உண்டு.

இசையமைக்கப் போவது ஏ.ஆர்.ரகுமான். பாடல்கள் வைரமுத்து.

இயக்கப் போவது மனோஜ்குமார்.

இம்மாதம் ஐந்தாம் தேதி குற்றாலத்தில் படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. தைப்பொங்கல் தினத்தன்று திரையிடுவதற்குத் திட்டமிட்டு, படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது.







## வெளுத்து வாங்குகிறார்

முன்னாள் கதாநாயகன் விஜயகுமார் சமீபத்தில் இலங்கைத் தொலைக்காட்சியில் என் கேள்விக்கு என்ன பதில் என்றொரு படம் காண்பிக்கப்பட்டது. விஜயகுமார்தான் ஹீரோ. ரஜனி இரண்டாவது தான்.

இப்போது விஜயகுமார் குணசித்திர நடிகர். கதாநாயகனாக இருந்தால் கூட இத்தனை படங்களில் நடித்திருக்க முடியாது.

பாரதிராஜாவின் இயக்கத்திலும் முதன் முதலாக நடிக்கிறார். கிழக்குச் சீமையிலே படத்தில் விஜயகுமார் நடிப்பைப் பார்த்துப் பாரதிராஜாவே பாராட்டுவாராம்.







## ரோஜாவின் ஒத்திவைப்பு!

இயக்குநர் செல்வமணிக்கும் ரோஜாவுக்கும் திருமணம் இதோ, அதோ என்று பேசப்பட்டு இப்போது ஓய்ந்து விட்டது. இன்னும் நடிக்க வேண்டும். இன்னும் உயர வேண்டும். அதற்குப் பின்னர்தான் திருமணம் என்று ரோஜா உறுதியாகக் கூறிவிட்டாராம்.

குற்றப்பத்திரிகை படம் கிழிந்த பத்திரிகையாக மாறிப் போனதால் மனம் உடைந்துள்ள செல்வமணியும் ஓகே சொல்லி விட்டாராம்.

இருவரும் உயர்ந்தபின் இணைய நினைக்கிறார்கள்.

## விளையாட்டுக்கு முதலிடம்

தேசபக்தி-தெய்வபக்தி, தேகபக்தி இவைதான் ஒரு மனிதனை முழுமையாக வாழச் செய்கிறது.

இதுதான் கதையின் கரு. இதைச் சுற்றிதான் சம்பவங்களைப் பின்னிப் படம் எடுக்கிறார்கள்.

படத்தின் பெயர் ஓட்டப் பந்தயம்.

விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து காட்சிகள் அமையுமாம்.

புதிய முகங்கள் நவராஜ் செய்யையா, அனுப்பிரியா ஜோடியோடு படம் வளர்ந்து வருகிறது.

அனுப்பிரியா புது முகம் என்றாலும் கவர்ச்சி உள்ள அறிமுகம்.

## அமலாவின் பொழுது!

அமலாவை இரசிகர்கள் ஒருவேளை மறந்திருக்கக்கூடும். அவர் இப்போது நடிகர் நாகார்ஜுனாவுடன் இனிதாக இல்லறம் நடத்தி வருகிறார்.

அனாதைப் பிராணிகளுக்காக ஒரு அமைப்பைத் தோற்றுவித்தும் பொழுதைப் பயனுள்ளதாகக் கழித்து வருகிறார்.

## குரலில் குழந்தை

நடிகை மோகினி இதுவரை நடித்த படங்களில் சொந்தக்குரலில் பேசியது கிடையாது.

பேச ஆசைதான். பிறகென்ன தடை? அவரது குரல் குழந்தைத்தனமாக இருப்பதால் இன்னும் ஒரு இரண்டு வருசம் போகட்டும் என்கிறார்.

## மினி சினி

★ சின்னச் சின்ன ஆசை.... பாடலின் இடையில் வரும் ஏலேலோ... என்ற ஹம்மிங் குரலுக்குச் சொந்தக்காரர் ஏ.ஆர்.ரஹ்மான். இவர் விரைவில் தான் இசையமைக்கும் படமொன்றில் முழுப்பாடல் ஒன்றை சொந்தக் குரலில் பாடவுள்ளார்.

★ ஜூனியர் விகடனில் வெளிவந்த 'சீவலப்பேரி பாண்டி' திரைப்படமாக எடுக்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து ஆனந்த விகடனில் வெளிவந்த 'மடிசார் மாமி' என்ற தொடர் திரைப்படமாகப் போகிறது. அனுராதா ரமணனின் சிறை என்ற நாவலை படமாக்கிய, ஆர்.சி.சக்தியே இப்படத்தையும் இயக்கவுள்ளார்.

★ இசையமைப்பில் முன்னணியில் இருந்த மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் ராமமூர்த்தி இருவரும் பிரிந்து தனித்தனியே இசையமைத்தனர். தற்போது இன்னிசை வேந்தர்களான சங்கர்-கணேஷ் இருவரும் பிரிந்து, தனித்தனியே இசையமைக்கப்போகிறார்கள்.

★ மலையாள சுப்பர் ஸ்டார்களில் ஒருவரான மம்முட்டி நர்த்திபுதரா என்னும் ஹிந்திப்படமொன்றில் நடித்தார். இவரைத் தொடர்ந்து பிரியதர்ஷனின் இயக்கத்தில் மோகன்லால் ஹிந்தித் திரையுலகில் கால்பதிக்க வைக்கவுள்ளார்.

★ பாரதிராஜாவால் புது நெல்லு புது நாத்து படத்தில் அறிமுகமான சுதரா, அதற்குப் பிறகு ஓரிரு படங்களில் நடித்தார். மீண்டும் பாரதிராஜாவின் இயக்கத்தில் கிழக்குச் சீமையிலே படத்தில் நடித்து வருகிறார். முதற்படத்தில் நெப்போலியனின் மகளாக நடித்த சுதரா, இந்தப் படத்திலும் நெப்போலியனின் மகளாக நடிக்கிறார்.

★ கல்தூண், அந்த ஒரு நிமிடம் உட்பட, ஆறு படங்களை மேஜர் சுந்தர்ராஜன் இயக்கியுள்ளார். கற்பகம் வந்தாச்சு என்ற படத்தைத் தயாரித்து வரும் இவர், விரைவில் ஒரு முன்னணி நடிகரை வைத்து ஒரு படத்தை இயக்கவுள்ளார்.

★ வேகமான துள்ளிசைப் பாடல்களைப் பாடுவதைக் காட்டிலும், சோகமான தத்துவமான பாடல்களைப் பாடுவதுதான் எனக்குப் பிடிக்கும் என்கிறார் கே.ஜே.ஜேசுதாஸ்.

★ சுரேஷ் மேனனின் பாசப்பறவைகள் படத்தில் ஏழு பாடல்கள் இடம் பெறவுள்ளது. இந்த ஏழு பாடல்களில், ஆறு பாடல்களைப் பாட, ஆறு புதிய பாடகிகளை அறிமுகம் செய்யவிருக்கிறார் இப்படத்தின் இசையமைப்பாளர் நரசிம்மன்.

★ சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், இமயமலை, அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து ஆகிய வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இரண்டரை மாத இச்சுற்றுப் பயணத்தின் பின்னர்தான் இவர் நடிக்கும் வீரா படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகும்.

★ தெலுங்குத் திரையுலக நடிகர்களில் என்.டி. ராமராவ், நாகேஸ்வரராவ் ஆகிய இருவருக்கும் சொந்தமாகப் படப்பிடிப்பு நடத்தும் ஸ்ருடியோக்கள் உள்ளன. இவர்களை அடுத்து தெலுங்குப்பட சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவி பிரமாண்டமாக ஸ்ருடியோ ஒன்றைக் கட்டி வருகிறார்.

★ அரண்மனைக்கிளி படத்தின் மூலம் அறிமுகமானவர் அஹானா. அப்படத்திற்குப் பின்னர் வேறு பட வாய்ப்புக்களின்றி இருந்தார். தற்போது இரு புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.



ஏறியே
பூங்கொடி
படருமோ?
கும் அழகுகள்
ம் தாங்குமோ?
சம் நில்லடி!
உன்னிடம்
ஆனதே!!
-ரசிகன்-



பல்லவி

## இவர்கள் இப்படி

### இமயத்தில் பற்றுதல்

கமலஹாசன் வீட்டில் ஒரு வீடியோ நூலகம் இருக்கிறது.

சிவாஜி நடித்த அத்தனை படங்களிலும் வீடியோ கசட்டுக்களை சேகரித்து அங்கு பாதுகாப்பாக வைத்துள்ளார் கமல்.

நடிப்புலக இமயத்தின் மீது கமலுக்கு எப்போதுமே பற்றுதல் உண்டு.

### ஆமா? இல்லையா?

ஹேமநடிகை சிரஞ்சீவி அரசியலில் ஈடுபடமாட்டேன் என்று ஏராளமாக ஒருகதை. பலர் எழுதுகிறார்கள். ஆம் சொல்லலை சரிதான்.

### படம் பார்த்து பயிற்சி!

வீட்டில் ஓய்வாக இருக்கும் போது, ரஜனி நடித்த படங்களை வீடியோவால் போட்டுப் பார்த்துக் கொண்டிருப்பாராம் சரவணன்.

சண்டைக் காட்சிகளில் ரஜனி எப்படியெல்லாம் நடித்திருக்கிறார் என்ற நுணுக்கங்களை சரவணன் கூர்ந்து கவனிக்கிறார்.

### தற்கொலையான தங்கை!

'அன்புள்ள தங்கச்சி' என்று முன்னர் ஒரு படம் வந்தது.

இப்போது 'உங்கள் அன்பு தங்கச்சி' என்றொரு படம் வரப்போகிறது.

அண்ணனின் வாழ்வுக்காகத் தங்கை தற்கொலை செய்து கொள்கிறாள். கதையின் கரு அதுதான்.

ராஜா ரவீந்தர், கீர்த்தனை ஜோடி நடிக்கும் உ.அ. தங்கச்சி படுவேகமாக வளர்ந்து வருகிறார். பாடல்கள் வாலி. இசை சந்திரபோஸ்.

### கொடுப்பதோடு சரி

தங்கர்களை நடிகர்களில் வித்தியாசமானவர் செந்தில்.

அதாகப்பட்டது தான் மற்றவர்களுக்கு செய்யும் உதவிகளை வெளியே சொல்லக் கூச்சப்படுவார்.

## சினிமா விமர்சனம்

### மூன்றாவது கண்

திகில் படங்கள் எடுப்பதில் தனி முத்திரை பதித்தவர் இயக்குநர் மணிவண்ணன். நூறாவதுநாள், 24 மணிநேரம் போன்ற அவரது முந்தைய படங்கள் பரபரப்பாகப் பேசப்பட்டவை.

இப்போது மூன்றாவது கண் வந்திருக்கிறது. தொய்வில்லாத படம்.

காதலனுடன் ஓடிப் போகத் திட்டம் போடும் மோனிஷா கேட்அருகே வரும்போது நாய் துரத்தும் காட்சியில் இருந்து இறுதிக் கட்டத்தில் மோனிஷாவைக் கொல்ல நிழல்கள் ரவி கோட்டாரியுடன் துரத்தும் காட்சிவரை விறுவிறுப்புத் தொடர்கிறது. தன் மனைவியை உணர்ச்சிவசப்பட்டுக் கொலை செய்கிறார் நிழல்கள் ரவி. அதை மோனிஷா கமராவில் கிளிக் செய்து விடுகிறார். அதனால் நிழல்கள் ரவி மோனிஷாவைத் துரத்துகிறார்.

இடையில் இரு கொலைகள். சரத்குமார் இடைக்கிடையே வந்தாலும் படம் முழுதும் அவர் இருப்பதுபோன்ற நிறைவு. இன்ஸ்பெக்டர் வேசம்.

வில்லனாக வந்து மன்சூர் பரபரப்பூட்டுகிறார்.

திகில் பட ரசிகர்களுக்குத் திகட்டாத விருந்து.

### வெளிநாடு செல்ல முன்னர் ரஜனி வெளியிட்ட அறிவிப்பு!

ரஜனிகாந்த் வெளிநாடு செல்வதற்கு முன்னர் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அவரோடு பஞ்சு அருணாசலமும் இருந்தார்.

பத்திரிகைகளில் பல்வேறு செய்திகள் வருகின்றன. நான் அடுத்து நடிக்கவுள்ள படத்தைப் பற்றி நானே அறிவிக்கிறேன். என்னைத் திரையுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் பாலசந்தர். வளர்த்தது பஞ்சு அருணாசலம். அவரது கவிதாலய படத்தில் நான் நடித்திருக்கிறேன். அவரது சொந்தத் தயாரிப்பில் நான் நடிக்கப்போகும் ஏழாவது படம்தான் 'வீரா'.

நான் மட்டுமே தனியாக வெளிநாடுகளுக்குச் செல்கிறேன். ஓய்வுக்காகவே இந்தப் பயணம். கலை நிகழ்ச்சிகள் நடக்கும் நோக்கம் கிடையாது. வெளிநாட்டுப் பயணம் முடித்து வந்தவுடன் நான் முதலில் நடிக்கப் போகும் படம் 'வீரா' என்று ரஜனி அறிவித்தார்.

வெளிநாடுகளில் ரசிகர்களின் தொல்லையை எப்படிச் சமாளிப்பீர்கள் என்று கேட்டதற்கு ரஜனி சொன்ன பதில்- "பாட்ஷா படத்தில் வந்தது போல மீசையையும், தாடியையும் வளர்த்துக் கொண்டு ஒரு கண்ணாடியை மாட்டிக் கொண்டால் யாராலும் என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியாது"




### நேரடியாகவே அவர் பெயரில்.......

தமிழகப் பொலிஸ் அதிகாரி தேவாரத்தை மனதில் வைத்துக் கொண்டு, வாக உருவாக்கிய படம்தான் 'கேப்டன் வெற்றிவேல்'.

அந்தப் படம் வெள்ளிவிழாக் கண்டதால், இப்போது மொழிமாறும் படமொன்றுக்கு 'கேப்டன் தேவாரம்' என்று நேரடியாகவே, அதிகாரியின் பெயரைச் சூட்டிவிட்டார்கள்.

மலையாளத்தில் இருந்து தமிழுக்கு மொழி மாறிவரும் அந்தப் படத்தின் கதாநாயகன் மோகன்லால்.

ஏற்கனவே மோகன்லால் நடித்த 'அரசன்', 'அசோகன்' போன்ற படங்கள் தமிழில் மொழிமாற்றப்பட்டு வந்திருக்கின்றன.

### வண்ணத் திரை!

திரை என்று ஒரு சினிமா இதழ் கலைஞர் கருணாநிதியின் குடும்பப் பத்திரிகையில் ஒன்று.

வண்ணத்திரை என்ற பெயரில் ஒரு படம் தயாராகிவருகிறது.

நாயகர்கள் மூன்று கதாநாயகிகள். அத்தனை பேரும் புதுமுகங்கள். ரும் உண்டு. மூர்த்தி, குமரிமுத்து, குண்டு கல்யாணம்.

விரைவில் வண்ணத்திரை படத்தை திரையிடத் திட்டமிட்டுள்ளார்கள்.

## அது வேறு இது வேறு!

குஷ்பு வீட்டில் இருக்கும் போது தொலைபேசி அழைப்புக்கள் வந்தால் தானே பேசுகிறார். புகைப்படம் எடுப்பதோ, பேட்டி எடுப்பதோ எதுவானாலும் படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்கு வரச்சொல்லி விடுவார்.

குடும்பம் வேறு, சினிமா வாழ்க்கை வேறு என்று அதற்கான காரணத்தைச் சொல்லுகிறார்.

கு
ஷ்
பு

## டு சொல்லுகிறோம்

திரையுலகைக் கலக்கிய பதினாறு யகிக்கு இப்போது டல்லான நேரம். கள் பப்படங்கள் ஆனதால், ரேட்டை ருக்கிறாராம். முன்னர் 35 லட்சம். வாங்குவது 18 இலட்சம் என்றாலும் க.

ான இளம் நடிகரோடு இணைத்துப் ட்டதால் தன் புகழ் பாதிக்கப்பட்டு விநோத நடிகை வருத்தப் ராம். "நிச்சயமாச் சொல்கிறேன் டயில் எதுவும் இல்லை." என்கிறார். ப்படிச் சொல்ல ஒரு சினிமாவுலகக் இப்படிச் சொல்கிறார். "அந்த அவர்கள் இடையே எதுவும் த்தான்." என்ன சமயமோ. க்கு வேறு வேலை இல்லை.

னைக்கிளி நாயகி சென்னையில் நட்சத்திர ஹோட்டலில் தங்கி, ாளர்களுக்கு போன் கோல் போட்டு கேட்டுப்பார்த்தார். அவர்கள் பானதோடு சரி. ஒரு படத்தில் வாய்ப்பு வந்திருக்கிறது. வெறுப்பில் திரும்பிவிட்டார். நவம்பரில் வந்து யப் பயன்படுத்துவாராம்.


கை தன் கணவரை பேபி என்று ாகக் கூப்பிடுகிறாராம்.

நடிகை புதிய வீட்டில் குடியேறிய என்னவோ, பட வாய்ப்புக்கள் விட்டன. மகேந்திரனாரும் புது பிடித்துக்கொண்டதால் அர்ச்ச பாடு பெரும்பாடாம்.

டிகைக்கு ஒரு ஆசை. உடம்பெல்லாம் டு மகாராணி போல், ஒரு படத்தில் வேண்டுமாம். உடைக்குப் பதிலாக ப் போட்டே நடிக்கவைத்து க்கப் போகிறார்கள்.

படமொன்றில் இதுவரை இல்லாத ரோஜா நடிகை ஆடைக்குறைப்புச் ளாராம். கவர்ச்சிப் போட்டியில் காணாமல் போகின்றன.

டுகளுக்கு 'கலைவிழா' என்று போகும் நடிகைகள் சில நேரங்களில் கலை ள்போல் ஆகிவிடுவதால், அழைத்துப் ர்கள் அலுத்துப்போகிறார்கள். , பாட்டமா, தேரோட்டமா கதை . வெளிநாடு என்பதால் துணிவும்





தோகை கொஞ்சம்
விலகியதோ
நாணமயில் இவள்
நாணம் கொண்டது
அதுதானோ?
அழகுகளே
அணிகலன்களாய்
இருக்கையிலே
ஆடைகள்
எதற்கென்று
தோன்றியதோ?

# பாவ மூட்டை

மேட்டு மங்கலம் என்ற ஊரில் பூபதி என்ற பண்ணையார் ஒருவர் இருந்தார்.

அவர் ஒரு முரட்டுப் பேர்வழி. மனிதாபிமானம் என்பது அவரிடம் கிடையவேகிடையாது.

ஏராளமான நிலங்கள் அவருக்குச் சொந்தமாக இருந்தாலும், அவற்றில் எல்லாம் அவருக்கு மனநிறைவு ஏற்படாமல், மற்றவர்களின் நிலங்களுக்கும் ஆசைப் பட்டார்.

ஏதாவது ஒரு சூழ்ச்சி செய்து ஏழை, எளிய மக்களின் நிலங்களை அபகரித்து தன் நிலங்களோடு சேர்த்துக் கொள்வதில் கைதேர்ந்தவராக ஆகிவிட்டார்.

அந்த ஊரில் வித்யா என்ற பெண் இருந்தாள். அவள் மிகவும் ஏழை, கணவனை இழந்தவள். அவள் ஒரு சந்தர்ப்பத்தில் பூபதியிடம் சிறிய தொகை ஒன்றினைக் கடனாகப் பெற்றிருந்தாள். அதை அவளால் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. இதனால் ஆத்திரம் கொண்ட பூபதி, வித்தியாவின் நிலத்தை அபகரித்துத் தன் நிலத்தோடு சேர்த்துக் கொண்டார்.

அந்த நிலத்தைத் தவிர, வேறு எந்தச் சொத்தும் இல்லாத ஏழைப் பெண் வித்யா. தன் நிலத்தைக் கொடுத்து விடுமாறு கெஞ்சினாள். அழுதாள், புலம்பினாள். ஆனால் எதற்காகவும் பூபதியின் மனம் இளகவில்லை.

ஓர் ஏழைப் பெண்ணிற்கு அநியாயம் நடந்திருப்பது தெரிந்தும், பூபதிக்கு அஞ்சிய ஊர்மக்கள் வித்தியாவிற்கு உதவக்கூட முன்வரவில்லை.

தன் நிலத்தை இனித் திரும்பப் பெறமுடியாது என்பதைத் தீர்க்கமாக உணர்ந்தாள் வித்யா. ஒரு தினத்தில் ஒரு சாக்குப் பையை எடுத்துக்கொண்டு பண்ணையார் பூபதியின் வீட்டிற்குப் போனாள்.

அவரிடம் அந்தச் சாக்கு நிறைய என் நிலத்து மண்ணை எடுத்துச் செல்லவாவது அனுமதிப்பீர்களா? என்று கேட்டாள்.

ஒரு சாக்கு மண்ணினால் தனக்கு எந்த இழப்பும் வரப்போவதில்லை என்று நினைத்த பூபதி, "ஒரு சாக்கு மண்தானே? தாராளமாக எடுத்துச் செல்?" என்று சொன்னார். உடனே பூபதியும், வித்யாவும் அந்த நிலத்திற்குச் சென்றார்கள்.




பூபதியின் கண் எதிரிலேயே ஒரு சாக்கு நிறைய தனது நிலத்து மண்ணை அள்ளி மூட்டையாகக் கட்டினாள் வித்யா. அதைத் தூக்கித் தன் தலையில் வைக்க முயன்றாள். மூட்டை நல்ல கனமாக இருந்ததால் அவள் ஒருத்தியால் அதைத் தூக்க முடியவில்லை.

"ஐயோ மூட்டை மிகுந்த கனமாக இருக்கிறது. இதைத் தூக்கி என் தலையில் வைக்க உதவுகிறீர்களா?" என்று கேட்டாள். பூபதி அந்த மண் மூட்டையைத் தூக்கி அவள் தலையில் வைக்க முயன்றார். அவரால் முடியவில்லை.

"இந்த ஒரு மூட்டை மண் எவ்வளவு கனமாக இருக்கிறது. என்னால் தூக்க முடியவில்லை," என்றார் பூபதி.

உடனே வித்யாவிற்குக் கோபம் பொங்கியது.

"பாவி, இதில் இருப்பது மண்ணல்ல, பாவம். இந்த ஒரு மூட்டை பாவச் சுமையையே உன்னால் தூக்க முடியவில்லையே. என் நிலத்தில் இது போன்று, எத்தனை மூட்டை மண் இருக்கும்? என் வாயிலும், வயிற்றிலும் அடித்து இந்த நிலத்தை அநியாயமாக எடுத்துக்கொண்டாயே? அவ்வளவு பெரிய பாவச் சுமைகளையும் நீ எப்படித்தான் தூக்கிச் சுமக்கப் போகிறாயோ?" என்று முழங்கினாள் வித்யா.

அதைக் கேட்ட பூபதி முதலில் திடுக்கிட்டார். பிறகு சிந்தித்தார்.

வித்யா வயிறு எரிந்து சொன்னது எத்தனை உண்மை என்று பட்டது. அன்றே அவரது அரக்கத்தனம் அவரை விட்டு ஓடியது.

வித்தியாவிடம் மட்டுமன்றி, இதுவரை பிடுங்கிய நிலத்தையெல்லாம் அவற்றின் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுத்து, நல்ல மனிதர் என்று பெயர் எடுத்தார் பூபதி.

குழந்தைகளே! அடுத்தவரை ஏமாற்றிப் பிழைப்பது எவ்வளவு கொடிய செயல். இதனால் பிறர் மனம் எத்தனை துன்பப்படும் என்பதைப் புரிந்து கொண்டீர்களா?

## சிறுகதைக்குள் விடுகதை



ஒரு கூட்டினுள் உள்ள கிளிகளில், சில வெளியே பறந்து சென்றன. பறந்து செல்லும் கிளிகளில் முன்னே பல கிளிகளும், பின்னே ஒரு கிளியும் பறந்து சென்றது. பின்னே செல்லும் கிளி, முன்னே செல்லும் கிளி ஒன்றைப் பார்த்து நாம் எல்லோரும் கூட்டினால் எத்தனை பேர் இருக்கிறோம் எனக் கேட்டது. அதற்கு முன்னே செல்லும் கிளி சொன்னது,

நாங்களும்
எங்களளவும்
எங்களில் பாதியும்
பாதியில் பாதியும்
உன்னையும் சேர்த்தால் நூறு

என்றது. எனவே பறந்து சென்ற கிளிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

*சரியான விடை: 36.*

எம்.எம். உவைஸ்
மத்திய மகாவித்தியாலயம்
காத்தான்குடி-04.

# பாப்பா முரசு

## அனுபவ மொழிகள்!

- பயிருக்கு முள் வேலி. பணத்திற்கு தருமம் வேலி. -கிருபானந்த வாரியார்.
- செல்வம் என்பது சிந்தனையின் நிறைவாகும். -குமரகுருபரர்.
- நல்வாழ்வு என்பது அன்பினால் உந்தப்பட்டு, அறிவினால் வழிகாட்டப்படுவதொன்றாகும். -பேட்டன் றசல்.
- கால் தடுமாறினால் சமாளித்துக் கொண்டு நிற்கலாம். ஆனால் நா தடுமாறினால் மீளவே முடியாது. -பெஞ்சமின் பிராங்கிளின்.
- அச்சம் என்கின்ற வெள்ளம் உட்புகாதவாறு நாம் துணிவு என்ற அணைகளை தொடர்ந்து கட்டிக்கொள்ள வேண்டும். -மாட்டின் லூதர் கிங்
- தூய மனதில் உதிக்கும் எண்ணம் விரைவில் செயலாக வடிவெடுக்கின்றது. உள்ளத்தை வென்றவன் உலகை வென்றவனாகின்றான்.

தொகுப்பு- க. நிமலதாசன்
மட்/மாங்காடு ச.வி
செட்டிபாளையம்.

## இப்படித்தான் இருக்க வேண்டும்

| | |
|---|---|
| மதிக்க வேண்டியவை: | முதுமை, சட்டம். |
| நேசிக்க வேண்டியவை: | தூய்மை, நேர்மை. |
| புகழ வேண்டியவை: | அழகு, அறிவு. |
| வளர்க்க வேண்டியவை: | மனவுறுதி, இனிய சுபாவம். |
| நிலைநிறுத்த வேண்டியவை: | வாக்குறுதி, நட்பு. |
| அடக்க வேண்டியவை: | நாக்கு, கோபம். |
| கவனிக்க வேண்டியவை: | பேச்சு, நடத்தை. |
| தடுத்துக் கொள்ள வேண்டியவை: | பொய், பொறாமை. |


பி. பிரசிலா-பூனாகலை.

## வர்ணம் தீட்டும் போட்டி இல-9

**பரிசுக்குரியவர்**
செல்வன். வே.ராமு
புனித மிக்கேல் கல்லூரி-மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்**
செல்வி. கிருபாஷிணி சுந்தரலிங்கம்
நு/நல்லாயன் மகளிர் கல்லூரி-நுவரெலியா.
பஸ்தியா அனஸ்
அல்/ஹஸனியா மகா வித்தியாலயம்-மக்கொன.
மதிவண்ணன்
மட்/ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயம்-சித்தாண்டி.
எம்.ரஞ்சன்
வா/இந்துக்கல்லூரி-வாழைச்சேனை.
து.துஷ்யந்தன்-க.க.வித்தியாலயம்-நாவலப்பிட்டி.
டி.யூட்றோசான்-விஜயரத்ன, மத்தியமகா வித்தியாலயம்-நீர்கொழும்பு.
செல்வி. அஞ்சனா இரெங்கசாமி-மகளிர் மகாவித்தியாலயம்-வவுனியா.
எம்.எஸ்.எம். நுஸைர்-மீராபாலிகா மகாவித்தியாலயம்-காத்தான்குடி.
ச.அரவிந் ஜெயகுமரன்-புனித தோமஸ் கனிஷ்ட பாடசாலை-கொழும்பு-03.
எஸ்.ஜெயலலிதா-நல் இளைப்பாற்றி மகளிர் பாடசாலை-நுவரெலியா.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு சிறந்த வர்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் தீட்டப்பட்ட படம் ஒன்றுக்குப் பரிசு ரூபா 25/- காத்திருக்கிறது. தபாலட்டையில் படத்தை ஒட்டி அனுப்பவும். அனுப்பவேண்டிய கடைசித்திகதி 30.10.1993.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 12
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

## தேசிய ஒற்றுமை

*ஈழம் எங்கள் தாய் நாடு*
*இனிய இன்பத் தேன் வீடு*
*நாளும் போற்றி வாழ்வோமே*
*நன்றி நன்மை செய்வோமே!*

*வங்கக் கடலின் அரவணைப்பில்*
*வடிவாய் முத்துத் தோன்றிடவே*
*பொங்கும் உணர்வு மேலோங்க*
*போற்றி செய்து வாழ்வோமே!*

*நாட்டில் உள்ள பொருளெல்லாம்*
*நமது இனிய சொத்தாகும்*
*வீட்டைப் போன்று இவை காத்து*
*வாழ்வோம் ஒன்றாய் கனி சேர்த்து!*

*ஒற்றுமை ஓங்க ஒருதாயின்*
*குழந்தைகளாகக் காலமெல்லாம்*
*கற்றுத் தேர்ந்து கலைபயின்று*
*வாழ்வோம் அன்பு வழி பார்த்து!*

செல்வி சந்திரசேகரம் மீனலோஜினி
தி/ஸ்ரீ சண்முக வித்தியாலயம்
திருகோணமலை.

## விடுகதைகளும் விடைகளும்

1. பச்சை வீட்டுக்கு சிகப்பு வாசல். அது என்ன?
2. பரட்டைத்தலை மாமியார். பம்பரம் போல் மருமகள். அது என்ன?
3. நாங்கள் நினைக்காமல் செய்யும் வேலை இரண்டு. அது என்ன?
4. முக்காடு போட்டால் மூலையிலிருப்பான். காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடுவான். அவன் யார்?

**விடைகள்**

1. கிளி
2. இலந்தைப்பழம்
3. மூக்சிடல், கண்சிமிட்டல்
4. பேனை

த.கோகிலன்
தெமட்டகொடை.

1. மஞ்சள் உறைக்குள் மறைந்திருந்து மக்கள் பசி தீர்ப்பான். அவன் யார்?
2. சரியான நீதிபதி நீதி வல்லவர். அவர் யார்?
3. ஒரு அம்மாவிற்கும் அப்பாவிற்கும் பன்னிரெண்டு பிள்ளைகள். அது என்ன?
4. ஒரு குளத்தில் ஒரு பொருள் விரிந்து கொண்டே இருக்கும். அது எது?
5. ஒரு பிள்ளைக்கு ஆயிரம் கண். அவன் யார்?
6. காலையிலும் மாலையிலும் திறந்து கொண்டே இருப்பான். இரவில் மூடி விடுவான். அவன் யார்?
7. குளம் நிற்க நிற்க கொக்கு வத்த வத்த. அது என்ன?
8. ஒரு மனிதன் ஓடி ஓடி வந்தான். கோட்டை கழற்றி விட்டு, கிணற்றுக்குள் பாய்ந்தான். அவன் யார்?

1. அரிசி
2. தராசு
3. கடிகாரம்
4. தாமரை மலர்
5. அன்னாசிப்பழம்
6. கதவு
7. விளக்கு
8. வாழைப்பழம்

செல்வி.ப. நிஹானா
பேருவளை.

1. சிவப்புப் பையன் சில்லறைக் காசுகள். அது என்ன?
2. சோற்றைக் கொட்டி விட்டுப் பானையைச் சாப்பிடுவார். அவர் யார்?
3. மாப்பிள்ளையே சிறக்க வைக்கும் முத்துப் பல்லை ஆட்ட வைக்கும். அது என்ன?
4. வெய்யிலில் அடங்கிக் கிடப்பான். மழையில் கூத்தாடுவான். அவன் யார்?
5. வெள்ளி மாளிகையின் கதவைத் திறந்தால் தங்கம் மின்னுகிறது. அது என்ன?
6. மொட்டை மரத்தில் 300 காக்கா. அது என்ன?
7. போகும் இடமெல்லாம் கோடு கிழித்து விடுவான். அவன் யார்?

1. செத்தல் மிளகாய்
2. பப்பாளிப்பழம்
3. முருக்கு
4. தவளை
5. முட்டை
6. சந்தை
7. நத்தை

செல்வி ஸித்திரிஸா மன்சூர்
பேருவளை.

## சிறுவர் சிரிப்பு



# தேன் கிண்ணம்

## கால்த்தடங்கள்

ஓ.....
இது!
கால் தடங்கள்
அல்ல
என்
கண்ணீர்ச்சுவடுகள்
●●●
தொலைந்து போன
என்
இதயத்தைக் காட்டும்
கல்லறையின் சமாதிகள்
●●●
பூமியின்
காதல்வெற்றிக்கு
நான் இடும்
தோல்வி ஒத்தடங்கள்
●●●
எரிந்த என்
காதலியின்
பல்கலைக்கடிதத்திற்காக
நான்
சேர்த்து வைத்திருக்கும்
பட்டப்படிப்புப் புத்தகங்கள்
●●●
ஓ....
இது!
கால் தடங்கள்
அல்ல
என்
கண்ணீர்ச் சுவடுகள்
●●●

■ வி.சுதாகர்
அக்கரைப்பற்று-08.

## சமாதானப் பறவைகள்!

இந்தத் தேசம்
நிம்மதிச் சுதந்திரத்தை
களவு கொடுத்துவிட்டது!
★★★
துப்பாக்கியின்
தும்மலுக்கும்...
சப்பாத்தின்
சத்தத்திற்கும்...
அடிமையாகிவிட்டது!
★★★
அட்டூழியங்கள் தான்
இந்தத் தேசத்தின்
அன்றாடங்கள்!
★★★
ஈனக்குரல்கள் தான்
இந்தத் தேசத்தின்
"தேசிய கீதங்கள்"
★★★
இரத்த ஆறுதான்
இந்தத் தேசத்தின்
நீர் ஊற்றுக்கள்
★★★
சடலங்கள் தான்
இந்தத் தேசத்தின்
"சட்டைகள்"

ஆனால்
ஒப்பந்தங்களும்
யுத்த நிறுத்தங்களும்
சுதந்திரத்தைத் தேடி-
அலையும்
"சமாதானப் பறவைகள்."

■ - ஆரையம்பதி. த.மலர்ச் செல்வன்-

## கண்ணீர் துளிக்குள்.....

காதலியின்
கண்ணீர் துளிகள்
சில
கவிதைகளாக:-

"காதலனே!
நானும் நீயும்
பிரிந்திருந்தாலும்
நமது
தூய அன்பு
என்றும் பிரியாதது."

"என் இனியவனே
உனக்காக
உனது தூய அன்பிற்காக
எத்தனை ரணமானாலும்
காத்திருப்பேன்
உடலில்
உன் நினைவை
சுமந்து கொண்டிருக்கும்
உயிர் இருக்கும் வரை"

கவிதைகளை
தாங்கிய
கண்ணீர் துளிகள்
நிலத்தில் சிந்தப் பெறாமல்
கன்னத்தில் அரும்பியது.


■ அழகானந்தம் அரவிந்தன்
கொழும்பு-15.



## மண்ணும்-சுதந்திர உணர்வும்

நிஜங்கள் என்பதெல்லாம்
நூர்ந்து போன விளக்கின்
நுனிச் சாம்பல் போல;
இங்குள்ள-
அனுபவிப்புகளின் மீது
படர்ந்திருக்கின்றன
அக்கிரமத் தூசுகள்.
●
இரத்தக் குரல்களின்
தேவைகளை எரித்த
தீக் கொள்ளிப் பூமியே!
இதயங்களின் இடி முழக்கம்
கனத்துப் போன உன்
காதுகளுக்குக் கேட்கிறதா?
●
"பூட்ஸ்" பாதங்களைக்
குவித்துக் குவித்து
மண்ணில் முளைத்த
உணர்வின் புதல்வர்களை
கைது செய்ததும்.....
சிறையில் போட்டு
சித்திரவதைப் படுத்தியதும்.....
இன்னும் இன்னும்
நெஞ்சில் ரணங்களாய்ப்
பதிவு செய்யப்பட்டிருக்கின்றன!
●
அடக்கு முறை மேலிட்ட
தேடுதல் சுழற்சிகளில்
இலட்சிய முகங்கள்
அழிக்கப்பட்டுப் போயின.....
என்றாலும் அந்த
அக்கினிப் பிரசவங்களின்
ஆத்மாக்களிலே உயிர்ப்பார்கள்
கோஷங்களை உச்சரிக்கும்
கொள்கையின் வாரிசுகள்.
அவர்கள்-
இலட்சிய எரிமலைகளை
இதயத்தில் சுமப்பர்.
●
அப்போது
ஆதிக்க சிந்தனைகளின்
ஆணிவேர் அறுத்து
சுதந்திர உணர்வின்
விதைகள்
சொந்த மண்ணெங்கும்
தூவப்படும்!

■ காத்தான்குடி அனு.



## என் கவிதைகளில் நட....

ஒரே ஒரு!
ஜாதிக்காக
நாம்
தேடுதலை
"தீவி (வ)ரப்படுத்துவோம்;
●●
இங்கே...
செத்துப் போனது
மனிதாபிமானம்
மாத்திரமல்ல...
மனிதமும் தான்!
●●
உன் அலட்சியங்களை
குழி தோண்டி
புதைத்து விட்டு
கொஞ்சம்
தெம்போடு
எழு....!
இலங்கை
"மாதா"
காயப்பட்டு
கண்ணீர் வடிக்கிறாள்.
●●
நரியிடம்
தந்திரம் கற்று
நாயிடம்
பரீட்சை நடத்து
அத்துடன்;
மரணித்து
உயிர்பெற பழகு!!!
●●
வானத்தை
தோண்டி
நிலவை எடுத்து....
விற்பனை செய்து
பணம் தருகின்றேன்
பயங்கரவாதத்தை
நிறுத்துங்கள் என...,
பிரச்சாரம் செய்!
●●
நேரம் கிடைத்தால்....,
காதலித்து
தோல்வி அடைந்து
சோகத்தில் சிரி!
●●
என் கவிதைகளில் நட.....
உன் பாதைதான்
என் கவிதை
என்-கவிதைதான்
உன்பாதை!
●●
வெற்றிதான்
தேவையென்றால்
எல்லோர்க்கும்;
தோல்வியை
யாரோடு
தொடர்பு படுத்துவது...?
●●

■ ஏ. கவிதா தாசன்
இறக்காமம்.

## யுத்தங்கள் வேண்டாம்!

வாழ்க்கை வன்முறைகளில்
நசிந்து போனது...
தேசமெல்லாம் கண்ணீர்
மயமானது...

இது இன்றைய யுகம்!
இனம்புரியாத பயம்!
இங்கே...விரக்தியின் தாகம்
இதயமெல்லாம் வெறும் சோகம்!

இங்கே....
அக்கினி யாகம்! அதில்
வீட்டில்களாய் தொற்றிக்கொண்ட
மனித தேகம்!

ஒன்றல்ல...
திகதி ஏட்டில் எழுதாத
மரணங்கள்.
ஓராயிரமா! ஒன்பதாயிரமா!
எண்ணிக்கையில்லா
இழப்புக்கள் இங்கே.

விடியல் எமக்கில்லை!
விடிந்தால் நாமில்லை!
இறந்து விட்டவன்
மனிதன் மட்டும்தான்.
இன்னும் இறக்கவில்லை.
மனிதம்?

வெற்றியின் தாகம்
இரத்தங்களென்றால்
யுத்தங்கள் வேண்டாம்!

சமாதானம் எம்
சாம்ராஜ்ய கனவு
மனிதாபிமானம் பிறக்கட்டும்
மனிதனாக வாழ்வோம்.

■ து.கலைவாணி
எந்தலை-வத்தளை.



## கனவே கலையாதே

கனவே
கலையாதே,
கருத்தை விட்டகலாதே

இதயப் பூங்காவின்
வாச மலரே
உதிராதே,
மனதைச் சூழ்ந்த
இருள் விலகிட
அருள் பல பெருகிட
எழுந்தோடி
வா நிலவே....

■ ஹஸீனா ஸலீம்
கொட்டராமுல்லை.

## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

### நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



இலக்கம்-13
சுப்பர் ஸ்டார் சந்திப்பு
காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-.............................
படத்தின் இயக்குநர் பெயர்:-.............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-.............................
இப்படம் வெளியான ஆண்டு:-.............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்



பல் டாக்டர்- இன்னும் வாயை அகலமாகத் திறவுங்கள்.
அவர்- ஏன் டாக்டர் நீங்கள் பல்லை வெளியிலிருந்து பிடுங்கப் போகிறீர்களா? அல்லது வாய்க்குள் போய் பிடுங்கப் போகிறீர்களா?
●
நீலா- சந்தான கிருஷ்ணன் விட்டமின் மாத்திரைகளை அதிகம் விழுங்கியதால் என்ன ஆனான் தெரியுமா?
மாலா- என்ன ஆனான்?
நீலா- சத்தான கிருஷ்ணன் ஆகிவிட்டான்.

ரகீம்- பிரம்மச்சாரி என்பவன் யார்?
நஜீம்- தினமும் ஒவ்வொரு திசையில் இருந்து அலுவலகத்திற்கு வருபவன்.
●
அவன்- என்னடா கிரி தலையில் கட்டு?
கிரி- கிரிக்கட்டு விளையாடும் போது அடிபட்டுவிட்டது.
●
அவர்- திருமண வாழ்க்கை என்பது என்ன?
இவர்- இருவர் ஒருவராகி பின் மூவராவது.
●
நீலா- ஒட்டோ டிரைவரிடம் ஜோக் சொன்னால் எப்படிச் சிரிப்பார்?
மாலா- குலுங்கி- குலுங்கி.
●

## இந்த வாரம் உங்கள் பலன்

(24.10.93 முதல் 30.10.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், செவ்வாய், புதன், வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| கன்னி | - வெள்ளி |

இவ்வாரம் சந்திரன் மகரம், கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | மீனம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்வு, முன்னேற்ற மேன்மை. | பி.ப 4 மணி |
| திங்கள்- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | காலை 11 மணி |
| புதன்- | வெளியிட வாசம், பணத்தட்டுப்பாடு. | காலை 9 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, மனச்சஞ்சலம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தனலாபம், தாரசுகம். | பி.ப 3 மணி |
| சனி- | அகால போசனம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |

அதிஷ்ட இலக்கம்- 5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | மேடம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், புகழ், மேன்மை. | பி.ப 3 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, தேக சுகம். | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | மறைமுக நோயத் தொல்லை, மனப்பயம். | காலை 9 மணி |
| புதன்- | உத்தியோக உயர்வு, பணவரவு. | காலை 11 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, தெய்வ அனுகூலம். | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், வீண் சிரமம். | காலை 8 மணி |
| சனி- | உறவினர் வருகை, நடைக்கஷ்டம். | பி.ப 2 மணி |

அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | இடபம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தாய்வழித் துக்கம், பணச் செலவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | கௌரவம், மகிழ்ச்சி. | காலல் 9 மணி |
| செவ்வாய்- | தூரஇடப் பயணம், கவலை ஒழிதல். | பி.ப 1 மணி |
| புதன்- | எதிர்பார்த்த கருமம் வெற்றி, பண இழப்பு. | பி.ப 3 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, அகால போசனம். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | வெற்றி வாய்ப்பு, திடீர் அதிஷ்டம். | காலை 9 மணி |
| சனி- | நடைக்கஷ்டம், பணச்சிக்கல். | பி.ப 2 மணி |

அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | மிதுனம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, புத்திக் கூர்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, கௌரவம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | பூமிச் சேர்க்கை, பொருள் பேறு. | காலை 11 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, மனக்கிலேசம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, உள்ளத் தெளிவு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | தூர இடப் பயனம், பெரியோர் நட்பு. | பி.ப 4 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, வீண் மனஸ்தாபம். | பி.ப 2 மணி |

அதிஷ்ட இலக்கம்- 7

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | கும்பம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | ஏமாற்றம், வீண் பிரயாசம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | தனலாபம், உறவினரால் மகிழ்ச்சி. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | உயர்ச்சி, பணவரவு. | காலை 11 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, பூமியால் இலாபம். | காலை 10 மணி |
| வியாழன்- | எண்ணங்கள் நிறைவேறும், தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| வெள்ளி- | புதிய முயற்ச்சி, வீண் செலவு. | பி.ப 3 மணி |
| சனி- | அந்நியர் உதவி, அகால போசனம். | பி.ப 5 மணி |

அதிஷ்ட இலக்கம்- 7

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | கர்க்கடகம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தெய்வ அனுகூலம், பொருள் பேறு. | பி.ப 3 மணி |
| திங்கள- | பணத்தட்டுப்பாடு, கௌரவம். | பி.ப 5 மணி |
| செவ்வாய்- | துயர் நிலை, பணவருவாய். | காலை 9 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மனைவியால் கவலை. | காலை 11 மணி |
| வியாழன்- | தாரசுகம், பிள்ளைகளால் மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, கடன் தொல்லை. | காலை 9 மணி |
| சனி- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 3 மணி |

அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | மகரம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரிய மேன்மை. | பி.ப 3 மணி |
| திங்கள்- | உறவினர் பகை, செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | தனலாபம், பிள்ளைகளால்மகிழ்ச்சி.. | பி.ப 4 மணி |
| புதன்- | காரியசித்தி, பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், உதவிகள் கிட்டும். | காலை 11 மணி |
| வெள்ளி- | எடுத்த காரியம் நன்மை, வீண் நடை. | பி.ப 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் படல். | பி.ப 4 மணி |

அதிஷ்ட இலக்கம் - 2

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சிம்மம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரியானுகூலம். | பி.ப 4 மணி |
| திங்கள்- | மனக்கிலேசம், வீண் பழி கேட்டல். | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | உயர்ந்தோர் நட்பு, பணவரவு. | காலை 9 மணி |
| புதன்- | மேன்மை, கீர்த்தி புகழ் உண்டு. | காலை 11 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பணத்தடையுண்டு. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | வெளியார் பகை, பணவரவு. | பி.ப 3 மணி |
| சனி- | செல்வாக்கு அதிகரிப்பு, தேகசுகமுண்டு. | காலை 10 மணி |

அதிஷ்ட இலக்கம்- 5

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | தனு | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அறிஞர் நட்பு, மனச்சந்தோஷம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | பணவரவு, வீண் தொல்லை. | காலை 11 மணி |
| செவ்வாய்- | பூமியால் இலாபம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| புதன்- | திடீர் சுகயீனம், வைத்தியச் செலவு. | காலை 9 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, பணவரவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | காணி பூமிப் பேறு, கஷ்டம் நீங்கும். | பி.ப 4 மணி |
| சனி- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |

அதிஷ்ட இலக்கம் - 4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | விருட்சிகம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, அறிவுத் தேட்டம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | துயர் அதிகம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | காணி பூமி நன்மை, கவலை மறையும். | காலை 11 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, தூரஇடப் பயணம். | காலை 10 மணி |
| வியாழன்- | வெளியிடப் பிரயாணம் செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | உயர்ச்சி மேன்மை, உறவினர் பகை. | பி.ப 4 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, காரிய சித்தி. | பி.ப 1 மணி |

அதிஷ்ட இலக்கம்- 5

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | துலாம் | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், பூமிப்பேறு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | வருவாய் அதிகம், பிரச்சனை தீரும். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | எடுத்த காரியத் தடை, வீண் முயற்சி. | பி.ப 4 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, எண்ணியகருமம் வெற்றி. | காலை 9 மணி |
| வியாழன்- | அறிஞர் சிநேகிதம், வீண் வாக்குவாதம். | காலை 11 மணி |
| வெள்ளி- | துயர் அதிகம், தெய்வானுகூலம். | பி.ப 2 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, காதல் பிரச்சனை. | பி.ப 3 மணி |

அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | கன்னி | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனச்சந்தோஷம், புதிய முயற்ச்சி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | கௌரவம், புகழ், தேகசுக நன்மை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, துயர் அதிகம். | காலை 10 மணி |
| புதன்- | அந்நியரால் தொல்லை, அரசவிரோதம். | காலை 11 மணி |
| வியாழன்- | வீண் பிரயாசம், பணத்தட்டுப்பாடு. | காலை 9 மணி |
| வெள்ளி- | எதிர்ப்பு நீங்கும், மனச்சஞ்சலம் மறையும். | பி.ப 1 மணி |
| சனி- | வாகனாதி நன்மை, பகை நீங்கும். | பி.ப 2 மணி |

அதிஷ்ட இலக்கம்- 8

# மருத்துவ ✚ விந்தைகள்

## எந்தக் குழந்தை வேண்டும்?



குழந்தை ஆணாகவோ, பெண்ணாகவோ நாம் விரும்பியபடி பெற முடியும் என்று பிரான்ஸ் மருத்துவர்களின் ஏழாண்டு ஆராய்ச்சிப் பலன் மூலம் தெரிய வந்துள்ளது.

பெண்கள் கருத்தரிப்பதற்கு மூன்று மாதங்கள் முன்பிருந்து பொட்டாசியம், சோடியம் உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் ஆண்குழந்தை பிறக்கிறது. வெங்காயம், கோவா, போஞ்சி, கரட் இவைகளில் பொட்டாசியம், சோடியம் அதிகமாக உள்ளன. உப்பின் அளவைக் கொஞ்சம் அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில், குழந்தை பெண்ணாக இருக்க வேண்டுமென்று விரும்பினால் கல்சியம், மக்னீசியம் போன்றவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பால், காளான்கள், பேரீச்சம்பழம், திராட்சை, அத்திப்பழம், பீட்ரூட், தக்காளி இவற்றுடன் கல்சியம் மாத்திரைகளையும் சாப்பிடலாம்.

குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தந்தையின் க்ரோமோசோம்களே நிர்ணயிக்கின்றன என்ற உண்மையை வைத்துப் பார்த்தால், இது முட்டாள்தனமான ஆராய்ச்சி முடிவு என்று சில மருத்துவர்களே கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தாயின் X க்ரோமோசோம்கள் எந்த க்ரோமோசோமுடன் இணைவது என்பதைத்தாயின் உடலில் உள்ள இந்தத் தாதுஉப்புக்கள் நிர்ணயிக்கின்றன என்று அடித்துச் சொல்கிறார்கள் ஆராய்ந்தவர்கள்.

## சொக்லேட் பற்களைச் சொத்தையாக்குமா?

'எங்கள் ரூத்பேஸ்ட்டில் ஃபுளோரைட் உள்ளது' என்று கூறுவதைத் தினம் தினம் நாம் ரீ.வி. விளம்பங்களில் பார்க்கிறோம். இந்த ஃபுளோரைட் பற்பசையை உருவாக்கியவர் பேராசிரியர் ஜோர்ஜ் ஸ்ரூக்கி என்பவர். இவர் இன்னொரு உண்மையையும் கண்டு பிடித்துச் சொல்லி இருக்கிறார்.



சொக்லேட்டுக்களை அதிகமாகச் சாப்பிடும் (பிறந்த நாள் அன்று மட்டும் சாப்பிட்டால் போதாதோ?) குழந்தைகளின் பற்கள் கூடிய விரைவில் சொத்தை ஆகிவிடுகின்றன என்ற உண்மையை விட இன்னொரு உண்மையை ஜோர்ஜ் ஸ்ரூக்கி தனது பரிசோதனை மூலம் கண்டு பிடித்திருக்கிறார்.

அடிக்கடி சிப்ஸ், முறுக்கு, வத்தல், வடாம் போன்றவைகளைக் கொறிக்கும் குழந்தைகளின் பற்கள் மிக விரைவிலேயே பழுதடைந்து சொத்தைப் பற்களாகி விடுகின்றன என்பதே அவர் கண்டுபிடிப்பு.

ஸ்ரார்ச் அதிக அளவு கொண்ட உணவுப் பண்டங்கள் வாயில் ஒருவித அமிலத்தைச் சுரக்க வைத்து அவை பற்களின் மீதுள்ள எனாமலை அரித்து விடுவதால் பற்கள் மிக விரைவிலேயே உளுத்துப் போய் விழுந்து விடுகின்றன. ■

## வயிற்றுவலி

எப்போதாவது வயிற்று வலி வந்தால் உடனே மருத்துவரைப் பார்க்க ஓட வேண்டாம். கொஞ்சம் மிளகை லேசாக வறுத்து கஷாயம் வைத்து அதில் கொஞ்சம் கற்கண்டையும் சேர்த்துச் சாப்பிட்டால் வயிற்று வலி சரியாகிவிடும்.

## மலச்சிக்கல் தீர

பேரீச்சம்பழத்தைப் பாலில் வேக வைத்து இரவு படுக்கப் போகும் முன் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் சரியாகிவிடும்.

## சிகரெட் பிடிப்பவர்கள் சாப்பிட வேண்டிய காய்

சிகரெட்டை விட முடியவில்லை என்கிறீர்களா? பரவாயில்லை. புகைத்து விட்டுப் போங்கள். ஆனால் அடிக்கடி வெள்ளரிக் காயைச் சாப்பிடுங்கள். புகைப்பவர்களுக்கு இது மிகவும் நல்லது.

## தேமலைப் போக்க


சிலருக்கு உடம்பில் கை, கால், கழுத்துப் போன்ற இடங்களில் தோல் வெளுத்துத் திட்டுத் திட்டாகக் காணப்படும். இதைத் தேமல் என்கிறார்கள்.

இந்தத் தேமல் மீது பப்பாளி இலைச் சாற்றைத் தினம் தடவிவந்தால் தேமல் நீங்கிவிடும்.

## உடல் சூடு தணிய

வில்வஇலைக்கொழுந்தை எடுத்து நன்றாக மென்று விழுங்கியவுடன் ஒரு டம்ளர் பசும்பால் குடிக்க வேண்டும். இப்படி சரியாக நாற்பது நாட்கள் சாப்பிட்டால் உடற்சூடு தணிவதோடு உடம்பும் புத்துணர்ச்சி பெறும்.

## உங்கள் ஞாபக சக்தியை அதிகப்படுத்த:



1. சுறுசுறுப்புடனும், தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் கொண்டிருங்கள். எதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள விரும்பினால் அதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஞாபக சக்தியை அதிகப்படுத்த மன ஒருமித்தல் மிக முக்கியமாகையால் ஒரு செயலைச் செய்கிற பொழுது அதிலேயே கவனம் செலுத்துங்கள்.
2. உங்கள் எண்ணங்களை உருவங்களாக எண்ணிப் பாருங்கள். புதிய விசயங்களை நீங்கள் முன்னமே அறிந்த விசயங்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் பொழுது அவை எளிதில் ஞாபகத்துக்கு வருகின்றன. எனவே உங்கள் ஞாபகத்திற்குள் எது இருக்க வேண்டுமென்று எண்ணுகிறீர்களோ, அதற்கு ஒரு உருவம் கொடுத்து விடுங்கள்.
3. பொதுவாக எல்லோருக்கும் உள்ளது மறதி. சாவியை எங்கே வைத்தோம், ஃபானை நிறுத்தினோமா, காஸ் சிலிண்டரை நிறுத்தினோமா போன்றவைகள். இப்படிப்பட்ட பிரச்சனைகளை எளிதில் தீர்க்கலாம். வீட்டில் இந்தப் பொருளை இந்த இடத்தில் தான் வைக்க வேண்டுமென்ற நியதியுடன் செயற்படுங்கள். உதாரணமாக கதவைத் திறந்து உள்ளே சென்றவுடன், சாவியை பக்கவாட்டுச் சவரில் உள்ள ஆணியில் மாட்டுங்கள். பின்பு எப்பொழுதுமே அப்படித்தான் செய்வீர்கள். பொருட்களை எளிதில் கண்டு பிடித்துவிடலாம்.
4. எதையும் ஒழுங்கு முறையுடன் செய்யுங்கள். வீட்டில் நல்ல பழக்கங்களைக் கையாளுதல் உங்கள் ஞாபக மறதிப் பிரச்சனைகளைக் குறைக்கும். வீட்டில் மருந்துகளை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்கப் பழகிக் கொள்ளுங்கள். ஞாபகத்தில் கொள்ள வேண்டிய விசயங்களை வரிசைப் படுத்தி எழுதிக் கொள்ளுதல் மிகவும் உதவியாக இருக்கும். உதாரணமாக– பிறந்த நாள் போன்ற முக்கிய தினங்களை கலண்டரில் குறித்து வையுங்கள்.
5. நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயங்களை மூன்று முறையாவது மீண்டும் மீண்டும் ஞாபகத்திற்குக் கொண்டு வாருங்கள். தானாக உங்கள் மனதில் எளிதாகப் பதிந்து கொள்ளும். எப்பொழுதும் மறக்க மாட்டீர்கள். அந்தவிசயத்தை வாயில் சொல்வதுடன் ஒரு உருவத்தையும் கொடுப்பீர்களே யானால் அந்த விசயம் என்றும் உங்கள் மனதை விட்டு அகலாது.
6. புதிய விசயங்களை முறையாக வரிசைப்படுத்துகின்ற பொழுது அவைகளை எளிதில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். உதாரணமாக ஒரு சொற்பொழிவைக் கேட்கும் பொழுது அல்லது ஒரு பாடத்தைப் படிக்கின்ற பொழுது தகுந்த துணைத் தலைப்புக்கள் கொடுத்து வரிசைப் படுத்துங்கள். வரிசைப்படுத்துகின்ற பொழுது எழுத வேண்டியுள்ளதால் அவைகள் எளிதில் ஞாபகத்தில் பதிந்து விடுகின்றன.
7. மன அமைதியுடனும் மன ஒருமைப்பாட்டுடனும் ஒரு விசயத்தைப் பார்க்கின்ற பொழுதுதான் அவை நம் ஞாபகத்தில் ஊன்றி விடுகின்றன. அதிக மன உளைச்சல், பரபரப்பு, களைப்பு இருக்கின்ற பொழுது உங்கள் மனதில் எந்த விசயங்களும் சரியாகப் பதியாது. பல புதிய விசயங்களை ஒரே சமயத்தில் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது வயதானவர்களுக்குச் சிரமமான பிரச்சனை. விசயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள இளைஞர்களை விட அதிக நேரம் எடுத்துக் கொள்வார்கள் இவர்கள். உங்கள் ஞாபகத்திற்கு ஒரு விசயம் வரவில்லை என்றால் கவலை கொள்ளாதீர்கள். மனதை வேறுபக்கம் திருப்புங்கள். கொஞ்ச நேரத்தில் விஷயம் தானாக ஞாபகத்திற்கு வந்துவிடும்.

மருத்துவ அட்வைஸ்

## முரட்டுத்தனம் வருத்தம் தரும்!



ஆண் பெண் கலத்தலின் போது முரட்டுத்தனமாக நடந்து கொள்ளும் ஆண்களே விரைவில் தளர்ந்து விடுகின்றனர், என்று புதிய ஆய்வுகளின் முடிவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமைதியான முறையில் நடந்து கொள்பவர்கள், நீண்டபொழுது சோர்வின்றி இன்பம் துய்க்க முடியும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தாங்கள் முரட்டுத்தனமான முறையில் கலத்தலில் ஈடுபடுவதால் பூரணமான இன்பத்தை அடைய முடியும் என்று பெரும்பாலான ஆண்கள் கருதுகிறார்கள்.

இதனால் ஆண்மைத் தன்மை விரைவில் குறைந்து போய் விடக்கூடும் என்று டாக்டர் இர்வின் கோல்ட்ஸ்ரெயின் கூறுகிறார்.

வீரியம் குறைந்த பல ஆண்களை வைத்து டாக்டர் இர்வின் ஆராய்ச்சிகளை மேற்கொண்டபோது ,இந்த உண்மையினைக் கண்டுள்ளார்.

"தாங்கள் கலத்தலில் ஈடுபடும் போது சற்று முரட்டுத்தனமாகவே நடந்து கொண்டமையினால் உறுப்புகள் காயம்பட்டுப் பாதிப்படைந்ததை இவர்கள் ஒப்புக் கொண்டார்கள். இயற்கைக்கு மாறான முறையில், சேர்க்கையில் ஈடுபட்டமையினால் தங்கள் உறுப்புகளில் காயங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்தே இன்று வீரியக்குறைவு ஏற்பட்டுள்ளதைத் தெரிந்து வியப்படைந்தனர்."

இவ்வாறு டாக்டர் இர்வின் சொல்கிறார். தன்னிடம் சிகிச்சை பெற வந்த 15 சதவிகிதமானவர்கள் தங்கள் தவறான போக்கின் காரணமாகவே, உரிய காலத்துக்கு முன்னர் தளர்வடைய நேர்ந்தது என்பது புலனாயிற்று. புண்களோ, அல்லது இயற்கைக்கு மாறான மாறுபாடுகளோ, உறுப்புகளுக்கு ஏற்படாவண்ணம் நடந்து கொள்வோருக்கு ஆண்மைக் குறைவு சீக்கிரம் ஏற்படமாட்டாது, என்று டாக்டர் இர்வின் மேலும் சொன்னார். ●



# கண்ணே மதுமிதா

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—17

பிஸ்டலின் வயிறு காலியாகிவிட்டது. எதிரியிடம் கவர்ந்த பிஸ்டல் என்பதால் வயிற்றுக்குள் எத்தனை தோட்டாக்கள் இருந்தன என்பது தெரியாமல் போய் விட்டது.

குலாம்ஷாவின் பிஸ்டல் இனி பயன் கொடுக்காது. இனி, பந்து தன் பக்கம் என்று எதிரி புரிந்துகொண்டான். புரிந்து கொண்டதால் கொடூரமான சிரிப்பொன்றை முகத்தில் படரவிட்டான்.

எதிரியின் ஏ.கே.47 குலாம்ஷாவை விருப்போடு பார்த்தது. 'அன்புக்குரிய விரோதியே நலமா' என்பது போல மார்பின் மையத்தை நோக்கி நீண்டு பார்த்தது.

இன்னும் ஒரு நொடிக்குள் உயிர் போகும்.

கிரைம்புலி, சாவின் மடியில் ஒரு தோட்டா உபயத்தில் சுருளும்.

■

வேகமாய் விரைந்து கொண்டிருந்தது அந்த வெள்ளை பியட்கார்.

காருக்குள் லால் இருந்தான். சாரதிக்கு அருகே இருந்த லால் இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான். காரின் பின் சீற்றில் மூன்றுபேர் இருந்தார்கள். மூன்று பேரிடமும் ஆயுதம் இருந்தது.

"வேகமாய் போடா முட்டாள். பொஸ் கோபத்தில் இருக்கிறார்."

லால் அவசரப்படுத்த, சாரதி தெருவில் இருந்து பார்வையை விலக்காமல் பதில் சொன்னான்.

"அதற்காக என்ன பறந்தா போக முடியும் லால்?"

"பறக்கிறாயோ இல்லையோ, ஷா தப்பிவிட்டான் என்று வை, எங்கள் உயிர் மேலே பறப்பது மட்டும் சர்வ நிச்சயம்."

லால் சொன்னது பயமூட்டியது. மேலும் வேகம் எடுத்து, தெருவில் வழுக்கிச் சீறிப் பாய்ந்தது பியட்.

எதிரே வந்த லொறிக்காரன் ஏதோ திட்டிக் கொண்டு போவது தெரிந்தது. கெட்ட வார்த்தைளை வீசியிருப்பான். அலட்சியம் செய்து பியட் வேகம் குறையாமல் சீறிச்செல்ல, எதிரே மஞ்சள் கோட்டில் பாடசாலை மாணவிகள் தெருவைக் கடந்து கொண்டிருந்தார்கள்.

வேகமாய் நெருங்கியது பியட்.

■

சாவைக் கண்டு குலாம்ஷா என்றுமே பயந்ததில்லை.

சாவைக்கண்டு பயந்து சவால்களை சந்திக்காமல் ஓடியதுமில்லை.

எனினும் இப்போது சாவது விரயம். எடுத்த காரியத்தை முடிக்காமல் சாவதில் பிரியம் இல்லை.

இந்தக் கொடிய கூட்டத்தின் தலைவன் யார் என்று அறிய முடிந்தது காரியத்தில் பாதிக்கு மேலான வெற்றி.

இனி மடக்குவது சுலபம். அத்தனைபேரையும் அள்ளி எடுத்து சட்டத்தின் கரங்களில் கொடுப்பது சுலபம். சந்தர்ப்பம் வாய்த்தால் பிஸ்டலின் தீனியாகவும் சிலரைக் கொடுத்துவிடலாம்.

கொடிய குற்றவாளிகள் சிலர் பெரிய புத்திசாலிகளாக வும் இருப்பதால் சட்டம் சில சமயங்களில் கோட்டை விட்டுவிடும்.

ஒரு புத்திசாலி வழக்கறிஞர் சட்டத்தின் ஓட்டைகளால் அவர்களை வெளியே கொண்டுவந்துவிட முடியும்.

இரகசிய உலக குற்றவாளிகள் செய்த குற்றங்கள் பலவற்றுக்கு ஆதாரங்கள், சாட்சியங்கள் இருப்பதில்லை.

சட்டத்திற்கு ஆதாரம் முக்கியம். சாட்சியம் அவசியம். தவறினால் குற்ற நபருக்கே சாதகம்.

எனவே, குலாம்ஷா குற்றவாளிகள் தாம் மடிதலுக்கு தாமே சந்தர்ப்பம் கொடுக்கும் தருணங்களையே விரும்புவதுண்டு. அந்தத் தருணங்களை உருவாக்குவதும் உண்டு.

இந்தக் கூட்டத்திலும் ஒழிக்கப்பட வேண்டியவர்களை முடியுமானவரை ஒழித்து விடுதலே ஷாவின் விருப்பம்.

போட்ட கணக்குகள் யாவும் பிஸ்டல் காலைவாரி விட்டதால், ஒரே ஒரு தோட்டா இல்லாமல் போனதால் தப்புக் கணக்காகிப் போவது தான் ஷாவுக்கு இப்போதைய வருத்தம்.

எதிரியின் ஆட்காட்டி விரல் ஏ.கே.47 இன் விசையை நோக்கி விருப்பமாக விரைந்தது.

ஒன்று...இரண்டு....மூன்று.

இதோ விசையைத் தட்டப் போகிறான்.

ரெடி.

■

நீட்டா மெல்ல முணு முணுத்தாள். செல்லமாய் சிணுங்கினாள்.

பெண் சிணுங்கினால் ஆணுக்கு வேகம் வரும். மேலும் அவளை வியக்க வைக்க தன் பலம் காட்டும் ஆசை வரும்.

இன்பராஜ் வேகமானான். நீட்டா மீது மிகுந்த மோகமானான். இன்பராஜ் ஆசை மிகக் கொண்டான்.

நீட்டாவின் அழகான சின்ன நெற்றியில் ஆவேசமாய் முத்தமிட்டான். மூன்று முத்தங்கள். அப்படியே உதடு கீழிறக்கி நீட்டாவின் மூக்கில் பதித்து, பின் உதடு பிரித்து மூக்கை மெல்லக் கடித்தான்.

நீட்டா கரம் உயர்த்தி இன்பராஜின் காதுமடல் பற்றித் திருகினாள். பின் மேலே சென்று அவன் முடியைக் கோதினாள்.

இன்பராஜின் இடது கரம் நீட்டாவின் இடுப்பு வளைவுகளில் ஓட்டப்பந்தயம் நடத்திக் கொண்டிருந்தது. பின் நின்று வளைவில் இறுக்கமாய் அழுத்தியது.

'இன்பராஜ்' என்று கிறக்கமாய் அழைத்து இறுக்கமாய் அவனை தன்னோடு அணைத்தாள் நீட்டா.

'இன்பராஜ் நீ படு மோசம்' என்று சொல்லி அவன் உதட்டை தன் இதழ்களால் மூடினாள்.

இண்டர்கொம் 'குக்-குக்' என்று கூப்பிட்டது.

இன்பராஜின் பிடியில் இருந்து விலகி, இண்டர்கொம் தூக்கி-

"என்ன"

"மேடம்தானே?"

"தான் சொல்லு"

"உங்கள் நண்பராம். பேச வேண்டுமாம். லைனில் இருக்கிறார் மேடம். கணெக்ஷன் தரட்டுமா?"

"பெயர் என்ன கேட்டாயா கீதா?"

"கேட்டேன். உங்களுக்குத் தெரியும்"

"என்ன?"

"என்று அவர் சொல்கிறார் மேடம்"

நீட்டா ஒரு நொடி யோசித்து-

"ஓ.கே. கணெக்ஷன் கொடு"

என்று சொல்லி, இண்டர்கொம் வைத்து, சிவப்பாய் பளபளத்த போனின் றிசீவர் எடுத்து காதுக்கு கொடுத்தாள். மறு முனை உயிர்த்தது.

"என்னம்மா நீட்டா கண்ணு! நலம். நலமறிய ஆவல். உன் பளிங்கு மேனி சுகமா? அருகே யார் இன்பராஜா? உன் மேனிக்கு பொலிஷ் போட்டுக் கொண்டிருக்கிறானா?"

மறுமுனை பேச நீட்டா பூகம்பம் கண்ட பூமிபோல அதிர்ந்தாள்.

கட்டில் சாய்ந்தபடி பேசிக்கொண்டிருந்தவள் அதிர்வோடு எழுந்து-

"யார் நீ?"

என்று கோபத்தில் வெடித்தாள்.

"உன்னை அறிந்தவன்"

"......"

" என்னம்மா கண்ணு புரியவில்லையா? ஐ.மீன், உன் உடலில் எங்கெங்கு மச்சம் இருக்கிறது என்பது வரை தெரிந்தவன்."

"இடியட்."

நீட்டா சீற, இன்பராஜ் கட்டிலில் புரண்டு வந்து,

"யார் நீட்டா போனில்."

உதட்டில் ஆட்காட்டி விரல் வைத்து அவனை பேசாதே என்று சைகை காட்டினாள் நீட்டா.

"என்னம்மா நீட்டா. உன் கட்டில் நாயகன் கோபப்படுகிறானா?"கேட்டுவிட்டு கேலியாய் சிரித்தது மறுமுனை. எங்கோ கேட்ட குரல் போல் இருந்தது. உடன் நினைவுக்கு வர மறுத்தது. நீட்டா யோசிக்க, மறுமுனை மீண்டும் பேசியது.

"நீட்டா நான் யார் என்பதை பின்னர் யோசி. இப்போது நான் சொல்வதைக் கேள். வைத்தியைக் கொல்ல நீயும் இன்பராஜும் போட்டுள்ள திட்டம் எனக்குத் தெரியும்."

"நீ ஏதேதோ பேசுகிறாய்." நீட்டா கோபப்பட்டாள்.

"வைத்தியின் கையெழுத்துப் போல் நீயே போட்டு நேற்று இன்பராஜ் மூலம் இரண்டு இலட்சம் ரூபாய்கள் வங்கியில் இருந்து எடுத்தாய் அல்லவா? அது கூட எனக்குத் தெரியும்."

நீட்டாவுக்கு தலையில் இடி இறங்கியது போல இருந்தது. இன்பராஜ் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"உனக்கு வேண்டியது என்ன?"

கோபம் பயன்தராது என்று புரிந்து இறங்கி வந்தாள்.

"குட், சுற்றி வளைக்காமல் நேரில் விசயத்துக்கு வந்தாய் பார். இது குட். எனக்கு வேண்டியது உன் அருகில் இருக்கிறது."

நீட்டா புரியாமல் தன்னிச்சையாக ரூமைச் சுற்றி பார்வை வீசினாள்.

மறுமுனை வாய்விட்டுச் சிரித்தது. நீட்டாவுக்கு உள்ளே கோபம் எரிந்தது.

"என்ன சொல்கிறாய்?"

"புரியவில்லையல்லவா?"

"சுத்தமாக இல்லை."

"உயிர்."

நீட்டா திகைத்தாள்.

"பயப்படாதே நீட்டா. உன் உயிர் எனக்கெதற்கு. உன் உடலை வேண்டுமானால் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். கச்சிதமான அந்த மேடு பள்ளங்களில் உலகை மறக்கலாம்."

"எல்லை மீறுகிறாய் நீ."

"எல்லை மீறினால்தானே இங்கிருந்து சுக உலகுக்குள் சுதந்திரமாய் நுழையலாம். எனக்கு வேண்டியது உன் உயிரல்ல. இன்பராஜின் உயிர்."

"என்ன?"

"யெஸ், இன்பராஜின் உயிர். உன் கட்டில் காதலனுக்கு நீயே காலனாக மாற வேண்டும்."

"மறுத்தால்"

"நீ மடிவாய். அதற்கு முன் வைத்தியிடம் உன் சுயரூபம் ஆதாரத்தோடு சொல்லப்படும். நீ வெளியே விரட்டப் படுவாய். அல்லது வைத்தியால் கொல்லப் படுவாய். வைத்தி உன்னை மன்னித்தாலும் நாம் உன்னை விடமாட்டோம். எப்படியோ நீ மடிவாய். என்ன சொல்கிறாய்...?"

தன் உயிர் குறிவைக்கப்படுவது தெரியாமல் இன்பராஜ் கட்டிலில் புரண்டு மறுபுறம் சென்று, சிகிரெட் எடுத்து சுவாரசியமாய் பற்றவைத்துக் கொண்டிருந்தான். அவன் மீது பார்வையை விலக்காமல் நீட்டா சொன்னாள்,

"நான் யோசிக்க அவகாசம் வேண்டும்."

"ஓ.கே. ஆனால் அவகாசம் ஒரு நாள் மட்டுமே. தீவிரமாய் யோசி. எனக்கு உன் பணம் வேண்டாம். வைத்தியிடம் நீ சுருட்ட நினைக்கும் கோடிகள் வேண்டாம். இன்பராஜின் உயிர் மட்டும் போதும். பின் உன் குறுக்கே எப்போதும் நான் வரமாட்டேன். நம்பு."

உண்மை அவன் குரலில் புரிந்தது. அவனாகவே தொடர்பைத் துண்டித்தான்.

றிசீவரை வைத்துவிட்டு யோசனையாய் திரும்ப இன்பராஜ் சிரித்தான்.

அவன் கையில் இருந்து நீட்டாவைப் பார்த்துக் கொண்டிருந்தது பிஸ்டல். 9.M.M பிஸ்டல்.

■

குலாம்ஷாவை நோக்கி விசையைத் தட்டி தோட்டாவை அனுப்ப எதிரி நினைத்த நொடியில்,

அவன் மார்பை நோக்கி பறந்து வந்தது ரம்யா வீசிய கத்தி.

விசையில் இருந்து விரல் விலக, தீனமான குரல் எழுப்பி தரை நோக்கிக் குப்புறக் கவிழ்ந்தான்.

கவிழ்ந்தவனை நோக்கி வேகமாய் பாய்ந்து, காலால் எட்டி உதைத்து அவனை மல்லாக்கப் புரட்டினார் குலாம்ஷா. ஏ.கே. 47 ஐ குனிந்து தன் கரத்தில் எடுத்து மறுகரத்தால் மூச்சு வருகிறதா என்று நாசியில் வைத்துப் பார்த்தார்.

அப்பீலே இல்லாத சாவு. குலாம்ஷா ரம்யாவைப் பார்த்தார்.




ஒரு ராணி போல இடுப்பின் இரு புறமும் கரம் வைத்தபடி கம்பீரமாய் புன்னகைத்தாள் ரம்யா.

"மன்னிக்க வேண்டும் ஷா"

தரையில் முழந்தாளிட்டு அமர்ந்து மடிந்து போன எதிரியின் உடைகளுக்குள் அலசல் நடத்தியபடி குலாம்ஷா கேட்டார்.

"எதற்கு ரம்யா மன்னிப்பு?"

"நீங்கள் தளபதி. தளபதியின் கட்டளையை இந்த சாதாரண படையாள் மீறியதற்கு."

"நீயா சாதாரணமானவள்? உனக்கு நான்தான் நன்றி சொல்ல வேண்டும் பெண்ணே."

சொல்லியபடியே அவன் சட்டையின் உள் பொக்கற்றுக்குள் இருந்த அடையாள அட்டையை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டார்.

அடையாள அட்டை, இரண்டு ஐநூறு ரூபாய் தாள்கள். வேறு எதுவும் இல்லை.

தரையை விட்டு ஷா எழுந்தபோது தூரத்து குரோட்டன் செடிகளுக்குள் சலனம் தெரிந்தது. யாரோ அதற்குள் பதுங்குவது புரிந்தது.

■

டி.ஐ.ஜி டென்சில் வைத்தியின் அருகே வந்து, அவர் தோளில் தட்டினார்.

"உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும் மிஸ்டர் வைத்திலிங்கம்."

வைத்திலிங்கம் தோளைக் குலுக்கினார்.

"அதற்கென்ன, உள்ளே போய் பேசலாமா டி.ஐ.ஜி?"

"ரைட்"

கான்ஸ்டபிள்கள் இருவரும் உயிரற்ற உடல்களாய் அம்புலன்சில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் அரவிந் தரையை அங்குலம் அங்குலமாக பார்வையால் சுத்தமாகத் தடவிக் கொண்டிருந்தார். தடயங்கள் ஏதாவது கிடைக்கிறதா என்று தீவிரமாய்த் தேடிக் கொண்டிருந்தார்.

"மிஸ்டர் வைத்திலிங்கம், உங்கள் மகள் மதுமிதாவிடம் சின்ன விசாரனை ஒன்று செய்ய வேண்டியிருக்கிறது."

நடந்தபடியே டென்சில் சொல்ல, வைத்தி டென்சிலை திரும்பிப்பார்த்து புருவம் உயர்த்தினார்.

"என் மகளிடம் விசாரனையா? என்ன சொல்கிறீர்கள் டி.ஐ.ஜி?"

"பதட்டப்படாதீர்கள் மிஸ்டர் வைத்திலிங்கம். விசாரணைக்காக வந்த இடத்தில்தான் இத்தனை விபரீதங்கள்."

வைத்திலிங்கம் காற்சட்டைப் பொக்கற்றுக்குள் இருந்து கைக்குட்டை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டார் . கைக்குட்டையை வெளியே எடுக்கப்பட்ட போது வைத்திக்கு தெரியாமல் வெளியே விழுந்து பறந்தது ஒரு துண்டுக் காதிகம்.

தடயம் தேடிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் அரவிந் கண்களில் அது பட்டுவிட்டது.

அந்தத் துண்டுக் காகிதத்தை நோக்கி, இரை தேடும் புலிபோல விரைந்து வந்தார் இன்ஸ்பெக்டர் அரவிந்.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். தவராஜ்
முகவரி: 121, பிரதான வீதி, நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: சினிமா, ஓவியம் வரைதல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: ஜே. அல்பேட் பாஸ்கரன்
வயது: 23
முகவரி: 281/2, காலி வீதி, கொழும்பு-6.
பொழுதுபோக்கு: கிரிக்கெட் விளையாடுதல், கரம் விளையாடுதல்.


பெயர்: கே. புஸ்பலதா
வயது: 14
முகவரி: ராஜன் ஸ்ரோஸ், கூடுமாங்குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், கதைப் புத்தகம் வாசித்தல்.



பெயர்: எஸ். சுபா
வயது: 16
முகவரி: 126, மட்டக்களப்பு வீதி, கல்முனை-01.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், வாசித்தல்.

பெயர்: சி.பி.எம். நாஸர்
வயது: 19
முகவரி: 325/1, வன்னியார் வீதி, நிந்தவூர்.
பொழுதுபோக்கு: கிரிக்கெட் விளையாடுதல், பத்திரிகை வாசித்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.

பெயர்: எம்.எம். ஆயிஷா
வயது: 16
முகவரி: இல.25, அல்ஹிரா வீதி, இகல, கொட்டாறமுல்லை.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், வாசித்தல், கவிதை எழுதுதல்.



பெயர்: ஓ. நளீம்
வயது: 19
முகவரி: நெல்லயாகம, பலாகல, கெக்கிராவ.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: ஜே.எம். லாபிர்
வயது: 20
முகவரி: பரீட் நகர், இல.10/7, காத்தான்குடி.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.

## சிறுகதை

# இன்று எப்படியும்...!

-முகில் வண்ணன்-



எம்.டி- மனேஜிங் டிரெக்டர் அனை வரையும் தனது காரியாலயத்துக்கு அழைத்து இருந்தார். சில நாட்களாகப் பல புது முகங்கள் கொழும்புக் காரியாலயத்துக்கு அறிமுகமாகி இருந்தனர். அவர்கள் எல்லோரும் அங்கு கூடி நின்றனர். அதிகமானவர்கள் பெண்க ளாகவே இருந்தனர்.

"மிஸ்டர் ராஜா, நீங்கள் இதுவரை இந்தக் காரியாலயத்தில் மனேஜராக இருந்தீர்கள். இன்றிலிருந்து மிஸ்டர் ராஜேஷ் அந்தப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வார். நீங்கள் உங்கள் வேலைகளை எல்லாம் பாரம் கொடுக்கவும். மற்ற நாலு பெண்களை அறிமுகப்படுத்தினார். "சாந்தி, ரமணி, புவனேஸ், சந்திரா இவர்கள் இங்கு அறிமுகமாக இருக்கும் புது முகங்கள். இவர்களில் இருவரையும், ஏற்கனவே இருக்கும் கல்யாணி, கமலினி இருவரையும் உங்களுடன் எடுத்துக் கொள்ளுங்கள். வெள்ளவத்தையில் முதலாம் திகதி முதல் திறக்க இருக்கும் கிளைக் காரியாலயத்துக்கு நீங்கள் பொறுப்பாக இருக்கப் போகிறீர்கள். மிஸ்டர் ராஜா உங்கள் திறமையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பிஸ்னெஸ்ஸை அங்கும் முன்னேற்ற வேண்டும். ஓ.கே. அதுவரை இவர்களுக்கு இங்கு தேவையான பயிற்சியைக் கொடுங்கள்," என்று கூறி முடித்தார் எம்.டி.

எல்லோரும் அப்படியே நின்றனர்.

"எனி புராப்ளம்?" என்று கேட்டார்.

"இல்லை" என்று எல்லோரும் தலையைய் ஆட்ட

"யெஸ் யூ ஓல் கென் கோ...நீங்கள் எல்லாம் செல்லலாம்," என்று கூறினார்.

ஐம்பதைக் கடந்து விட்ட ராஜாவிடம் இருந்து முப்பதை எட்டிப்பிடிக்கும் ராஜேஷ் அன்று பொறுப்பேற்றார். அன்றிலிருந்து கடமைகள் அவருக்குச் சொல்லித்தரப்பட்டன. அதே வேளை, தன்னோடு வரவிருக்கும் பெண்களுக்கும் தேவையானவற்றைக் கூறிக் கொண்டிருந்தார்.

ராஜேஷ்-கம்பீரமான உடற்கட்டு கொண்ட இளம் காளை. சுருள்சுருளான கேசம். முகத்தில் எப்போதும் புன்சிரிப்பு. ஏற்கனவே ஒரு காரியாலயத்தில் மனேஜராகக் கடமையாற்றியவன். இந்தக் கம்பனி விளம்பரத்தைப் பார்த்து விண்ணப்பித்தான். அங்கு கிடைத்ததை விட ஆயிரம் ரூபாய் சம்பளம் கூடுதல். ஆகவே ஒருமாத முன் அறிவித்தலுடன் விலகி விட்டான்.

அங்கும் பல பெண்கள் வேலை செய்கிறார்கள்தான். என்றாலும் இவ்வளவு நெருக்கமும், இனிமையும், வேலையில் ஒரு மகிழ்ச்சியும் அங்கு இருந்ததில்லை. அங்கு இருந்தது செயற்கை காற்றை அனுபவித்தது போலவும், இங்கு பூந்தோட்டத்தில் உலவும் தென்றலை அனுபவிப்பது போலவும் இருந்ததில், கடமையில் ஒரு பிடிப்பும் உற்சாகமும் தோன்றியது. இது அறிந்து தானோ என்னவோ எம்.டி. அதிகமான பெண்களை வேலைக்கு அமர்த்தி இருந்தார்.

எம்.டி. வெளியே சென்றுவிட்டால் பூனை இல்லாத வீட்டில் எலிகள் விளையாடுவதுபோல்தான் கந்தோர் இருக்கும். இது இங்கு மட்டுமல்ல எங்கும் தான். ஒரே கொண்டாட்டமும் கும்மாளமும்தான். எம்.டி. இருக்கும் வரை கப்.சிப். எம்.டி.யும் இவற்றைக் காணாதவர் போல் நடந்து கொண்டார்.

ரமணி அடிக்கடி ராஜேஷை நெருங்கி வந்து வேலைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். சொல்வதையும் ஒரே முறையில் புரிந்து கொள்ளுவாள். இதனால் அவளுக்கு வேலை சொல்லிக் கொடுப்பதில் சிரமம் இருக்கவில்லை. மற்றப் பெண் களுடன் மாரடிக்க வேண்டி இருந்தது. இதனால் ரமணி மீது ராஜேஷுக்கு ஒரு பற்று ஏற்பட்டது. எடுத்ததற்கெல்லாம் அவளையே கூப்பிட்டார்.

ரமணி ஒரு வேலையென்றில்லாமல் 'ரிசப்ஷனில்' இருந்து 'எக்கவுண்ட்ஸ்' வரை எல்லா 'சப்ஜெக்டு'களையும் தொடர்பு படுத்தி வேலைகளைப் பழகிக் கொண்டு வந்தாள்.

ரமணி சிவந்த மேனியும் எடுப்பான தோற்றமும் எல்லோருடனும் நன்கு பழகுபவளாகவும் இருந்தாள். அவள் ஒரு தமிழ்ப் பெண்தானா என்று கேட்கும்படி நவநாகரிகமான ஆடை தினம், தினம் மாற்றி அணிந்து வ்ருவாள். நெற்றியில்கூடப் பொட்டு இருக்காது. பழையவர்கள் 'மிஸ்டர் ராஜா' 'மிஸ்டர் ராஜேஷ்' என்று அழைப்பதைப் பார்த்து புதியவர்களும் அவ்வாறே அழைக்கத் தொடங்கினர். ஆனால் ரமணி மட்டும் 'சேர்' என்றுதான் அழைத்தாள். ஆனால் ஏனோ, அவள் மட்டும் தன்னை 'ராஜேஷ்' என்று அன்ழக்க வேண்டும் என்ற ஆதங்கம் இருந்தது ராஜேஷுக்கு.

ரமணி தன்னையே சுற்றிவர வேண்டும். தன்னிடமே எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அக்கறை காட்டினான் ராஜேஷ். வேலைகள் அனைத்தையும் விரைவில் படித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருந்ததால் அவள் எதையும் பொருட் படுத்தவில்லை.

கந்தோர் சாப்பாட்டு அறையில் பெண்கள் முன்னரும், ஆண்கள் பின்னரு மாகச் சாப்பிடுவது தான் வழக்கம். அன்று ராஜேஷுக்கு அவசரமான வேலை இருந்ததால் சாப்பாட்டு அறைக்குச் சென்றபோது ரமணி தன் சாப்பாட்டு பார்சலைப் பிரித்துக் கொண்டிருந்தாள்.

"சொறி மிஸ் ரமணி" நான் அவசரமாகச் சாப்பிட்டு விட்டு 'எயார் லைன்ஸ்' ஒப்பீஸ் செல்ல வேண்டும். எம்.டி. யூ.கே.செல்ல டிக்கட் போட்டு வரட்டாம்," என்று கூறிக்கொண்டு அமர்ந்தார்.

"தற்ஸ் ஓல்றைட்" என்ற ரமணி, தனது பார்சலில் இருந்து சில கறிகளை எடுத்து வைத்தாள். தனது பங்குக்கு மீன் பொரியலை எடுத்து வைத்தார். ராஜேஷ்......

"யார் உங்கட 'வைஃப்பா' பார்சல் கட்டித்தாறது?" என்று கேட்டதும் அதிர்ச்சி யடைந்தான் ராஜேஷ்.

"நோ.நோ எனக்கு இன்னமும் கல்யாணமே ஆகல்ல. அம்மாதான் சமைத்து தருவா." என்றான் அவசரமாக.

"ஐயேம் சொறி." என்றாள் ரமணி.

"அதற்கென்ன? என்றவன், நீண்ட நாட்களாக தொண்டைக் குழிக்குள் அடக்கி வைத்து இருந்ததைக் கேட்கவேண்டும் என்று இன்று துணிந்து விட்டான்.

"மாலையில் என்ன செய்வீர்கள்?" என்றான்.

"வீட்டில் விளையாடிக் கொண்டி ருப்பேன்..."

"ஏன் 'கோல் பேஸ்" பக்கம் வந்தா லென்ன. நானும் மாலையில் ஏழுமணி வரை அங்கேதான் இருப்பேன்." என்றான் துணிந்து.

"ஓ....யெஸ். வரலாம். ஆனா நான் ஞாயிற்றுக்கிழமைகளில் சில நேரம் வருவேன்..."

"ஈவினிங் எதிர்பார்க்கலாமா?"

"எத்தனை மணிக்கு?"

"ஐந்துக்கு"

"வீட்டுக்குச் சொல்லாமலா?"

"ஆறுக்குச் செல்லலாம்தானே!"

"ஓ.கே....பட் அதற்குப் பிந்தி நிற்க மாட்டேன்..."

"ஓ...யேஸ்..." என்ற ராஜேஷின் உள்ளம், ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தில் வெளியே விழாதது தான் குறை.

ராஜேஷ் அன்று மாலை வந்த ரமணியை அழைத்துக்கொண்டு நடந்தான். கட்டில், கடற்கரை ஓரத்தில், புல் தரையில் சோடி சோடியாக இருந்து காதல் புரிபவர்களைக் காட்டினால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ரமணி புரிந்து கொள்வாள் என்று எதிர்பார்த்தான். சற்றுத் தூரம் நடந்ததும் "ஓரிடத்தில் அமர்ந்து இருப்போமா?" என்று கேட்டான் ராஜேஷ்.

"ஓம் சேர்..."

"இந்தச் 'சேர்' எல்லாம் ஒப்பீஸோட விட்டுவிட வேண்டும். இங்கு நான் வெறும் ராஜேஷ் மட்டும்தான்...." என்றான் கோபமாக.

"அப்படிச் சொல்லிப் பழகிவிட்டதே"

"அதுதான் வேண்டாம் என்கிறேன். மற்றவர்கள் எல்லாம் மிஸ்டர் ராஜேஷ் என்றுதானே கூறுகிறார்கள். நீ என்னை 'ராஜேஷ்' என்றே ஒப்பீஸிலும் கூப்பிடலாம்..."

"பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று 'டாடி' கூறியிருக்கிறார். மரியாதை கொடுத்துத்தான் மரியாதை வாங்க வேண்டும் என்று கூறுவார்" என்றாள் அவள்.

'நமக்குள்ளே என்ன மரியாதை' நாம் 'பிரண்ட்ஸ்' மாதிரி. இனி அதெல்லாம் தேவையில்லை" என்றான் ராஜேஷ்.

இருவரும் ஒரு இடத்தில் அமர்ந்ததும், தான் இதுவரை எடுத்த முயற்சி எல்லாம் சுத்த அபத்தம் என்று புரிந்தது அவனுக்கு.

ரமணி சற்றுத்தள்ளி எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டாள்.

'இவள் இதுவரை பார்த்ததெல்லாம் என்ன. இப்போது நடப்பதென்ன? இவள் இருபது வயதுப் பெண்ணா, அல்லது ஜடமா. ஆண்களைப் போல் உடை அணிவதால் ஆண்மை கொண்டவளோ?" என்ற சந்தேகம் எற்பட்டது ராஜேஷுக்கு.

இப்போது தானே ஆரம்பம். விட்டுப் பிடித்துப் பார்ப்போம் என்றிருந்தான்.

"ஏன் உங்களுக்கு இன்னும் கல்யாணமே ஆகல்ல?"

"எனக்கென்ன முப்பது வயதுதானே ஆகிறது. கை நிறையச் சம்பளம் இன்றிக் கல்யாணம் முடிப்பதில்லை என்றிருந்தேன். இப்போது இங்கு நிறையச் சம்பளம் பெறுகிறேன். இனிக் கல்யாண ஒழுங்கைக் கவனிக்கலாம்."

"அம்மாவின் விருப்பப்படியா? இல்ல உங்கள் விருப்பப்படியா திருமணம் நடக்கும்?"

"எனது விருப்பம்தான் அம்மாவின் விருப்பமாகவும் இருக்கும்."

"யு ஆர் வெறி லக்கி." என்றவள் கடலைக்காரன் வர கஜுபக்கட் வாங்கினாள். எட்டிக் கொடுக்க முடியாது போகவே அந்தப் பையனிடமே கொடுக்கும் படி கொடுத்து விட்டாள். ராஜேஷ் காசு எடுக்க முதல், தனது கைப்பையில் இருந்து கொடுத்துவிட்டாள்.

இப்படிப் பல நாட்கள் நடந்தன. ஆனால் அவள் தான் நெருங்கி வர மாட்டேன் என்கிறாளே, என்ற தவிப்பு ராஜேஷுக்கு இருந்தது. அதிலும் ஒரு ஆறுதல், இப்போது கோல்பேசிலும் சரி, கந்தோரிலும் சரி 'சேர்' மிஸ்டர் ராஜேஷ் இல்லை. எல்லாம் நீங்க நாங்க உங்கள் தான். இது ஒரு முன்னேற்றம் என்று கருதினான் ராஜேஷ்.

ஒரு கிழமையா- எம்.டி. யூ.கே. சென்று இருந்த போது, ராஜேஷ் கந்தோரைத் தனது கட்டுப்பாட்டில் வைத்து இருந்தது போல், ரமணியையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்று பெரும் முயற்சி எடுத்தான். ஆனால் அது தான் வெற்றியளிக்கவில்லை.

கந்தோரிலும் பிடி கொடுக்காமல் பேசுகிறாள். கோல்பேஸிலும் கிட்டே நெருங்க விடுகிறாள் இல்லை. இந்த ஞாயிறு எம்.டி.யூகே இருந்து வருகிறார். அதற்கு முன்னர் ஒரு முடிவு எடுத்து விட வேண்டும் என்று தீர்மானமாக இருந்தான் ராஜேஷ். முன்னேற்பாடாக சனிக்கிழமை அரைநாள் விடுமுறையாகக் கந்தோர் விட்டுச் செல்லும் போதே, 'ஞாயிறு நாலு மணிக்குக் காத்திருப்பேன்' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

இருவரும் ஒரு பெஞ்சில் பக்கம் பக்கமாக உட்கார்ந்து கொண்டு ஐஸ்சொக் சாப்பிட்டனர். கொஞ்சம் கிட்ட நெருங்க வேண்டும் என்று ராஜேஷ் நினைக்க அவள் தள்ளி உட்கார ஏதாவது செய்வாள். அதனிடையில் அவளது பிரண்ட்ஸ் சிலபேரும் கண்டு 'அறுத்து'விட்டுச் சென்றதில் அரைமணித்தியாலம் 'வேஸ்ற்'.

"எம்.டி. நாளைக்கு ஒப்பீஸ் வருவார். கவனம்" என்று எழுந்து விட்டாள்.

'வேலை நேரத்தில் கவனம் சரி. கோல் பேஸில் ஏன்? நாளைக்கு வருவாய் தானே..."

'தலையை ஆட்டி விட்டு, அவள் சென்று பஸ்ஸில் தொற்றிக் கொண்டாள். பஸ் வெள்ளவத்தையை நோக்கி நகர்ந்தது.

அடுத்த நாள் காலை வந்த எம்.டி. ஏதோ பிஸியாக இருந்தார். இரண்டு காரியாலய வேலை என்பதாலோ என்னவோ வேளைக்கே சென்றுவிட்டார். மாலை வரவில்லை.

அன்று மாலையும் வழக்கம் போல் ராஜேஷ் ரமணி சந்திப்பு நடந்தது. இன்று எப்படியும் தன் காதலைத் தெரியப்படுத்தி அவள் முடிவை அறிய வேண்டும் என்ற திடசங்கற்பத்தோடு வந்திருந்தான் ராஜேஷ். வந்து அமர்ந்து அரை மணித்தியாலம் தான் இருக்கும். எம்.டி. சற்றுத் தொலை வில் இவர்களை நோக்கி நடந்து வருவதைக் கண்டு "எம்.டி" என்று முணு முணுத்த வனாக எழுந்து நின்றான் ராஜேஷ். நெஞ்சு 'படக் படக்' என்றடித்து மெல்ல எழுந்தாள் ரமணி.

"ரமணி உன்னை எங்கெல்லாம் தேடுவது. நல்ல வேளை மம்மி சொன்னா, நீ சிலவேளை ராஜேசோட கோல் பேஸில் இருப்பாய் என்று. அதுதான் இங்கே வந்தேன். மாப்பிள்ளை இன்னும் அரை மணித்தியாலத்தில் யு.கேயில் இருந்து கோல் எடுக்கிறாராம். வீட்டில் உன்னை இருக் கட்டாம்" என்றார் எம்.டி.

"யெஸ் மிஸ்டர் ராஜேஷ். ரமணி விஷயமாகத்தான் யூ.கே போய் வந்தேன். அங்கே ஒரு 'பிராஞ்ச்" திறக்கப் போகிறேன். அதற்கு ரமணியும், மாப்பிள்ளையும் தான் 'இன்சாஜ்', அதுதான் இவளை இங்கே வேலை பழகவிட்டேன். இவள் சொல்லி விட்டாள் எம்.டியின் மகள் என்று யாருக்கும் சொல்லக்கூடாது என்று. தெரிந்தால் எல்லாரும் சலுகை காட்டுவார்களே தவிர, வேலை பழக முடியாது என்று கூறிவிட்டாள். நீங்களும் நல்லா உதவினீங்க என்று சொன்னாள். தாங்க் யூ......"

ராஜேஷுக்கு தொண்டை வரண்டு விட்டது. நா எழவில்லை பேசுவதற்கு.

"கம் டாடி கெதியாப் போவம்..."

"அரை மணி இருக்கு. கம் ராஜேஷ் வி வில் ஹேவ் எ டிரிங். கூல் ரிங்க்ஸ் குடிச்சுத்துப் போவம். சியர்ஸ் போர் ராஜேஷ்." என்றார் எம்.டி.

ராஜேஷின் முகத்தில் அசடு வழிவது அந்தக் கோல் பேஸ் விளக்குகளுக்கும் தெரிந்ததோ, என்னவோ மிகவும் மங்கலாகவே ஒளி வீசிக்கொண்டிருந்தன.

எம்.டி எவ்வளவு அனுபவசாலி என்று தொண்டையை நனைத்தான் ராஜேஷ்.

"பாய்"

"பாய்..." என்று காரில் ஏறிப் புறப்பட்டாள் ரமணி.

(யாவும் கற்பனையே)

---

## சின்னக் கதை

**ஐயோ! என்னவனே....**
**நீ ஆரம்பத்திலேயே என்னை**
**அன்போடு கவனித்திருந்தால்....**

# நானும் அவனும்!

-எம் . சுரேஷ்-



அவன் ஒரு போதும் என்னைத் தொட்டதில்லை. கவனித்ததில்லை. சுருக்கமாகச் சொன்னால் நான் இருக்கிறேன் என்பதையே அவன் மறந்திருந்தான். குளிக்கும் போதும், முகம் கழுவும் போதும் தனது முகத்திற்கும், கைகளுக்கும் கொடுத்த முக்கியத்துவத்தைக் கூட "வாழ்க்கைத் துணை"யாகிய எனக்கு வழங்கவில்லை. நான் பல தடவை தனிமையில் அழுதிருக்கிறேன். பகல் முழுக்க அவனுக்காகவே ஓடி ஓடி வேலை செய்து, இந்த உலகமே அவன்தான் என்று ஒட்டிக்கொண்டிருக்கும் என்னை அவன் கவனிக்காவிட்டால் என் மனம் எத்தனை கஷ்டப்படும்? அவன் அதைப் புரிந்து கொள்வதாக இல்லை.

ஊரெல்லாம் மேய்ந்துவிட்டு இரவு பத்துப், பதினொரு மணிக்கு வந்தால் அப்படியே கட்டிலில் விழுந்து உறங்கி விடுவான்.

பகல் முழுக்க அவனுக்காகவே உழைத்த எனக்குப் பயங்கர உடல்வலி. உறங்க முடியாது. அநேகமான இரவுகளில் அவன் உறங்குவதும், நான் அழுவதுமே வழமையாகிப் போனது! இருப்பினும் எங்கள் விசயத்தை நான் வெளியில் யாருக்குமே சொன்னதில்லை. சொன்னால் "என்னவனுக்குத்"தானே அவமானம்.

**கதையின் திருப்பம் கடைசியில்**

அவனுக்கு ஒரு அவமானம் என்றால் அது எனக்கும் தான்!

எல்லாம் விதிப்படிதானே நடக்கும்? எனக்கு வாய்த்தவன் பொறுப்பற்ற வனாக இருக்கிறான் என்பதற்காக அவனை மாற்ற முடியுமா? அவன் வேண்டுமாயின என் உறவைத் துண்டித்துக் கொள்ளலாம். ஆனால் நான் அவனின் உறவைத் துண்டித்துக் கொண்டால் வெளியே நடமாட முடியாது! அப்படியே நடமாடி னாலும், ஊர்சனம் பலகதை பேசும். சுருக்கமாகச் சொன்னால் உயிர் வாழ்வதே சிரமமாகிவிடும். அதுதானே நமக்கு இந்த சமூகம் கொடுத்திருக்கும் பரிசு!

இந்த நிலையில்தான், ஒரு நாள் எதிர்பாராத விபத்தொன்றில் சிக்கி எனக்குப் பாரதூரமான காயம். உயிர்போவதைப் போன்ற வலி! அன்றுதான் அவன் முதன் முதலாக என்னைக் கனிவோடு தொட்டுப் பார்த்தான்! தடவிக் கொடுத்தான். விம்மி அழுதான்!

"அட! என்னைக் கவனிக்காவிட்டாலும் இவன் என்மேல் எத்தனை அன்பு வைத்திருக்கிறான் என்பதை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது."

வைத்தியசாலையில் என்னைப் பூப்போல வைத்திருந்தனர். எல்லா உறவினர்களும் வந்து கலங்கிய கண்களோடு என் நலத்தை விசாரித்தனர்.

என்னைப் பரிசோதித்த வைத்தியர், ஒரு பெரிய ஒஃபரேசன் செய்ய வேண்டுமென்றும், அதில் நான் பிழைப்பது முடியாத காரியமென்றும் உறுதியாகக் கூறிவிட்டார்.

அவன் கதறினான். பல தடவை என்னை அன்பாகத் தடவிக் கொடுத்தான்.

வைத்தியசாலையென்றும் பாராமல் எனக்கு முத்தம் கொடுத்தான். முத்தம் கொடுத்த போது அவனின் கண்ணீர்த்துளிகள் என்மீது விழ, என்னையறியாது நானும் அழுகிறேன். ஆமாம் அது அவனுக்காக நான் அழும் கடைசி அழுகை "ஐயோ" என்னவனே! நீ ஆரம்பத்திலேயே என்னை அன்போடு கவனித்திருந்தால், இத்தனை விரைவாக நான் உன்னைவிட்டுப் பிரிய நேர்ந்திருக்காதே." துண்டிக்கப்படப் போகும் அவனின் வலது "காலின்" புலம்பல் யாருக்குமே கேட்கவில்லை!! ஆனாலும் அந்தக் கால் புலம்பிக் கொண்டே இருந்தது.

---

## அவன் கவலை

இரு நண்பர்கள் உரையாடிக் கொண்டிருந்தனர். ஒருவன் மிகவும் சோகமாகக் காணப்பட்டான். அவன் பேசினான். "இந்த உலகத்திலே என்னென்ன சுகங்கள் உண்டோ, அத்தனையும் எனக்கு வாய்த்திருந்தது. பணம், வசதியான பங்களா, அழகும், செல்வமும் நிரம்பிய பெண் இத்தனையும் இருந்தது. ஆனால் என் துரதிஷ்டம் பாரேன். ஒரு நாள் அதிகாலையில் என் மனைவி வீடு வந்து தொலைந்தாள்."

## தேனிலவு ரகசியம்

பல ஆண்டுகள் நெருங்கிப் பழகிய ஜியார்ஜிம், குளோரியாவும் கடைசியில் கல்யாணம் செய்து கொண்டார்கள். தேனிலவும் போனார்கள். திரும்ப வந்ததும், குளோரியாவின் சிநேகிதி குளோரியாவைக் கேட்டாள். "தேனிலவு எப்படி இருந்தது" குளோரியா பதில் சொன்னாள். "உண்மையைச் சொல்வதானால் எனக்கு எந்தவித வித்தியாசமும் தெரியவில்லை."

# எங்களுக்கென்று ஒரு சமூகம்

-வை. நிரு-



இங்கே!

சண்முகத்தார் திண்ணையில் அமர்ந்திருக்க, அவர் அருகே மனைவி மரகதம் புதினங்களைச் சொல்லிக் கொண்டிருக்க, அந்நேரம் அவர்களது கடைசி மகள் மோகனா அவர்களுக்கெதிரே வந்து நின்று தயங்கிக் கொண்டிருக்க, என்ன என்று கேட்பதைப்போல் மோகனாவை அவர்கள் பார்க்க, அவள் தாயையும் தகப்பனையும் பார்த்து "உங்கள் இரண்டு பேருக்கும் தான் சொல்கிறேன் கேளுங்கள். வசந்தன் என்னை விரும்புகிறார். நான் அவரை கலியாணம் செய்யப் போகிறேன்" என்று சொன்னவள் வாயை மூட முன்னர்,

"அடிப்பாவி என்ன கதையடி கதைக் கிறாய்."? என ஒருமித்து வாயைப் பிளந்தார்கள் தாயும் தகப்பனும்.

"ஏன் இப்படி வாயைப் பிளக்கிறீர்கள்? நான் கலியாணம் செய்தாலென்ன?"

மகள் உனக்கு கலியாணம் செய்து வைக்க எங்களுக்கும் விருப்பம்தான். ஆனால் நடக்கக்கூடிய விசயமாயிது? சில சம்பிர தாயங்களுக்கு கட்டுப்பட்டு, நாம் இந்த ஊருடன் ஒத்து வாழ வேண்டும். இல்லை யேல் ஊருக்குள் எங்களுக்கு மரியாதை யிருக்காது. சம்பிரதாயங்களை நாங்கள்தான் மீறினதென்று அவமானப் பெயர் எங்களுக்கு வரக்கூடாதம்மா. வசந்தன் உனக்கு வாழ்வு தந்தால் அது தியாகம். உனக்கு வாழ வேண்டுமென்ற ஆசை வந்தால், அது முதல் கணவனுக்கு செய்யும் துரோகம் என்று தானம்மா இந்த ஊர், உலகம் சொல்லும். அந்தப் பட்டம் உனக்கு வேண்டாம் மகளே. "நீ வசந்தனை மறந்திடு" என்று மகளை அணைத்துக்கொண்டு சொன்ன தகப்பன் அழுதார்.

எற்கனவே மகளின் கோலத்தைக் காணும் போதெல்லாம் அழுகின்ற மரகதத்திற்கு இந்தக் காட்சியைப் பார்த்ததும் அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் போயிற்று.

சுமங்கலியாக வாழ வேண்டிய மகள் வாழாவெட்டியாய் இருப்பதை நினைக்கும் போதெல்லாம் பெற்றோர்களுக்கு கவலையைக் கொடுத்தாலும், இந்த சமூகத்தின் சம்பிரதாயங்களை மீறி அவளுக்கு மறுவாழ்வு கொடுக்க முடியாமல் மனதுக்குள் அழுது கொண்டிருந்தார்கள்.

அங்கே!

மாணிக்கம், வசந்தனிடம், "பேசி வருகின்ற சம்பந்தங்கள் எதையும் வேணாம், வேணாம் என்று தட்டிக் கழித்துக் கொண்டிருந்தால் உன் முடிவுதான் என்ன? யாரையும் விரும்புகிறாயா? அல்லது கலியாணம் செய்து கொள்வதில்லையா? இப்பவும் ஒரு சம்பந்தம் பேசி வந்திருக்குது. மீனாட்சி அந்த பொம்பிளையின் போட்டோவைக் கொண்டு வந்து கொடு அதைப் பார்த்துவிட்டாவது, தன் சம்மதத்தை சொல்லட்டும்" என மனைவிக்கு உத்தரவிட்டான் மாணிக்கம்.

"அப்பா, எனக்கு விருப்பமான பொம்பிளையை நீங்கள் பேசமாட்டீர்கள். அதனால் அந்தப் போட்டோவை பார்க்க வேண்டிய அவசியம் எனக்கில்லை" என்றான் வசந்தன்.

"அப்படியென்றால் உனக்கு விருப்ப மானவள் யார் என்று சொன்னால்தானே எங்களுக்குத் தெரியும்."

"மோகனா!" என்றான். மறுகணம் பூகம்பம் வெடிப்பது போலிருந்தது.

"மோகனாவா......! யார்? ஏற்கனவே வாழ்விழந்தவளையா? உனக்கென்ன அறிவு இருக்கிறதா? வேறு பொம்பிளை கிடைக்காமல் போயும், போயும் அவளா உனக்கு கிடைத்தாள்? வாழ்க்கைக்கு அதிஷ்டமில்லாத அவளையா நீ கலியாணம் செய்யப் போகிறாய்? வசந்தன், அவளை மறந்திடு. இதற்கு சம்மதம் கிடைக்குமென கடைசி வரையும் எதிர்பார்க்காதே." என்று உறுதியாக கட்டளையிட்டார்கள் மாணிக்கமும், மீனாட்சியும்.

மோகனாவுக்கு கலியாணம் நடப்பதில் தர்க்கம். ஏனெனில், எற்கனவே நான்கு வருடங்களுக்கு முன்னர் மோகனாவுக்கு கேசவனை முறையாக சம்பந்தம் பேசி, அந்தச் சிறிய கிராமத்திலும் ஆடம்பரமான முறையில், வெகுவிமர்சையாக, ஊரறிய, உலகறிய, அம்மன் ஆலயமொன்றில் கொட்டு மேளங்கள் முழங்க, வந்தவர்கள் வாழ்த்த, அதன் மத்தியில் திருமணம் நடைபெற்றது. இனிதே நிறைவு பெற்ற திருமணத்திற்குப் பின்னர் விருந்துகள் எனவும், தேனிலவு எனவும் தம்பதி மகிழ்வுடன் திரிந்தனர். ஒருவரையொருவர் புரிந்து கொண்டும், இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்டும், மற்ற வர்களுக்கு அல்லை தொல்லையில்லாமலும், தாங்களும் தங்கள் குடும்பமுமென சீரும், சிறப்புடனும் வாழ்ந்த அவர்களுக்கு பேர் சொல்லவும் ஓர் ஆண்மகனாக ரகு பிறந்து விட்டான். அதன் பின்னர்தான் அவர்களுக்கு வந்தது ஒரு க(ச)தி

ஒருநாள் இரவு திடீரென வீட்டுக்குள் நுழைந்த ஆயுதம் தாங்கிய, இனம் தெரியாத நபர்கள் கேசவனைக் கடத்திக்கொண்டு போனார்கள். மோகனா ஊரெடுக்கக் கூக்குரலிட்டும் ஓடிவந்து தடுக்க, இந்த விசயத்தில் பொது மக்களிடம் என்ன ஆயுதமா இருக்கிறது.? கடத்திக்கொண்டு போனவர்கள் தலைமறைவாகி போனதை உறுதியாக தெரிந்த பின்னர் தான் சம்பிரதாய வழக்கப்படி துக்கம் விசாரிக்க அயலவர்களும், மற்றவர்களும் வீட்டுக்கு வந்தனர். இந்த விசயத்தில் மட்டும் தப்பிக்கொள்ளும் அவர்களை குறை சொல்லவும் முடியாது. ஏனெனில் ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்கள் இதயமுள்ள மனிதர்களை இனங் காண்பதில்லை. அதனால்தான் ஓடிவந்து தடுக்க அவர்களுக்கும் பயம்.

மோகனா அந்த நடுச்சாமத்தில் அழுது, புரண்டும் என்ன பிரயோசனம். ஒரு இடத்திலும் போய் முறையிட முடியாமல் போய்விட்டது. விடிந்ததும் ஒவ்வொரு கேம்பிலும் கணவன் பெயரைச் சொல்லி விசாரித்து அழுதாள். எல்லாக் கேம்பிலும் கேசவனைப் பிடித்ததற்கான பதிவு ஏது மில்லை என்று சொல்லி, கையை விரிக்கிறார்கள். அதற்கிடையில் ஊரின் எல்லையில் ஒதுக்குப்புறமான இடத்தில் பிணம் ஒன்று இருப்பதாக கேள்விப்பட்டு பதறிக்கொண்டு அவ்விடத்திற்கு ஓடிப் போகிறாள். அங்கே பிணமாகக் கிடந்தது வேறுயாருமில்லை- கேசவன்தான்.

ஒருவருட வாழ்க்கையுடன் பொட்டிழந்து, பூவிழந்து, மகிழ்விழந்து, வாழ்விழந்து இருபத்தொரு வயதில் இளம் விதவையானாள் மோகனா. அந்த விதவைக்கு இன்னொரு கலியாணம் எப்படி செய்துவைப்பது என்று தான் தர்க்கம். வாழ்க்கைக்கு அதிஷ்ட மில்லாதபடியால்தான் புருசனை பறி கொடுத்தாள் என்று, இந்தச் சமூகத்திடம் ஒரு தப்பான அபிப்பிராயம். அதனால்தான் மறுவாழ்வுக்கு ஒரு மாப்பிள்ளை கொடுக்க பயப்பிடுகிறார்கள் ஆண்களைப் பெற்றவர்கள். அதுமட்டுமல்ல ஒருத்தனோடு வாழ்ந்தவள், இன்னொருத்தனோடு வாழ்வது முறையல்ல என்பதும் ஒரு சம்பிரதாய வழக்கம்.

மறுநாள் விடிந்ததும் பரவலாக கதையடிபட்டது. மோகனாவையும் வசந்தனையும் காணவில்லையென்று. கூட மோகனாவின் மகன் ரகுவையும் காண வில்லையென்று. அவர்கள் யாருக்கும் தெரியாமல், அந்த ஊரைவிட்டு வேறு ஏங்கேயோ ஓடிவிட்டார்கள்.

இந்தச் செய்தி கேசவனின் தாய்க்கும் எட்டியது. "என்ர மகனை இந்த மானங்கெட்ட குடும்பத்தில் கட்டிக்கொடுத்ததால்தானே அவனுக்கு ஆயுள் குறைந்தது. மகனைப் பறிகொடுத்த என் வயிறு பத்தி எரியுது. மனைவியென பத்தினியாய் இருக்க வேண்டிவளை படிதாண்டி யாரோ ஒருவனோடு ஓட வைச்சிட்டீங்களே. இப்படியொரு அவமானம் வந்த பிறகும் பெத்த தாய், தகப்பன் என்று ஏன் உயிரோடு இருக்கிறியள். நானாயிருந்தாள் நாக்கைப் பிடுங்கி செத்திருப்பேன். இல்லையேல், ஓடிப்போனவளை தேடிப்பிடித்து மகளென்றும் பாராது கொன்றிருப்பேன். மானங்கெட்ட குடும்பம். நீங்கள் நல்லாயிருப்பீர்களா? ஓடிப்போனவள் நல்லாயிருப்பாளா? என்ர மகன் செத்தது போல, அவளுக்கும் ஒரு சாவு வராதா? என மோகனாவின் பெற்றோர்களுக்கு முன்னால் மண் எடுத்துத் திட்டினாள் கேசவனின் தாய்.

விட்ட பேச்சைத் தொடர ஓடிவருவது போல் வந்தாள் வசந்தனின் தாய். "அடியேய், என்ர மகனுக்கு போட்டி போட்டுக்கொண்டு பொம்பிளைகள் தேடி வரும் போது உன்ர வாழாவெட்டியை என்ர மகன்ர தலையில கட்டிவைச்சிட்டியே. வாழ்க்கைக்கு அதிஷ்டமில்லாதவள் அவன்ர உயிரையும் பழிவாங்கப் போகிறாளே. அவள் நல்லாயிருப்பாளா?" என ஓடிப்போன வர்களை கண்டு பிடிக்காததால் வீட்டில் இருந்த சண்முகத்தாருக்கும், மரகதத்திற்கும் தான் பேச்சு விழுந்தது. அவர்களும் மகள் ஓடிப்போவாள் என்று சற்றும் எதிர்பார்க்க வில்லைதான். ஆனாலும் ஓடிப்போனவளை ஊராரைப் போல் திட்டமுடியுமா? மனதார வாழ்த்திக்கொண்டு மௌனமாக இருந் தார்கள்.

வாழ்விழந்தவள் சகுனத்திற்கு கூடாது, நல்ல காரியங்களுக்கு முன்னிற்கக்கூடாது என ஒதுக்கிவிட்ட சமூகத்திற்கு அவள் மீண்டும் ஒரு வாழ்வைத் தேடிவிட்டாளே என்பது தான் பொறாமை.

அடுத்தவன் வீட்டில் ஏதும் தவறாக ஒன்று நடந்துவிட்டால் தன் வீட்டில் தவறாக ஒன்றுமே நடக்காதது போல, அந்தத் தவறை இழிவாக கதைப்பதில்தான் எத்தனை குதூகலம் இந்த சமூகத்திற்கு! அதே போல்தான் வசந்தனும், மோகனாவும் ஓடிப்போன செய்தி அவலாக கிடைத்தது போல வீட்டுக்குள் கூடி நின்றும், வேலிக்கு வேலி தாவி நின்றும் சுவாரசியமாகக் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

முதல் புருசன் செத்திட்டான் என்பதற்காக இன்னொரு கலியாணம் கட்டுவதா? அவனோடு வாழ்ந்ததை மறந்துவிட்டாளா? செத்த புருசனுக்கு இப்படியும் ஒரு துரோகம் யாரும் செய்வார்களா? என செத்தவனுக்காக அனுதாபப்பட்டவர்களும்,

"புருசன் இல்லையென்று கவலை யிருந்தால் அல்லது ஒரு பிள்ளையிருக்கிறதே என்று நினைப்பிருந்தால் ஓடிப்போவாளா? தூ....மானங்கெட்டவள். இவளும் ஒரு பொம்பிளையா" என காறித்துப்பியவர்களும்,

"வேறு இடத்தில புருசனை இழந்தவர்கள் தனியாக இருக்கல்லையா? இவளுக்குத்தானா ஒரு துணை தேவைப்பட்டது" என நையாண்டி பண்ணியவர்களும்,

"புருசன் இல்லையென்று தாய் தகப்பன் அவளை ஒதுக்கியா வைத்தார்கள்? நல்லாத்தானே வைத்துப் பராமரித்தார்கள். அப்படிப்பட்ட தாய் தகப்பன் முகத்தில இப்படி கரியைப் பூசிவிட்டாளே. இவளும் ஒரு மகளா?" என தாய் தகப்பனுக்காகப் பரிதாபப்பட்டவர்களும்,

"தாய் தகப்பன் சரியாயிருந்தால் இப்படி நடந்திருக்குமோ? வசந்தன் வீடு தேடி வந்து கதைக்கும் போது பேசாமல் விட்டுட்டுத்தானே இருந்தவையள். அப்பவே பெடியனை வராமல் செய்திருக்க வேணும். இல்லையேல் பெட்டையின் கையை காலை முறித்து வீட்டுக்குள் விட்டிருக்க வேணும்" என தாய் தகப்பனை குறை சொன்ன வர்களும்,

"இவள் ஒருத்தி சம்பிரதாயங்களை மீறி மறுகல்யாணம் செய்து காட்டிட்டாளே என்று இனி இருக்கும் விதவைகளும் மறுகல்யாணம் செய்தால், இந்த ஊரின் மானம் என்னாவது!" என அங்கலாய்த்தவர்களும்,

"ஓடிப்போனவளை கைகழுவிவிட வேண்டும். இல்லையேல் அவளோடு சேர்ந்து நீங்களும் இந்த ஊரைவிட்டு ஓடி விட வேண்டும்" என பெற்றோர்களுக்கு எச்சரிக்கை செய்தவர்களும், இந்த கிராமத்து சனங்கள்தான்.

இப்படியெல்லாம் கதைத்தவர்கள் வாழ்க்கையில் தவறேதும் செய்ததில்லை. அல்லது இனிமேலும் செய்யப் போவதில்லை என்ற எண்ணமோ? அல்லது சம்பிர தாயங்களையும், சட்டங்களையும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் கண்ணிய மானவர்களோ? ஐம்பது வயதிலும் ஆசைகள் நரைக்காத மானிடர்கள் இருக்கும் போதும், இளம் வயதிலே ஆசைகளை அடக்கி, உணர்வுகளை ஒடுக்கி வாழ்வது மோகனாவுக்கு மட்டும் விதிவிலக்கா? தாலி கட்டியவன் உயிரோடு இருக்கும் போது, மறுவாழ்வு வாழ்ந்தால் அது துரோகம் தான். ஆனால் உயிரோடு இல்லாதவனை வாழ்க்கை பூராவும் நினைத்து வேதனைப்படுவதுதான் நியாயமா? அதுதான் சமூகத்திற்கு சந்தோசமா? இந்தச் சமூகம் ஏன் அவளின் வயதை யோசிக்க வில்லை? உணர்வுகளை மதிக்கவில்லை? எதிர்காலத்தில் அவளுக்கு ஓர் துணை தேவையென்பதை ஏன் உணரவில்லை? அவளுக்கு மறுவாழ்வு கொடுக்க ஏன் இந்தச் சமூகம் முன்வரவில்லை? ஒரு பிள்ளையிருக்கிறதே என்ற குறைபாடோ? இருந்தால்தான் என்ன? இளமையும், உணர்வுகளும் அவளிடம் இருக்கிறதுதானே. ஆகாரத்திற்கும், பணத்திற்கும் தாய் தகப்பனிடம் குறைவில்லாத ஆதரவுதான். இருந்தும் மரணித்துப் போகாத உணர்வுகளுக்கும் அவர்களிடம் சுகம் தேட முடியுமா? யாரோ ஒரு புண்ணியவானுக்கு மனிதாபிமானம் வந்து அவளுக்கு வாழ்வு கொடுத்த போதும் ஏன் இந்தச் சமூகம் ஏற்றுக்கொள்ளாமல் தூற்றிக்கொண்டிருக்கிறது? மனிதனால் மனிதனுக்கு வகுக்கப்பட்ட சம்பிர தாயங்களையும், சட்டங்களையும் கடைப்பிடிக்க வேண்டியது கடமையாயிருந்தாலும் அந்த சம்பிரதாயங்களும், சட்டங்களும் ஒரு மனிதனை உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு பைத்தியங்களாக்கக் கூடியதாய் இருக்க வேண்டுமா? தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களுக்கு சம்பிரதாயங்களை விட்டுக்கொடுக்க இந்த சமூகத்திற்கு ஏன் மனிதாபிமானம் இல்லை.

ஊருக்குள் என்ன கதைத்தாலும் என்ன? ஊரைத்தாண்டிய வசந்தனுக்கும் மோகனா வுக்கும் அந்த ஊரில் நல்ல வரவேற்பிருந்தது. அதனால் எந்த தடையுமில்லாமல் சந்தோசமாக இருந்தார்கள்.

தன்னையும், மகனையும் ஏற்றுக்கொண்ட தற்காக வசந்தனுக்கு நன்றி சொன்ன மோகனாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. அதனைக் கண்ட வசந்தன் மோகனாவை தன்னருகே இழுத்து மார்போடு அணைத்துக்கொண்டான். இதமாக அவள் கூந்தலை வருடிக்கொண்டிருந்த போது மோகனா கேட்டாள், "இந்நேரம் எங்களைக் காணவில்லையென்று ஊருக்குள் என்ன கதைத்துக் கொண்டிருப்பார்கள்?"

அவள் கேட்ட கேள்விக்கு வசந்தன் ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டான். "ஊருக்குள் எங்களைப்பற்றி அப்படியென்ன பெரிசாக கதைக்கப் போகிறார்கள். வீட்டுக்கு வீடு கூடிநின்று எங்களைப்பற்றி இழிவாகத்தான் கதைக்கப் போகிறார்கள். இனி ஏன் அந்த சமூகத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்? "ஊருக்குள் கதைத்ததை நேரில் கேட்டறியாவிடினும் புரிந்து கொள்ளக்கூடியதாயிருந்தது அவனுக்கு.

"அனர்த்தங்களாலும், அநீதிகளாலும் பாதிக்கப்பட்ட இளம் உள்ளங்களுக்கு நாங்கள் ஓர் எடுத்துக்காட்டு. உள்ளங்களையும், உணர்வுகளையும் நசுக்கும் சமூகத்தையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறிந்து அவர்கள் வெளியே வரட்டும். கிராமத்துக்கு கிராமம், ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு என வேறுபட்ட சம்பிரதாயங்கள் இருப்பதை அறியட்டும். எங்களை வாழ விடாத சமூகத்திடம் நாம ஏன் அகப்பட்டு அழ வேண்டும்? எங்கள் கொள்கையை ஏற்றுக் கொண்டு, எங்களுக்கு ஆதரவுதர இந்த உலகில் எங்களுக்கென்று ஒரு சமூகம் இல்லாமலா போய்விடும்?"

"சபாஷ் வசந்தன். உங்கள் கருத்துக்கு என் ஆதரவு" என கைகுலுக்கினாள் மோகனா.

-முற்றும்-

(யாவும் கற்பனை)

---

# இது தப்புங்க...!

-ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்-

## குட்டிக் கதை

உலகையே மறந்து சிந்தனையில் மூழ்கியிருந்தாள் என்னவள். மாலை நேர தென்றல் காற்று..... வாசம் வீசும் பூங்கா, இத்தனையும் எனக்கு எங்கேயோ இருப்பதை (மிதப்பதை) போன்ற உணர்வையூட்டியது.

"ம்" நான் அருகில் வந்ததைக் கூட உணராமல் அப்படியொரு சிந்தனை... ஆச்சரியம்!

சில நிமிட நகர்விற்குப் பின்.... கூப்பிடலாம் என நினைத்தாலும்... அவளின் அழகு என்னை என்னவோ செய்தது. இடை தெரிய உடுத்தியிருந்த "பட்டுச் சேலையிலிருந்து வந்த 'சென்ட' வாசனை என் மூக்கினுள் நுழைந்தது.

நான் கல்லூரியில் படிக்கும் காலங்களில் என் நண்பர்களான பிரகாஷ்... அமுதன்... நடராஜ்.... போன்றவர்கள் "செக்ஸ்"சைப் பற்றி பேசுவார்கள். அவற்றில் நான் தலையிடாவிட்டாலும் அவர்கள் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்பேன். அவர்கள் அன்றொரு நாள் விவாதித்து பேசிய விடயம் இப்போது என் நினைவுக்கு வந்தது. நினைத்ததுமே உடலுக்கு ஒரு விதமான மாற்றத்தை உண்டு பண்ணியது.

அப்படியே அவளை அள்ளியெடுத்து முத்தமிடலாம்... "சே வேணாம்"....நீண்ட யோசனை. இருந்தாலும்....!

மூன்று வருடமாக இவளை காதலிக்கும் நான் ஒரு நாளேனும் தெரியாமல் கூட இவளின் விரல் நுனியைக் கூட தொட்டதில்லை. தொட நினைக்கவு மில்லை. அவள் தொட அனுமதிக்கவு மில்லை. ஆனால்... ஆனால்.... என் உணர்வுகள் கூட இப்போது உசுப்பப் படுகிறதே...."ம்"....

பேச நினைத்த நா கூட பேச அனுமதிக்கவில்லையே.... வெறும் சந்திப்புக் களையும், பேச்சுக்களையும், பார்வை பரிமாறல்களையும் பகிர்ந்து கொண்ட எங்கள் கண்கள்.... என்னடா இது! ஒரு விதமாய்ப் பார்க்கிறதே......!

சிறு இடைவேளை....நொடியில் என்னையறியாமல் என் கரங்கள் அவளைக் கட்டித் தழுவுகின்றன..... அவளின் எதிர்ப்புக்கு மத்தியில் அவளின் இதழோடு இதழ் வைத்து சில முத்தங்கள்...!

"படார்" என் கன்னத்தில் தான்.... திடுக்கிட்டேன்.

"மயூரி..." வலியும்....வெட்கமும் தானே வந்தது....! எழுந்தாள்....!

"என்னங்க...! உங்க புத்தி எங்கங்க போச்சி? உங்களுக்கு இன்னைக்கு என்னங்க ஆச்சி? உங்கள ஒரு உத்தமனா நினைச்சேனே.... ஏவுட்டு எதிர்பார்ப்புல மண்ண அள்ளி வீசிட்டிங்களே... மூணு வருசமா காதலிச்ச நீங்க ஏவுட்டு கைய கூடத் தொடலையே...." நிறுத்தினாள். நான் தலையை கவிழ்த்தினேன்.

> காதல் ஒரு ஆணுக்கு
> விபத்து போன்றது.
> பெண்ணுக்கோ அது
> சரித்திரம்.

"ஏங்க.... நீங்க ஆம்பளைங்க, எந்த தப்பையும் செய்துட்டு பேசாம இருந்துடுவீங்க...!

"ஆனா நாங்க பொம்பளைங்க.... எந்தத் தப்பையும் செய்துட்டு மூடி மறைக்க ஏலாது. ஏன்னா கடவுள் எங்கள அப்படி படைச்சிட்டான்...!" என் அருகில் வந்தாள்.

"பொம்பளைக்கு கற்புபோனா அதற்கு பிறகு என்னாங்க வாழ்க்கை? எங்களுக்குனு தமிழ் பண்பாடு... கலாசாரம் அது இதுனு இருக்கு.... ஆம்பளைய யாரும் கெட்டுப் போயிட்டானு சொல்ல மாட்டாங்க. ஆனா பொம்பளைய....!" கண்ணில் வடிந்த கண்ணீரை துடைத்தாள்.

"இங்க பாருங்க. இனிமே நீங்க வரச் சொல்லுற ஒவ்வொரு இடத்துக்கும் வந்து உங்கள சந்திக்க மாட்டேன். ஏன்னா உங்க நடத்தையிலேயே எனக்கு சந்தேகம். நீங்க காதல உயிரா நினைச்சி என்னயும் உயிரா நினைச்சா.... நல்ல ஒரு நாளயில என்ன பொண்ணு கேட்டு வாங்க.... அதுவரைக்கும் நான் காத்திருப்பேன்...." சொல்லி விட்டு நடந்தாள்.

"காதல் ஒரு ஆணுக்கு விபத்து போன்றது. பெண்ணுக்கோ அது சரித்திரம்." என்று யாரோ ஒரு ஆங்கில புரபெசர் சொன்ன வாக்கியம் என் நினைவுக்கு வந்தது.



"காதலே....இப்படியென்றால் கற்பு..."?

என்னைப் பற்றியே நான் வெட்கப் பட்டேன்.

அவள் வெகு தூரம் போயிருந்தாள். ஆனால் அவளின் சொற்கள் என் இதயக்கல்லில் பதிந்திருந்தது.

நல்ல ஒரு காதலி கிடைத்த நினைவுடனும், நாளையே நல்லதோர் நாள் பார்க்கவேண்டுமென்ற எண்ணத் துடனும் நான் வீடு செல்ல தயாரானேன்!

(வெறும் கற்பனையல்ர)

நகர வலம்

-ஒற்றன்-

# மிருகக் காட்சி சாலையில் மனிதக் காதல்

பெய்யெனப் பெய்யாமல் தான் விரும்பும் நேரத்தில் மட்டும் பூமிக்கு தூவானங்களை தூதுவிட்டுக் கொண்டிருந்தது வானம். இடைக்கிடையே வெய்யிலாகச் சிரித்துக்கொண்டும் இருந்தது.

கொழும்பின் புறநகரில் தெகிவளையில் மிருகக்காட்சிசாலைக்கு முன்னர் நின்று கொண்டிருந்தோம்.

மனிதர்கள் பின்னால் அலைந்து திரிந்து தகவல் திரட்டியது அலுத்து விட்டது.

ஒரு மாற்றத்துக்காக மிருகக்காட்சிச் சாலைக்குள் புகுந்து மிருகங்களை நோட்டமிட்டால் என்னவென்று யோசனை வந்தது.

தெருவோரத்தில் நீண்ட வரிசையில் சனங்கள் காத்து நின்றனர்.

பெரிய புள்ளிகளைக் காத்திருந்து பார்ப்பது போல இங்கு, மிருகங்களைப் பார்க்கவும் கியூவில் காத்திருந்தனர்.

கைவசமுள்ள வண்ண, வண்ண காற்றாடிகளை, காத்திருக்கும் கியூவில் விற்றுவிடும் ஆசையில் வியாபாரிகள் சுற்றிச் சுற்றி வந்தனர்.

நாமும் கியூவில் செருகிக் கொண்டோம்" அம்ப கெடி றுப்பியல் தஹயட்ட பஹய்" மாங்காய் வியாபாரிகள் செவிகளுக்கு செய்தியனுப்பிவிட்டு முகங்களைப் பார்த்தனர்.

நாவு ருசி தேடியது. ஒரு மாங்காய் இரண்டு ரூபாய்க்கு வாங்கி நாவுக்கு வஞ்சகம் செய்யாமல் சுவைக்கக் கொடுத்தோம். மிளகாய்ப் பொடி கலந்திருந்தார்கள். உப்புடன் புளியும் கலந்து நாக்கில் சுள்ளென்று ஏறியது.

உள்ளே போக தலைக்கு பத்துரூபாய் கட்டணம். ஐந்து ரூபாயாக இருந்தால் நல்லதாகப்பட்டது. வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிட்டதால் கட்டணமும் ஏறி விட்டது.

அருகே சிறு சலசலப்பு. மூக்கை நீட்டினோம். வீடியோ கமராவோடு ஒருவர் உள்ளே நுழைய அனுமதி கேட்டு அடம்பிடித்துக்கொண்டிருந்தார்.

காவலாளி தடுத்துக்கொண்டிருந்தார். வீடியோவோடு நின்றவர் நம் மொழிக் காரர். காவலாளி மசிய மறுக்க வீடியோக்காரர் பொக்கற்றுக்குள் இருந்து எதையோ எடுத்தார். நமக்கு திக் என்றது நெஞ்சு. கால நிலை அப்படி. அதுதான் திக். திக்.

ஓடுவதற்கு முன் ஒரு முறை உற்றுப் பார்த்துவிடுவோம் என்று நினைத்துப் பார்த்தோம்.

அவர் எடுத்தது 50 ரூபாய் நோட்டு. கசங்காத புதுத்தாள்.

மெல்ல அதைக் காவலாளியின் கையில் திணித்தார். காவலாளி கடமையே கண்ணாக சுற்றிலும் நோட்டமிட நாம் வேறு புறம் பார்வையைத் திருப்பிக் கொண்டோம்.

வீடியோக்கமராக்காரர் இப்போது உள்ளே வந்துவிட்டார். பணம் பாதாளம் வரை பாயும் என்று சொன்னவன் சத்தியமாக ஒரு அனுபவசாலி.

நாமும் உள்ளே நடந்தோம். மீன் காட்சியகத்தினுள் புகுந்தோம்.



துள்ளிவிளையாடும் மீன்கள். அழகான பெண்களின் கண்கள் போல மனதைக் கொள்ளையிடும் வண்ண மீன்கள் தேடி கண்கள் அலைந்தன.

அதிர்ச்சியாக இருந்தது. மீன் காட்சியகம் பாழடைந்திருந்தது. சில தொட்டிகளுக்குள் தண்ணீர் மாற்றப் படவில்லை என்று தெரிந்தது. மீன் காட்சியகம் என்று சொல்வதைவிட வீண் காட்சியகம் என்று சொல்லலாம். ஆச்சரியம் தரும் அழகு மீன்கள் ஒன்றுகூட இல்லை. மோசமான கவனிப்பு.

துருவக்கரடி ஒற்றையாய் இருந்தார். ஜோடியைக் காணவில்லை. கவலையான நிலமை. 'அவள் பறந்து போனாளே' என்று பாடுவாரோ தெரியவில்லை.

மீன் காட்சியகத்தை விட்டு வெளியே வர சோகம் எம் முகத்தில் பளிச்சென்று தெரிந்திருக்க வேண்டும். வயோதிபர் ஒருவர் வலிய வந்து பேசினார்.

"தம்பி, எட்டு வருடத்திற்கு முன்னர் பேரப்பிள்ளைகளோடு நான் இங்கு வந்திருக்கிறேன். ஆசியாவில் இயற்கை வளம் மிகுந்த மிருகக்காட்சி சாலைகளுள் இதுவும் ஒன்று தம்பி. இன்று கைவிட்டுப் போட்டார்கள்."

பெரியவர் சொன்னது பொய்யல்ல. நமது அலட்சியங்களால் நாட்டின் சிறப்புக்கள் யாவும் சிதைந்து கொண்டிருக்கின்றன.

இன்னொரு விசயத்தையும் பெரியவரே சொன்னார்.

"முன்னர் விடியக்காலையில் எட்டு மணிக்கு வந்தால், நாலு மணிவரை சுற்றிப் பார்ப்போம். ஐந்து மணிக்கு யானை விளையாட்டுப் பார்க்கச் செல்லுவோம். ஆறரை மணிக்குத்தான் வெளியே போவோம். இப்போது இரண்டு மணி நேரத்தில் முழுவதையும் சுற்றிப் பார்த்துவிடலாம்."

பெரியவர் சொல்லிக்கொண்டிருக்க நாம் யோசித்தோம்.

இங்கு பராமரிப்புக்கு வெளிநாட்டுக் காரர்கள் சிலர் பணம் அனுப்புவதாக சொல்லப்படுகிறது. அப்படியானால் அந்தப் பணம் எங்கே போகிறது?

யோசித்தபடி நடக்க, வேக ஓட்டத் திற்கு பெயர் பெற்ற தீக்கோழியார் தெரிந்தார். சோமாலியா அகதி போல பரிதாபமாய் தோற்றம் காட்டினார். இறகுகள் எப்போதோ தொலைந்து போய் இருக்க வேண்டும்.

அடுத்த இடம் போக 'அம்புக்குறி' தேடினோம். தேடியது நமது தவறு. இலக்கம் அழிந்து போய் இருந்தது.

நடந்தோம். பல தொடர் கூடுகள் கலவரத்தால் பாதித்த பகுதிபோல கவலையோடு காட்சியளித்தன. கூடுகளின் கம்பிகள் துருப்பிடித்திருந்தன. சுவர்கள் இன்றோ நாளையோ ஆயுள் முடியும் நிலையில் பழுதடைந்திருந்தன.

குரங்குக் கூட்டின் அருகே சென்றோம்.

முக்கிய அறிவிப்பு கண்ணில் பட்டது. அது அழியாமல் இருந்தது ஆச்சரியம்.

"தயவு செய்து உணவோ வேறெந்தப் பொருட்களோ கொடுத்து தொந்தரவு செய்யவேண்டாம்."

என்று அறிவிப்புச் சொன்னது. மும் மொழிகளிலும் அறிவிப்பு தெளிவாக இருந்த போதிலும் பலர் கவனித்ததாகத் தெரியவில்லை.

தோடம்பழம் வீசி ஏறிய குரங்கார் அதை 'கபில்தேவ்' ஸ்ரைலில் பாய்ந்து 'லபக்' என்று பிடித்தார். அவ்வளவுபசி. ஏன் தொந்தரவு என்று பராமரிப்பாளர் களும் எதுவும் கொடுப்பதில்லையோ தெரியாது.

குரங்குகள் முகத்தில் இனம் புரியாத சோகம். இங்கும் கம்பிகள் துருப்பிடித்து, சுவர்கள் தொல்பொருள் காலச் சுவர் களாய்.... கூரைத்தகரம் விழுந்து ஓட்டையாய்....இதென்ன குரங்குகளும் அகதி வாழ்க்கை நடத்துகின்றனவோ என்று நினைக்க வைத்த காட்சிகள்.

இங்கு மனிதனும் அகதி. மிருகமும் அகதி. கவனிக்கப்பட வேண்டியவை கவனிக்கப்படாமல், கவனிக்க வேண்டிய வர்களே கண்மூடி இருப்பதால் எங்கும் அவலமே பொது நியதியாகி விடுகிறதோ?

நகர்ந்தோம். பறவைகள் இருக்கும் கூடுகள் வெறுமையாய் இருந்தன. ஏதோ சிரிப்பொலி. பறவைகள் சிரிக்குமோ? அதுவும் 'களுக்' என்று சிரிக்க முடியுமோ?

எட்டிப்பார்த்தோம். வர்ணக் குடைகளே கூடுகளாக மாறியிருந்தன. ஜோடிப்பறவைகள் உள்ளே இருந்து உலகை மறந்திருந்தன. மனிதப் பறவைகள் காதல் என்னும் சிறகு கட்டி குடை என்னும் கூட்டுக்குள் வந்து நெருங்கியிருந்து, தொட்டால் பூ மலரும் தொடாமல் காதல் மட்டும் எப்படி மலரும்? என்று பாடும் பறவைகள்.

என்றாலும் முன்பைவிட இப்போதும் காதல் ஜோடிகள் சற்றுக் குறைவாகவே காணப்பட்டார்கள்.

குடைகளுக்குள் தொடர்ந்து சிரிப் பொலிகள். இது மனிதக் காதல் அல்ல. மிருகக் காட்சிச் சாலையில் நடக்கும் காதல் என்பதால் ஏதோ ஒன்று.

நகர்ந்து போன போது பூட்டிய கூட்டுக்குள் இருந்து பல புலிகள் நம்மைப் பார்த்தன. தலைநகரெங்கும் புலிகளைத் தேடுகிறார்கள். இங்கே புலிகளும், சிங்கங்களும் கூடுகளுக்குள் இருந்து நம்மைப் பார்க்கின்றன.

சில புலிகள் மெலிந்திருந்தன. பெரிய பள்ளங்களில் காணப்பட்ட புலிகளும், சிங்கங்களும் ஓரளவு பொலிவாகத் தெரிந்தன.

அந்த இடம் விட்டு அகன்று வந்த நம் மனதை, ஒட்டகச் சிவிங்கிகள் கொள்ளையடித்தன. காண்டாமிருகமும் ஊட்டச் சத்தோடு தெரிந்தது.

முன்பு நல்ல கொழுத்த பாம்புகள் இருந்தன. இப்போது பாம்புகள் தென்படவே இல்லை. பெரிய ஆமைகளும், முதலைகளும் முன்பு ஆச்சரியமாகப் பார்க்கப்படும். இப்போது அவை இருந்ததற்கான அடையாளமே இல்லை.


திடீரென்று மேகத்திற்கு பூமி மேல் மோகம் வர அடை மழையாய்ப் பொழிந்தது. மிருகங்கள் இருக்கவே ஒழுங்கான இடமில்லையாம். நாம் ஒதுங்கவோ இடமிருக்கும்? நனைந்தோம். ஓட்டமும் நடையுமாய் வெளியேறினோம்.

ஆசியாவின் சிறந்த மிருகக் காட்சியகம் இப்போது மெலிந்த காட்சியகமாய் நம்மை வழியனுப்பி வைத்தது.

இப்போது உல்லாசப் பயணிகள் வருகையும் முன்பு போல இங்கு பெரியளவில் இல்லை. வந்து பார்க்க என்ன இருக்கிறது?

கட்டணமாய்க் கொடுத்த பத்து ரூபாய் தண்டமாய் தெரிந்தது. மழையில் நனைந்த செலவு நாளை டாக்டரைப் பார்க்கும் போதுதான் தெரியும். லேசாகத் தும்முகிறது.

**நடிகை ஐஸ்வர்யா பதில்கள் அடுத்த முரசில் வரும்.**



## சிந்தியா பதில்கள்

இந்த நவீன உலகத்தில் ஜாதிகள் இன்னும் ஒழியவில்லையே?

எஸ்.சிவா-நமுனுகுல.

ஜாதி வெறியர்களை முதலில் முறிக்க வேண்டும்.

•

துன்பம் வரும்போது கூட இருந்து உதவுபவர்கள் யார்?

செல்வி. ராதா ராமநாதன்-பூண்டுலோயா.

நெஞ்சில் நேசத்தை சுமக்கும் உண்மை உறவுகள்! உங்கள் நல்ல நேரத்தில் மட்டும் கூட இருப்பது போல் வேசம் போடும் சிலர் துன்பம் வரும்போது தூரவிலகிடுவார்கள்.

### இலங்கையின் சிறந்த விளையாட்டு வீரர் யார்?

நியாயங்கள் எப்பொழுது மறைக்கப்படுகின்றன?

மு.ரஞ்சன் துரைசிங்கம் நோட்டன்.

அநியாயங்கள் எங்கும் இருளாகச் சூழும் போது.

•

நடிகை ரேவதி ஏன் கவர்ச்சியாக நடிப்பதில்லை?

எம்.ஸபீக்-காத்தான்குடி-06.

கதையை நம்பி, கதைக்கு ஏற்ப நடிக்கும் தன் திறமையை நம்பும் நடிகை அவர். பிறகேன் சதையை நம்ப வேண்டும்!

•

கவியரசு கண்ணதாசன், கவிஞர் வைரமுத்து இருவருக்கும் உள்ள சிறப்பு அம்சம் எது?

கே. தர்மராஜ்-கொழும்பு-13.

இருவரும் எவருக்கும் புரியக்கூடிய வகையில் எளிமையாக எழுதுகிறார்கள்.

•

டியர் சிந்தியா! உலக சாதனையாளர்களின் பெயர் பதியும் கின்னஸ் புத்தகம் எந்த நாட்டில் இருக்கிறது?

ஜீ.எம். நாசர்-நுவரெலியா.

வெளியீட்டகம் இருப்பது இலண்டனில்.

•

யாருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்து விட்டு ஆச்சரியப்பட்டிருக்கிறீர்கள்?

சவ்.பா நசார்-குருநாகல்.

ஆர்ஜென்டினாவில் பிறந்து, கியூபாவில் புரட்சி செய்து, பாதுகாப்பு அமைச்சர் பதவியை துச்சமென தூக்கிப்போட்டுவிட்டு, பொலிவியா சென்று புரட்சி நடத்தி புகழ் பூத்தாரே சேகுவேரா...! இறுதிவரை விசுவாசம் மாறாத நட்பக்கும், உறுதிக்கும் எடுத்துக்காட்டான அவரது வரலாறு இன்றுவரை என்னை வியக்க வைக்கிறது. சில நேரங்களில் இதயத்தைக் கனக்க வைக்கிறது.

•

பெண்கள் வெட்கப்படக் கூடாத நேரம் எது?

எஸ்.ஐ.நிலாம்தீன்-கட்டுகெலியாவை.

தம் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டிய நேரத்தில் வெட்கம் அங்கு ஒரு திரையாக விழுந்து மறைத்துவிட பெண்கள் அனுமதிக்கக்கூடாது. என்ன நிலாம்தீன் பதில் திருப்தியா?

•

இளைஞனுக்கு பெண்மீது வேகமாக அன்பு ஏற்படுவது ஏன்?

ஏ.கே.ஏ. நஸார்-கந்தளாய்.

வயது சார் வயது!

•

வாசகர்சாலைக்கு தபால் அட்டையிலா கவரிலா அனுப்பவேண்டும்?

எஸ். உமாப்பிரியா-வத்தளை.

தபாலட்டை போதும்.

•

டியர் சிந்தியா! காதலைப்பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

எம்.டி. வாரிதீன்-பொத்துவில்.

வாழ்க்கை என்னும் ஏட்டில் வசீகரமான ஒரு பக்கம். நான் உண்மைக் காதல் பற்றி மட்டும் சொல்கிறேன்.

•

உண்மையான அன்பு கொண்டவர்கள் எப்படியிருப்பார்கள்?

வி.மாலதி-பண்டாரவளை.

நீங்கள் விழும்போது அழவேண்டும். அணைக்க வேண்டும். எழும்போது மகிழ வேண்டும். தன்னால் நேசிக்கப்படுபவர்கள் உயரும் போது தாமும் உயர்வதாக நினைப்பார்கள்.

•

யாரை நம்பக் கூடாது?

ஏ.நிஸ்பா-மன்னார்.

கூட இருந்து கொண்டே உங்களால் என்ன லாபம் என்று கணக்குப் பார்ப்பவர்களை.

•

முத்தம் எப்போது கசக்கும்?

ஏ.சி.எம்.முஸம்மில்-வட்டதெனிய.

சித்தங்கள் கலக்காத போது.

•

ஒரு எழுத்தாளரின் கோபம் எப்படிப்பட்டது?

இந்து-இரத்தினபுரி.

ஒரு சிறந்த எழுத்தாளனின் இதய கோபம் எழுத்தில் விரிந்து படிப்பவர்களை பற்றிக் கொண்டால் சக்தியாய் மாறும்.

•

பாடகர் ஜேசுதாசின் தாய்மொழி என்ன?

எம்.ராமகிருஷ்ணன்-பண்டாரவளை.

மலையாளம்.

•

ரசிகன் சமூகக் கதை ஒன்று எழுதுவாரா? எமது கோரிக்கை நிறைவேறுமா?

ஆர். நிர்மலா-நீர்கொழும்பு.

கண்ணே மதுமிதாவைத் தொடர்ந்து அடுத்துவரும் கதை அப்படியிருக்கும் என்று ஒரு தகவல்.

•

கல்விக்கு வறுமை தடையா?

பாபு-மூதூர்.

சில சமயங்களில்.

•

இலங்கையில் சிறந்த விளையாட்டு வீரர் யார்?

கே.சரவணன்-கொழும்பு-06.

சிறீனிவாசன். அவருக்குப் பிரிக்கவும் தெரியும் பிய்த்துக்கொண்டு குதிக்கவும் தெரியும்.

•

இலக்கிய நயம்

## கட்டாத பூமாலை தட்டாத பொற்பாவை!

அருமையான பூங்கா; ஒரு இளைஞன் வருகிறான். அங்கே; அன்பினால் ரத்தந் தெறிக்கும் என்பதுபோல் மெல்லிய உடல் கொண்ட பூங்கொடி ஒருத்தி நிற்கிறாள். பயலுக்கு உடம்பு துடிக்கிறது; உள்ளம் தந்தியடிக்கிறது; 'யார் இவள்! தேவலோகத்துப் பொதுச்சரக்காகிய ஊர்வசியோ? அவளுக்கு மேல் அதிகம் பேர்களைச் சந்தித்த ரம்பையோ?' என்றெல்லாம் நினைக்கிறான். பூமியிலே இது போன்ற பெண்ணா, என்று அதிசயிக்கிறான். கடைசியில் கால்களைப் பார்க்கிறான். கால்கள் பூமியிற்பட்டு நிற்கின்றன. அவன் கேட்ட கதையெல்லாம் தேவலோகத்தில் பெண்கள், அந்தரத்திலே சகல காரியங்களும் பார்ப்பார்கள். அவர்களது கால்கள் "நிலம் பாவா" என்பதுதான். ஆகவே, பூமியிற் பாதம் பட்டிருப்பதால் இவள் மானிடப் பெண்தான் என்று தீர்மானிக்கிறான். கிட்டப் போகிறான் இமை கொட்டாமல் பார்க்கிறான்; 'கண்ணே' என்கிறான்; தடுமாறுகிறான், "நான் உன்னை 'லவ்' வுகிறான்; நீ சம்மதி!" என்கிறான். அவள் பேசாமல் போய்விடுகிறாள்; அவன் விரகதாபத்தோடு அலுத்துத் தூங்குகிறான். கனவிலும் அந்தக் காரிகை வருகிறாள். காதல் தருகிறாள். மறைந்துவிடுகிறாள். "இனிப் பொறுப்பதில்லை" என்று பயல் எழுகிறான். ஊரறிய மடல் ஏறி அவளை மணப்பது என்று உவமைக் காவியமாகச் சமைத்திருக்கிறான், காள மேகம்.

பூங்காவிலேயே நிற்கிறாளே அந்த மோகனக்குமாரி, அவளது உருவம் எப்படி இருக்கிறது? அணு அணுவாகப் பிளந்து காட்டுகிறான். கவி வசீகரமாக வார்த்தை களைக் கொட்டுகிறான். அத்தனையையும் அப்படியே வைத்துக்கொண்டு, நாமெல்லாம் நமது மனைவியரிடம் சென்று வர்ணித்தால் அவர்கள் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் தெரியுமா!

"ஏ! பெண்ணே! என் மனைவியே! நீ எப்படி இருக்கிறாய் தெரியுமா? கட்டாத பூமாலை; தட்டாத பொற்பாவை! யாருக்கும் எட்டாத பச்சை இளந்தோகை; கற்பகப் பூமாலையிற் பிறவா வாச வண்டு! வேந்தரிடம் இல்லாத செல்வம்! மேகம் சேராத மின்னல்! படித்துச் சொல்லாமல் தானே பேசும் கிள்ளை; நவரசம்; சுவை பெற்ற தீபம்; தெவிட்டாத தேன்; உதிரப் பூங்கொம்பு; தாபந்தணிக்கும் தனி மருந்து; கலவி என்னும் பதவி தரும் தெய்வம்! ஆகா, வட்டமுகக் கட்டழகுப் பெட்டகமே, வாவே இந்தப் பக்கம்! தாவே ஒரு முத்தம்! மோடி வேண்டாமே மானே! ஜோடிக் காதலர் நாமே! ஆடி மகிழ்வோம் வாடி!"- என்று மனைவியரிடம் பேசிப் பாருங்கள். அன்றைய வாழ்க்கை 'ஜாலியாகவே' இருக்கும்! காளமேகம் பாட்டுடைத் தலைவியைப் பற்றி அவ்வளவும் சொல்கிறான்.

அவளுக்கு எதை உவமை கூறலாமென்றால், பளிங்கு, கண்மணி, கண்ணாடி ஆகியவற்றில் அவளுடைய உருவத்தையே காணலாமன்றி வேறு கூற முடியாது. அங்கம் அங்கமாகச் சொன்னால்...!

> கவியரசு கண்ணதாசன் பழந்தமிழ் இலக்கியங்களில் பரிசயம் கொண்டவர். பற்றும் கொண்டவர். பழந்தமிழ் இலக்கியத்தில் காளமேகம் என்றொரு புலவன். குறும்பு நிறைந்த புலவன். அறிந்த விசயங்களை கரும்புச் சுவைபோல சொல்லும் வித்தகன். அந்த காளமேகம் கவிதை கண்ணதாசன் பார்வையில் பட்டுவிட்டது. இனி நீங்களே படித்து புரிந்து காணுங்கள் சுகம்.

.......காிக்குலத்தின்

நாட்டங்க ளெல்லாம் நடுங்கப் பெருந்தவத்தோர்
கூட்டங் குலைக்கும் குவிமுலையாள்!- நாட்டை
அளவிடும் பச்சைத்துளவோன் ஆலிலையென்றே கண்
வளர இடம் பார்க்கும் வயிற்றாள்!- மாமுலையாம்
கைத்தாளஞ் சுற்றிய நீலக்கயிறு நால்வதென
வித்தார ரோமம் விளங்குவான்- முத்தாற்றில்
வெள்ளஞ் சுழிக்கும் வியன்சுழிபோல் மேதினியோர்
உள்ளஞ் சுழிக்கின்ற உந்தியாள்- தெள்ளியதோர்
வான்படைத்தோன் தன்பதவி மாருதிபெற றால்பின்பு
தான்படைக்கில் உண்டாந் தனிமருங்காள் மீன்பிடித்து
திக்காளுந் தேரோன்றன் தென்றற்கா லங்கழித்தால்
அக்காலந் தேராகும்

ஆகா! யானைகளையெல்லாம் நடுங்கச் செய்யும் தனங்களாம்! மலையை உவமை சொன்ன கவிஞனெல்லாம் செத்தான் போங்கள்! குவிந்த தனங்களாம்! அவன் (சுப்பிரதீபன்) குத்தனம் என்றான்! இவன் அதனை மென்மையாக்கி குவிந்த தனம் என்கிறான். நாட்டை அளந்த மகாவிஷ்ணு படத்துத் தூங்குவதற்காக உள்ள ஆலிலை போல் தோன்றும் வயிறாம்! நம்முடைய கடவுளெல்லாம் இதுமாதிரி உவமையிலேதான் தூங்குகிறார்கள். இவர்களல்லவோ கடவுள்கள்! வயிற்றில் உள்ள ரோமத்தில் தூங்கும் கடவுள்கள்! வாழ்க தோழர் மகாவிஷ்ணு! தனங்கள் இரண்டும்



தாளங்களாம்; அதில் சுற்றிய கயிறு அதிலிருந்து தொங்குவது போல் ரோமம் அமைந்திருக்கிறதாம். ஆற்றில் வெள்ளம் சுழித்துக்கொண்டு ஓடுகிறதே, அது மாதிரி. உந்தியில் சுழியிருக்கிறதாம்! காற்றால் சிருட்டிக்கப்பட்டது போல், உண்டோ இல்லையோ எனக் கூறும்படி உள்ள ஆடையாம்-மம் முதனுக்குத் தேர்த் தென்றலாம். அந்தத் தேர். ஓய்வெடுத்துக்கொண்டால், இவளைத் தேராக உபயோகித்துக் கொள்வானாம்.

அவளைப் பார்க்கிறான் அந்தக் காதலன். பார்த்ததும் எல்லோருக்கும் நியாயமாக என்ன நடக்கும்? உணர்ச்சி மீதூறும்; உடல் சூடேறும் இதுதானே! ஆனால் அவனுக்கு அப்படியல்ல! மெய்தளர்ந்துவிடுகிறது. அடடா! என்ன ஆச்சோ! என்ன எழவோ!

"ஏந்திழையே பூந்தடத்தில் இப்போது பூப்பறிக்க வந்தீரோ; அல்லது மாந்தர் உயிர் பறிக்க வந்தீரோ? கானற்குழல் செய்த சொல்லீர்! உனது கொங்கையைக் குடமாக்கிக் கொண்டு பகவான் கிருஷ்ண பரமாத்மா கூத்தாடுகிறானே! வடமேந்தும் கொங்கை அந்தரத்தில் நிற்கிறதே! நான் கொஞ்சம் சந்தேகத்தை விட்டுவிட்டுத் தாங்கவா? உனது மார்பாகிய கயிலாயத்திலே என்னைச் சேர்த்துக்கொள்ளேன்! உந்தியிலே ஓடையில் எழும் சுழி போல் சுழி தெரிகிறதே, நான் அதில் குளிக்கட்டுமா! நீ என்னை என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன்! பேராசை ஆற்றில் நான் விழுந்துவிட்டேன். உனது தோள் என்னும் கப்பலில் ஏற்றிக் கரை சேர்க்கமாட்டாயா? உனது தனம் என்கிற மலையிலே, எனது நகம் என்கிற எழுத்தாணியால் மன்மத யுத்தம் என்னும் காதல் யுத்தத்தை மகாபாரத யுத்தம் போல் எழுதிக் காட்டட்டுமா? காதல் என்கிற கடலிலே பாய் விரித்து, உனது...... என்னும் படகிலே பயணந் தொடங்கி 'சுகபோகம்' என்னும் தீவிற்குப் போக நான் ஆசைப்படுகிறேன்! பாவையே! நீ நாட்டியக்காரி! நான் நட்டுவன்!" என்று அவளிடம் இன்னும் பலப்பல பேசுகிறான். அவற்றில் அதிகம் சுவையுமில்லை! புதுமையுமில்லை.

இதற்குப் பிறகு மடல் ஊர்வதற்கு முடிவு செய்வதெல்லாம் 'சப்' பென்று இருக்கிறது. ஆகவே, இதோடு சித்திர மடலை முடித்துக் கொள்கிறேன். ■

# தீயவை தீய்ந்திட திட சங்கற்பம் பூணுவோம்

## நவராத்திரி சிந்தனை

-சிவபிருந்தா-

உலகில் வாழும் மாந்தர் அனைவரும் சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காகப் பொதுவான விதிமுறைகளை நமது முதாதையர் வகுத்துத் தந்துள்ளனர். அவற்றை முறை தவறாது பின்பற்றி வருபவர்கள் மாந்தருள் மாந்தராக-ஏன் தெய்வத்துக்குச் சமமாகவே மதிக்கப்படுகின்றனர்.



அன்னையின் வயிற்றிலிருந்து வெளியேறிய காலம் முதல் நாம் பஞ்சபூதங்களின் ஆட்சிக்குட்பட்டே இயங்குகிறோம். ஆரம்பத்தில் தாய் தந்தையரின் வழி காட்டலிலும் பின்னர் ஆசானுடைய அற வழியிலும் தொடர்ந்து, செய்யும் தொழில் தேடி, சுற்றாடல் சூழ்நிலைகளுக்கேற்ப வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கொள்ளுகிறோம். வாழ்க்கைக்கு ஏற்ற துணையையும் தேடி குடும்பம் என்ற இன்பத்தையும் இணைத்துக் கொள்ளுகிறோம்.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் எமக்கு சக்தியின் அருட்கடாட்சம் தேவை. சக்தியின்றி எதுவுமே இயங்க முடியாது. சிவத்தின் இயக்கமே சக்தியாக வெளிப்படுகிறது. இந்தச் சக்தியிடமிருந்தே எமது உடலின் வலிமையைப் பெறுகிறோம்.

எமது உடல் வலிமை பெற்று உள்ளம் தூய்மையடைய சக்தியின் ஓர் அம்சமான துர்காதேவியின் அருள் தேவை. வீரத்தின் பிரதிபலிப்பாக விளங்கும் துர்காதேவி பராசக்தியின் முழு முதல் அம்சமாகத் திகழுகிறாள்.

இதற்காகவே நமது முன்னோர்கள் நவராத்திரியின் முதல் மூன்று நாட்களையும் துர்க்கை-சக்தி வழிபாட்டுக்காக ஒதுக்கித் தந்துள்ளனர்.

சக்தியின் அருள் பெற்று உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்திய ஒருவனால் தான், செம்மையான முறையில் பொருள் சேர்க்க முடியும். தேடிய பொருளை அறத்தின் வழி நின்று செலவிட்டு தன் சுற்றம் சூழ சுகித்திருந்து சிறப்பாக வாழ முடியும். இத்தகைய சிறந்த வாழ்க்கையினைப் பெற சக்தியை செல்வமெலாம் தரும்

## ஆன்மீகம்

இலக்குமியாக வணங்குகிறோம். இலக்குமி செந்தாமரை போன்ற செம்மையின் இருப்பிடமாகக் காட்டப் படுகிறாள். இலக்குமியைத் துதிப்பதற்காக நவராத்திரியின் அடுத்த மூன்று நாட்களையும் ஒதுக்கித் தந்துள்ளனர்.

இறுதி மூன்று நாட்களையும் சக்தியின் அறிவு வெளிப்பாடாக விளங்கும் சரஸ்வதியைத் துதிப்பதற்காக முன்னோர்கள் அமைத்துத் தந்திருக்கின்றனர். கலைகளுக்கெல்லாம் அதிபதியாக கலைவாணியை உருவகித்துத் தந்துள்ளனர்.

பராசக்தியின் அருள்பெற்ற மாநிடன் ஆரம்பத்தில் சிறந்த தேகாரோக்கியமுள்ளவனாக விளங்குகிறான். தனது சக்திக்கேற்ப அதே பராசக்தியின் துணை நின்று செல்வத்தைச் சேர்க்கிறான். ஆனால் அதே மாநிடன் பராசக்தியின் அறிவுக்கடாட்சத்தைப் பெறவில்லையானால் அவனுடைய வாழ்க்கை முழுமையாக அமையாது.

உடல் வலிமை பெற்றாலும் தேடற்கரிய செல்வத்தைச் சேர்த்தாலும் கல்வியால் பெறப்படும் அறிவையோ அல்லது கலைவாணியின் கடாட்சத்தால் பெறப்படும் ஆக்கபூர்வமான சுயசிந்தனையின் ஆற்றலுடன் கூடிய அறிவையோ பெறவில்லை என்றால் முன்னர் பெற்ற உடல் வலிமையாலும் பொருள் தேட்டத்தினாலும் உரிய பயனைப் பெற முடியாது.

வீரத்துக்குரியவளான துர்கையினால் நல்ல உடல் நலத்தையும் உள வளத்தையும் பெறும் ஒருவன் செல்வத்துக்கதிபதியான இலக்குமியின் கடாட்சம் பெற்று பொருளீட்டுகிறான். இதேபோல் ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் நல்கும் கலைமகளின் கருணையினால் அறிவைப் பெற்று அறவழி நின்று வாழ்வாங்கு வாழ்கிறான். அத்தகைய மூன்றும் பெற்றவன் மாந்தருள் மாணிக்கமாகிறான்.

ஆதி பராசக்தியின் ஆற்றல் வெளிப்பாடுகளை எமது முன்னோர் மூன்று தேவிகளாக உருவகப்படுத்தி எமக்குத் தந்துள்ளனர். நவராத்திரி காலங்களில் விரதமிருந்து உரிய முறையில் பூசைகளைச் செய்து சக்தியின் பூரண கடாட்சம் பெற நாம் முயல வேண்டும். வெறும் புறப் பூசைகளை மட்டும் புரிந்து விட்டால்-பிரசாதங்களை உண்டுகளித்து விட்டால் மட்டும் பலனடைந்துவிடலாம் என்று கருதுவது தவறு.

மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் எமது செயல்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

எமது உள்ளத்தில் தோன்றும் தீய சக்திகளை ஒழித்தாக வேண்டும்.

இதற்காகவே நவராத்திரி ஒன்பது இரவுகளிலும் பராசக்தியின் அருளினை வேண்டிப் பெற்றவர்கள், அடுத்தநாள் - பத்தாவது நாளன்று விஜயதசமி என்ற நோன்பினை நோற்று வெற்றி பூசையினை நடத்த வேண்டும். எம்மை இதுவரை ஆட்டிப்படைத்த தீயவற்றை விட்டொழித்து வெற்றி கண்டநாளாக- அன்று முதல் புதிய மனிதர்களாக வாழ்வைத் துவங்குவதற்கான திடசங்கற்பம் பூணும் நாளாக பத்தாவது நாளை நாம் கொள்ளவேண்டும். ■

## மானுடம் சிறக்க மாநபியின் போதனைகள் சில

1. தருமங்களில் மேலானது மக்களுக்கிடையில் சமாதானம் நிலவச் செய்தலாகும்.
2. நீங்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக நடந்து கொள்ளுங்கள். ஒற்றுமையாக நடப்பதில்தான் மகிழ்ச்சி இருக்கிறது.
3. எவர் இனப்பகைமை காட்டியும், குலப்பெருமை காட்டியும் செயற்படுகின்றாரோ அவர் உண்மை முஸ்லிமல்ல.
4. மனிதரில் பிறப்பால் ஒருவரை விட ஒருவர் உயர்ந்தவரல்லர், ஆனால் ஒழுக்கத்தால் உயர முடியும்.
5. இவ்வுலகில் மனிதவர்க்கத்துக்காகச் செய்கின்ற நற் செயல்களே அவனுக்கு மறுவுலகில் கிடைக்கக்கூடிய பலாபலன்களாகும்.
6. மக்களுக்கு நன்றி செலுத்தாதவர் இறைவனுக்கு நன்றி செலுத்த மாட்டார்.
7. நீங்கள் இறைவனை நேசிக்க விரும்புகின்றீர்களா? அப்படியானால் இறைவனது படைப்புக்களை நேசியுங்கள்.
8. எவனிடமிருந்து நன்மையை எதிர்பார்க்க முடியாதோ எவனது தீமையிலிருந்து மக்கள் தப்பமுடியாதோ அவனே உங்களில் தீயோன்.
9. மலர்ந்த முகத்துடன் விளங்குங்கள். அப்படிப்பட்டவர்களையே இறைவன் நேசிக்கின்றான். முகம் சிவந்து கடுகடுப்புடன் இருப்போரை இறைவன் நேசிப்பதில்லை.
10. பிறருடன் உரையாடும் போது, பின்னர் எண்ணி வருந்தத்தக்க சொற்களைப் பேசாதீர்கள்.
11. இன் சொற்களைப் பேசுவதும் ஒருவரின் கேள்விக்குச் சாந்தமாகப் பதிலளிப்பதும் ஒருவகை தருமமாகும்.
12. ஒரு மனிதனுடைய உள்ளத்தை மகிழ்விப்பதும், பசியுடன் இருப்போரின் பசிப்பிணியைப் போக்குவதும், துன்பத்தில் இருப்போரின் துயரத்தை நீக்குவதும், துக்கத்தில் இருப்போரின் இடுக்கண்களைக் களைவதும் மிக மேலான நற் செயல்களாகும்.
13. ஒருவன் தவறு செய்து விட்டாலும் அவனைத் தண்டிக்கத் தகுதியிருந்தும் எவர் மன்னிப்பின் மூலம் கோபத்தை அடக்கி ஆள்கின்றாரோ அவரே மனிதர்களில் மேலானவர்.
14. நெருப்பினால் தண்டனை வழங்க எவருக்கும் உரிமையில்லை. ஏனெனில் நெருப்புக்கு உரிமையாளன் இறைவன்.
15. ஒருவன் கெட்டவன் என்பதற்காக அவனோடு பேசுவதையும், பழகுவதையும் எவரொருவர் நிறுத்திக் கொள்கின்றாரோ அவரே உலகில் மிகவும் கொடியவராவார்.

தொகுப்பு: ஏ.எச்.ஏ.ஹுஸைன்
ஏறாவூர்.

## திருப்பதியில் ஆச்சரியம்! காணிக்கையாக குழந்தை!

திருப்பதி ஏழுமலையானுக்கு உண்டியலில் பலவிதமான காணிக்கைகள் செலுத்தப்படுவதுண்டு.

தங்கம், வெள்ளி, டொலர், கார், மோட்டார் சைக்கிள் போன்றவை காணிக்கையாக வழங்கப்படுவதுண்டு.

இப்போது முதல் தடவையாக ஒரு பெண், தன் குழந்தையைக் காணிக்கையாக வழங்கியுள்ளாள்.

கோவில் மண்டபத்தில் ஆண் குழந்தையை பிரசவித்து, ஒரு பெண் காணிக்கையாக விட்டுச் சென்றுவிட்டாள்.

உடனடியாக தேவஸ்தான நிர்வாகிகள் குழந்தையை மருத்துவ மனைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் அனுப்பிவைத்தனர்.


மருத்துவ மனையில் வேலை செய்யும் ஒரு ஊழியர் இப்போது அக் குழந்தையை எடுத்துச் சென்றுள்ளார்.

பவுர்ணமி அன்று கிடைத்த குழந்தை என்பதால் சந்திரன் போல் பிரகாசிப்பான் என்று கூறி, வெங்கடேசன் எனப் பெயர் சூட்டியுள்ளனர். ■

-விரைவில் - முரசில்-
தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் வழங்கும்
-புதிய தொடர்-
எழுதுபவர் யார்?
விடை அறியும் போட்டியும் உண்டு.

## ஸ்போர்ட்ஸ்

# பழைய ஆட்டக்காரர் போல புதிய ஆட்டக்காரர் இல்லை!



இப்போதெல்லாம் கிரிக்கெட் ஆட்டங்களின் போது நடுவர்கள் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

நடுவர்கள் சிலர் தவறு செய்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

அதே நேரம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களும் முன்பு போல இப்போது இல்லை.

கிரிக்கெட் என்பது கனவான்களின் ஆட்டம் என்று ஒரு காலத்தில் கூறப்பட்டது.

அப்பொழுது ஆடியவர்கள் உண்மையான கண்ணியத்துடன் நடந்து கொண்டார்கள்.

ஆட்டக்காரர்கள் தாம் 'அவுட்' என்று அறிந்தவுடன் நடுவர்களின் விரல் அசைப்புக்குக் காத்திராமல் வெளியேறிவிடுவார்கள்.

பந்து வீச்சாளர்கள் ஆடுபவர் அவுட் என்று தீர்க்கமாகத் தெரிந்தால் மட்டுமே 'ஹௌ இஸ் தட்' என்று குரல் எழுப்புவார்கள்.

ஆட்டத்தின் வேகத்தில் உணர்ச்சிவசப்பட்டு குரலெழுப்புவர் அம்பயரிடம் 'சொறி பொஸ்' என்று மன்னிப்புக் கேட்ட காலம் அது.

பந்தைத் தடுப்பவர்களும் ஒரு பந்தை சரியான முறையில் தாம் பிடித்தால் மட்டுமே நடுவரிடம் முறையிடுவர்.

அது மட்டுமா? நடுவர் தவறாக அவுட் கொடுத்தால் கூட எதிர்க் குழுவின் தலைவரே நடுவரிடம் பேசி ஆட்டக்காரரை திரும்ப அழைத்த சம்பவங்களும் உண்டு.

1961ம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற இந்திய-மேற்கிந்திய தீவுகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த புகிகுந்தோனை சோபாஸ் திருப்பி அழைத்தார்.

அதனால் அப்போதெல்லாம் நடுவர்களுக்கு ஆடுபவர்கள் மீது ஒரு மதிப்பு இருந்தது.

எவ்வித தொல்லையும் இல்லாமல் நடுவர்கள் தமது பணியைச் செய்தனர்.

ஆனால் இன்று ஆட்டக்காரர்கள் பலர் சத்தியமாக அவுட் என்று தெரிந்தால்கூட இடத்தை விட்டு நகர்வது கிடையாது.

பந்துக்கு சம்பந்தமில்லாத தன் உடம்பின் எல்லாப் பகுதிகளையும் தொட்டுக் காண்பிப்பார். அங்குதான் பந்து பட்டதாகக் கூறுவார்.

அதைவிடக் கொடுமை காலைச் சுற்றி 'போல்ட்' ஆனால்கூட எதிரணியின் விக்கெட் கீப்பர்தான் ஸ்டம்பைத் தட்டிவிட்டதைப் போல அவரை ஒரு பார்வை. நடுவரை நோக்கி "ஏனப்பா சரியா பார்த்தியா. உண்மையாகவே அவுட்தானா" என்பது போன்ற பார்வை. நடுவர் தன் விரலைத் தூக்கிக் கொடி தூக்குவது போல காண்பித்தால் மட்டுமே, வேண்டா வெறுப்பாக இடத்தை விட்டு விலகுவார்.




பந்து வீச்சாளர்களே இன்னும் ஒரு படி மேலே நிற்கிறார்கள்.

ஆடுபவரது காலில் பந்து பட்டு விட்டால் போதும். அவர் அவுட் ஆவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கிறதோ, இல்லையோ "ஹௌ இஸ்தட்" என்று குரல் கொடுத்து ஒரு நடனமே ஆடிவிடுவார்கள். நடுவர் அவுட் கொடுக்காது போனால் குடியே மூழ்கிவிட்டது போல் கையைத் தலையில் வைத்துக் கொண்டு வானில் இருக்கும் தேவர்கள், பூமிக்குள் இருக்கும் அசுரர்கள், கூடியிருக்கும் மக்கள் என்று அனைவரிடமும் முறையிடுவர்.

அவருக்குத் துணை அவருடைய குழுவினர்.

அவரைச் சுற்றி நின்று அழுகின்ற பிள்ளையைத் தேற்றுவது போல் தேற்றிக்கொண்டு, நடுவரைப் பார்த்து "பாவி குழந்தையை இப்படிப் பண்ணி விட்டாயே." என்ற பாவனையில் முறைத்துக்கொண்டு நிற்பார்கள்.



நடுவர் பாவம். "ஏதோ தவறு செய்துவிட்டோமோ." என்று கலங்கி நிற்பார். இவற்றுக்கெல்லாம் மேலாக பந்து தடுப்பவர்கள், பந்து தரையில் படாமல் மேலெழுந்தால் போதும் அது ஆடுபவரது மட்டையில் பட்டதா என்று கூடப் பார்க்காமல் பந்தைத் தூக்கி மேலே வீசி 100 மீட்டர் பந்தயம் ஓடுபவர் போல ஓடி நடுவரிடம் முறையிடுவார். நடுவர் மசியாது போனால் மேலே சொன்ன அனைத்தும் நடக்கும்.

நடுவர்களின் நிலை பரிதாபமாக இருக்கும்.

ஆட்டக்காரர்கள் எடுத்ததற்கு எல்லாம் அவுட் கேட்பதால் அவர்கள் மேல் உள்ள மதிப்பும் குறைந்துவிடும்.

அவர்கள் எது சொன்னாலும் ஒரு முறைக்கு இரு முறை யோசித்துத்தான் செயற்பட வேண்டும் என்று நடுவர்கள் நினைப்பார்கள்.

மேலும் இப்போது வசதிகள் பெருகியுள்ளதால் நடுவர்களது பணியும் கஷ்டமாகிவிட்டது.

வெறும் பஞ்சாலான கால்தடுப்பு, கையுறை என்பவை மாறி, புதிது புதிதாக கால் தடுப்புக்கள், கையுறைகள், முழங்கை தடுப்பு, தொடை தடுப்பு என்று பலவகை உபகரணங்கள். அவற்றில் பந்து எங்கு பட்டாலும் மட்டையில் பட்டது போன்ற ஓசை எழும்.

இதில் பந்து எங்கு பட்டது என்பதை, உடனடியாக நடுவர் தீர்மானிக்க வேண்டும்.

இதைவிடப் பெரிய சோதனை வேகப் பந்து வீச்சாளர்களின் புதிய கண்கட்டு வித்தையை சமாளிப்பது. பந்தின் ஒரு பக்கத்தை அப்படியே புதிதாக- பளபளப்பாக வைத்துக்கொண்டு மறுபக்கத்தை பழையதாக்குவது. பந்தில் இருக்கும் தையலை நகத்தால் பிரிப்பது. இவ்வாறு பலமுறைகளால், யானை துதிக்கையை ஆட்டுவது போல, பந்தை காற்றில் நகரச் செய்கிறார்கள்.

இவ்வாறு மணிக்கு 90-95 மைல் வேகத்தில் செலுத்தப்பட்ட பந்தை தடுத்து ஆடுபவர், காலில் பந்தை வாங்கிக் கொண்டால் 5 1/2 அவுன்ஸ் எடையுள்ள பந்து ஸ்டம்பை வீழ்த்துமா, வீழ்த்தாதா என்பதை நடுவர் சில விநாடிகளுக்குள் தீர்மானிக்க வேண்டும்.

அப்படியானால் அவருக்கு எவ்வளவு அனுபவம் வேண்டும்? திறமை வேண்டும்?

அவ்வாறான அனுபவத்தையும் திறமையையும் சகல நாடுகளும் தங்களது நடுவர்களுக்கு கொடுத்திருக்கிறதா என்பது கேள்விக்குறியே.

இந்தத் திறமையும், அனுபவமும் இங்கிலாந்து நாட்டு நடுவர்களுக்கு இருப்பதால்தான் அந்த நாட்டுக்கு ஆடச் செல்லும் எந்தவொரு குழுவும் அவர்கள் மீது குற்றம் சொல்வதில்லை.

ஆக, நடுவர்கள் சிறப்பாக செயற்பட வேண்டுமானால் அவர்களுக்கு உரிய அனுபவத்தையும் திறமையையும் பெருக்கிக் கொள்ள அந்தந்த நாட்டு கிரிக்கெட் அமைப்புக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இப்போது தேவை நியாயமான, நேர்மையான விளையாட்டு முறை.

தரம் குறையாத தங்க-வைர நகைகள்
எழிலூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடர்களை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.

அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பேசி: 436331





# உலக வலம்


நவீன டிசைன்
நவீன ரகம்
தரமான 22 கரட்
தங்க நகைகளுக்கு
மேனி எழில் கூட்டிட
மின்னி மினிர்ந்திட
மூக்குத்தி முதல்
பாதக் கொலுசுவரை
எண்ணிலடங்கா ரகங்கள்
எங்குமில்லாத் தரங்கள்
ஜெயலதா ஜுவலர்ஸ்
79, செட்டியார் தெரு,
கொழும்பு-11
☎ 433257 430599


## இங்கே சூரியன் எங்கே?

சூரியன் மறையாத சாம்ராஜ்யம் சரிந்துவிட்டது.

ஆனால் சூரியன் உதிக்காத பிராந்தியம் இன்னும் இருக்கிறது.

தென் துருவப் பிராந்தியத்தில் ஒவ்வொரு வருடமும் 182 நாட்களுக்கு சூரியனின் ஒளியே தென்படமாட்டாது. இங்கு ஆய்வுகளை மேற்கொள்ளும் நிலையங்கள் 24 மணி நேரமும் மின் விளக்குகளின் உதவியுடன் தங்கள் பணிகளைத் தொடருகின்றன.

இங்குள்ள ஹல்லே ஆய்வு நிலையம் இவ்வாறு தான் 182 நாட்கள்-இரவும் பகலுமற்ற நிலையில் மின்விளக்குகளுடன் காட்சிதரும்.

கவர்ச்சியான அசைவுகளோடு கிறக்கமான இசை பொழியும் பாடகி மடோனா.

மேடையில் நின்றபடியே துரிதமாக ஆடை மாற்றும் தந்திரம் ரசிகர்களை அஸ்திரம் போல் தாக்கி வீழ்த்துகிறது.

இப்போது மடோனா உலகச் சுற்றுலா புறப்பட்டுள்ளார். முதலில் அவர் சென்றது லண்டன் மாநகரம். அடுத்து பாரிஸ். இலண்டனில் 70 ஆயிரம் டிக்கட்டுக்கள் அச்சடித்தார்கள். அத்தனையும் விற்பனையாகிவிட்டன. ரசிகர்கள் ஆயிரக் கணக்கானோர் ஏமாற்றத்தோடு திரும்பினார்கள்.

இலண்டனில் மடோனா இசை நிகழ்ச்சி நடத்துவதால் குளிருக்குப் போர்வை தேவைப்படாது. மேடையில் அத்தனை சூடு.

ஐரோப்பிய நாடுகளுக்கு எல்லாம் மடோனா செல்லப் போகிறார். இசைப்புயல் அள்ளி வீசப் போகும் கவர்ச்சிச் சூட்டுக்காக அங்கெல்லாம் மடோனாவின் ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.



## "என் குழந்தைகளின் குரல் கேட்க வேண்டும்"





## பண்டிகைக் கால பாயாசம்

நவராத்திரி நோன்பு காலம் இது. தொடர்ந்து தீபாவளி பண்டிகை, கௌரி நோன்பு மற்றும் கந்தசஷ்டி விரதம் ஆகிய இந்துக்களுக்கான விசேட காலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. ஆகவே இம்முறை பண்டிகைக் காலத்துக்கேற்ற பாயாசம் செய்யும் முறையினைத் தேர்ந்தெடுத்துள்ளோம்.

**இதற்குத் தேவையானவற்றை முதலில் பார்ப்போம்.**

*சவ்வரிசி- 1/4 கோப்பை*
*சேமியா- 1 அவுன்ஸ்*
*நெய்- 2 மேசைக்கரண்டி*
*முந்திரிப் பருப்பு- 8*
*கராம்பு- 3*
*ஏலக்காய்- 4*
*சீனி- 4 மேசைக்கரண்டி*
*பால்- 2 கோப்பை*
*தேங்காய்ப் பால்- 1/4 கோப்பை*
*கோதுமைத் திரி வற்றல்- 1 மேசைக்கரண்டி*
*குங்குமப்பூ- 1/4 தே. கரண்டி*
*ரோஸ் வாட்டர்- 1/4 தே. கரண்டி*

செய்முறை

சேமியாவை ஒவ்வொரு அங்குல நீளத் துண்டுகளாக உடைத்து 3 நிமிடங்கள் வரை வறுத்தெடுத்துக் கொள்ளவும். சவ்வரிசியைக் கழுவி ஒரு பாத்திரத்தில் 3 கோப்பை நீரைவிட்டு அதனுள் சவ்வரிசியைப் போட்டு அளவான சூட்டில் 20 நிமிடங்கள் வரை வேக வைத்து, முழுமையாக வெந்ததும் அடுப்பிலிருந்து இறக்கி வைக்கவும்.

மற்றுமோர் பாத்திரத்தை அடுப்பிலேற்றி, நெய்யைவிட்டு அதனுள் சேமியாவை சிறிதளவு வதக்கவும். பின்னர் அதனை வடித்தெடுத்து வேறாக வைக்கவும். அதே நெய்யில் முந்திரிப் பருப்பு, கராம்பு, ஏலக்காய் ஆகியவற்றை சிறிதளவு பொரித்தெடுக்கவும். பொரித்துக் கொண்டிருக்கும் போது சவ்வரிசி, சேமியா, முந்திரி வற்றல், பால், தேங்காய்ப் பால், சீனி ஆகியவற்றுடன் 3 கோப்பை நீரையும் விட்டு மூடியினால் மூடிவிடவும். 15 நிமிடங்கள் வரை அளவான சூட்டில் அடுப்பில் இருக்க விட வேண்டும். அடிக்கடி மூடியைத் திறந்து கிளறிவிடவும். இதே காலத்தில் ரோஸ் வோட்டர் மற்றும் குங்குமப்பூவை கலவையுள் இட்டுக் கிளறிவிடவும்.

இதனை 5 பேருக்குச் சூடாகவோ குளிர வைத்தோ பரிமாறலாம்.

"சமையலின் சுவை இந்திய, சிங்கப்பூர் உணவு தயாரிக்கும் வித்தை" என்ற ஆங்கில சமையற்கலை நூலிலிருந்து பிட்டுத் தருபவர் ***திருமதி. சிவபாக்கியம் திலகராஜா.***

